நவ. 14 - 20, 2004 Nov. 14 - 20, 2004
24 பக்கங்கள்
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

16.00
THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்

10/11/2004



# எதிர்பார்ப்பு புஸ்வாணம்!



## ஏமாற்றிய இந்திய விஜயம்!



## அரபாத் மறைவு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் போராட்டத்தை விற்று இனி நிதி உதவிகளை இலங்கை பெறமுடியாது

## அரசபிரசாரத்தை முறியடிக்கும் வகையில் வெளிநாடுகளில் புலிகள் தகுந்த பதிலடி

தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதப் போராட்டம் என்றும் அந்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான – அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளான – தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு என்றும். சர்வதேச சமூகத்துக்கு தமது முழுவளத்துடன் ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டு வந்த பிரசாரம் தற்சமயம் முறியடிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினர் ஐரோப்பிய நாடுகளில் ஒருமாத கால 'திக்' விஜயம் நடத்திய போது அரசின் பிரசாரத்தை தவிடுபொடியாக்கினர்.

''ஒரு மாத காலத்தில் நாம் மேற்கொண்ட பயணத்தின்போது தமிழர் போராட்டம் தொடர்பாக ஐரோப்பிய நாடுகள் கொண்டிருந்த தவறான தப்பபிப்பிராயங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளோம். எதிர்காலத்தில் எம்மையும் எமது போராட்டத்தையும் விற்று, வெளிநாடுகளிடமிருந்து எந்த நிதியுதவிகளையும் இலங்கை அரசு பெறமுடியாத சூழல் ஒன்றை உருவாக்கியுள்ளோம். இது தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ள மாபெரும் வெற்றி'' என்று புலிகளின் உயர்மட்டக் குழுவுக்குத் தலைமைதாங்கிச் சென்ற அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்து வெளியிட்டார்.

கடந்தகாலங்களில் ஆட்சிக்குவந்த அரசுகள், தமிழர் போராட்டம் பயங்கரவாதப் போராட்டம் என்று சித்திரித்தன. போராட்டத்தை நடத்தும் விடுதலைப் புலிகளுக்கு 'பயங்கரவாதிகள்', 'கொலை வெறியர்கள்', மூர்க்கத்தனமானவர்கள்' என்று நாமகரணம் சூட்டி வந்தன. இந்தப் பிரசாரத்தை முன்னெடுத்த முதலாவது அரசு ஐ.தே.கட்சியுடையதுதான். அதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் அந்தப் பிரசாரத்தை உச்ச கட்டத்தில் மேற்கொண்டது. அரசின் பிரசாரத்தை முறியடிக்கக்கூடிய சக்தி அச்சமயம் தமிழ்த் தரப்புக்கு இருக்கவில்லை. தமிழ்த்தலைவர்கள் அரசுக்கு எதிராக பிரசாரத்தை சர்வதேச மட்டத்தில் ஓரளவு மேற்கொண்டனர். எனினும் அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கொண்ட யுக்திகளை தமிழ்த் தலைவர்களால் உடைக்கமுடியவில்லை.

இதன் எதிரொலியாகவே சந்திரிக்கா அரசின் காலத்தில் பாரிய யுத்தம் ஒன்றைத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டது. அரசின் பிரசாரத்தை நம்பிய சர்வதேச சமூகம், யுத்தத்தை நடத்த அரசுக்கு ஆயுத உதவி என்றும், நிதியுதவி என்றும் அள்ளி இறைத்தது. அந்த உதவிகளைப் பயன்படுத்திப் பாரியயுத்தம் ஒன்றை இன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழ் மக்கள் மீது அன்று திணித்தார்.

அந்த யுத்தத்தில் விடுதலைப் புலிகளை அரசால் வெல்ல முடியவில்லை. அரசு வகுத்த வியூகங்களை எல்லாம் தவிடுபொடியாக்கி, இராணுவச் சமநிலை ஒன்றை உருவாக்கினர் விடுதலைப் புலிகள்.



ஜெனீவாவில் நடைபெற்ற புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுக் கூட்டத்தில் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமை வகித்து உரையாற்றுகிறார்.

இக்காலப்பகுதியில் அரசின் பிரசாரத்தை நம்பி அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற வல்லரசு நாடுகள் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்தன. இதில் பெருவெற்றி கண்டவர் தமிழரான லக்ஷ்மன் கதிர்காமர்தான். தமிழ் மக்களுக்கு அவர் ஆற்றிய 'சீரிய' பணி தமிழ் மக்கள் வரலாற்றில் அழியாச் சின்னமாகப் பதிவாகியுள்ளது.

அரசுப் படைகளுக்கும், விடுதலைப்புலிகளின் படை அணிகளுக்கும் இடையில் இராணுவச் சமநிலை உருவாகியிருந்த நேரத்தில், சமாதானக்கரத்தை நீட்டி விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க தெற்கு மக்கள் ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணிக்கு ஆணை வழங்கினர்.

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நடந்த தேர்தல் மூலம், சிங்கள மக்களின் ஆணையுடன் வந்த ரணில் விக்கிரமசிங்க, ஆட்சியில் இருந்த 2 வருட காலத்தில் சமாதானத்தை ஏற்படுத்தப் பல முயற்சிகளை எடுத்து வெற்றிகண்டார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தினார் ரணில் விக்கிரமசிங்க. விடுதலைப் புலிகளுடன் ஆறு சுற்றுப் பேச்சுக்களையும் நடத்தினார். தெற்கில் பலத்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் இந்தப் பேச்சுக்கள் நடந்தன. அந்தக் காலப் பகுதியில் ரணில் அரசு வெளிப்படையாக விடுதலைப்புலிகள் அமைப்பையோ, விடுதலைப் போராட்டத்தையோ விமர்சிக்கவில்லை. ஆனால், மறைமுகமாக விடுதலைப் புலிகள் அமைப்பையே இல்லாதொழிக்க சர்வதேச வலைப்பின்னல் ஒன்றை ரணில் ஏற்படுத்தினார் எனச் செய்திகள் கசிந்தன.

ஜனாதிபதி சந்திரிக்காவுடன் இணைந்து ரணில் செயற்படாத காரணத்தால், ஜனாதிபதி எடுத்த சில அதிரடி நடவடிக்கைகள் நாட்டில் புதிய தேர்தல் ஒன்றுக்கு வழிவகுத்தன. இத்தேர்தல் மூலம் பேரினவாதக் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் கூட்டாக அமைத்த ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்தது.

இந்தக் கூட்டமைப்பு ஆட்சி ஏறி 9 மாதங்கள் கடந்து விட்டன. பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை எடுப்பதாக சர்வதேசத்துக்கு மாயை காட்டிவிட்டு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசாரத்தை தீவிரமாக்கியது சந்திரிகா அரசு.

பேச்சுக்களை விட்ட இடத்தில் இருந்து அதே வடிவத்தில் ஆரம்பிக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் நோர்வே மூலம் தெரிவித்த கருத்தை முதலில் ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி பின்னர் அதிலிருந்து குத்துக்கரணம் அடித்துவிட்டார்.

காலத்தை இழுத்தடிக்கும் நோக்கில், நேரத்துக்கு ஒருதடவை ஒவ்வொரு காரணங்களை சொல்லிக்கொண்டு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசாரத்தை தமது அரசியல் படையணிகள் மூலம் தீவிரமாக்கினார் சந்திரிகா.

இந்நிலையில்தான் தமது உயர்மட்ட அரசியல் குழு ஒன்றை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்ப விடுதலைப்புலிகளின் தலைமை முடிவு செய்தது. சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ள இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க, சர்வதேச சமூகத்தைக் கோரவேண்டிய நிலையில் விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றது.

செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி கிளிநொச்சியில் இருந்து உயர்மட்டக் குழுவின் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் தமது ஐரோப்பிய விஜயத்தை ஆரம்பித்தனர் அன்று இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தில், ராஜதந்திரிகள் பயணம் செய்யும் பாதை ஊடாக ஜெனீவா புறப்பட்டது குழு.

அங்கு நூற்றுக்கு மேற்பட்ட புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் புலிக்கொடியுடனும் தலைவர் பிரபாகரனின் படத்துடனும் காத்திருந்தனர் குழுவினரை வரவேற்க.

''அந்த நாட்டில் எமது உடன் பிறப்புக்கள் எமக்கு அளித்த உணர்வுபூர்வமான வரவேற்பைக் கண்டு நெகிழ்ந்து போனேன்'' என்று பெருமைப்பட்டார் தமிழ்ச்செல்வன்.

புலம்பெயர்ந்த மக்கள் அளித்த வரவேற்பைப் பார்த்து வெளிநாட்டவர்கள் பிரமித்துப் போய் நின்றனர்.

புலிகளின் வருகைக்காகக் காத்திருந்த சுவிஸ் நாட்டின் வெளிவிவகார அமைச்சு



தற்போதைய அரசியல் நிலை மற்றும் எதிர்கால நகர்வுகள் குறித்து மந்திராலோசனை நடத்துவதற்காக ஜெனீவா சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல் குழு அந்தநாட்டின் விமான நிலையத்தில் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

அதிகாரிகள் அவர்களை ராஜதந்திரிகள் செல்லும் பாதை ஊடாகச் சோதனைகள் ஏதும் இன்றி அழைத்துச் சென்றனர். புன்முறுவலுடன் கூடிய வரவேற்பை அவர்கள் அளித்தனர். அங்கு நடந்த மாநாடு தொடர்பாக தமிழ்ச்செல்வன் சொல்கிறார், ''ஒக்டோபர் முதலாம் திகதி உயர்மட்ட அரசியல் குழுவின் மாநாடு ஆரம்பமானது.

''எமது அரசியல் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம், அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் ஆகியோரும் அதில் பங்குபற்றினர்.

''எமது குழுவில் இடம்பெற்ற காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன்' மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மகளிர்துறைத் துணை பொறுப்பாளர் தமிழ்விழி, சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த செல்வி, 'சிரான்' அமைப்பின் பொறுப்பாளர் இரேனியஸ் செல்வின் ஆகியோர் பங்கேற்றனர்.

''எமது சட்டத்துறைக் குழுவைச் சேர்ந்த ஆலோசகர் உருத்திரகுமாரன், சட்ட நிபுணர்களான ஸ்ரீலங்காவின் முன்னாள் சட்டமா அதிபர் சிவாபசுபதி, டொமினிக், பரமசாமி (மலேசிய) மற்றும் பொருளியல் நிபுணர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோரும் அங்கே இருந்தனர்.

குகா

''சர்வதேச மட்ட நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட 'வடக்கு – கிழக்கு' இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு தொடர்பாகவே முதலில் விரிவாக ஆராயப்பட்டது.

''இலங்கையின் அரசமைப்புக்குட்பட்டதாக அந்தச் சபையை நடைமுறைப்படுத்துவதா அல்லது அரசமைப்புக்கு வெளியில் அதனை செயற்படுத்துவதா என்பது குறித்தும் அதற்கான சட்டச்சவால்கள், சட்ட அந்தஸ்து என்பன தொடர்பாகவும் சட்ட நிபுணர்களிடம் ஆலோசனைகளைக் கேட்டோம்.

''இந்தச்சபையைச் செயற்படுத்தும்போது உருவாகும் சட்டச்சிக்கல்களை எவ்வாறு சமாளிக்கலாம் என்று சட்டநிபுணர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

''ஸ்ரீ லங்கா அரசு இந்த வரைவு குறித்து முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வருவதால்' அடுத்த கட்டப்பேச்சு ஆரம்பிக்கும்போது எமது வரைவு சட்டவரையறைக்குள் உள்ளது என்பதை வெளிப்படுத்தக்கூடிய ஆவணம் ஒன்றைத் தயாரிக்கவேண்டிய தேவை குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டது.

''வரைவில் உள்ள ஒவ்வொரு துறையையும் விரிவாக ஆராய்ந்து அவை எதிர்நோக்கும் சட்டச்சவாலைச் சமாளிக்கக்கூடிய வகையில் அறிக்கைகளைத் தருமாறு சட்ட நிபுணர்களிடம் கோரினோம்.

''இந்த மாநாட்டில் கலந்துகொண்ட எமது மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் தற்போதைய நிலையில் மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகள், நகர்வுகள் தொடர்பாக விரிவான விளக்கம் ஒன்றை வழங்கினார்.

''நோர்வே அனுசரணையாளர்களின் பங்களிப்பு, சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பு, ஸ்ரீலங்கா அரசின் இழுத்தடிப்பு ஆகியன தொடர்பாக மதியுரைஞர் விளக்கமளித்தார்.

''தன்னாட்சி அதிகாரசபை வரைவு தொடர்பான சர்ச்சைகளுக்கு எந்த வகையில் தீர்வு காணலாம் என்பது குறித்தும், எதிர்நோக்கும் சவால்களை எவ்வாறு எதிர்நோக்குவது என்பது குறித்தும் அவர் எடுத்துக்கூறினார்.'' – என்றார் தமிழ்ச் செல்வன்.

அங்கு விளக்கமளித்த அன்டன் பாலசிங்கம் பேசுகையில், ''போர் நடந்த நாடு ஒன்றில் அந்தப்போரால் அழிக்கப்பட்ட சொத்துக்கள், உடைமைகள் ஆகியவற்றை மீளக்கட்டி எழுப்புவதுதான் முதல்பணி. அந்தப் பணியை மேற்கொள்ள இடைக்கால ஏற்பாடு ஒன்றை உருவாக்குவதுதான் யதார்த்தம். அந்த வகையில் இடைக்கால ஏற்பாடு ஒன்றை வலியுறுத்தி நாம் வரைவை முன்வைத்துள்ளோம்.

''யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமானத் தேவைகளை பூர்த்திசெய்ய வேண்டியது அவசியம். விரக்திநிலையில் உள்ள மக்கள் மீது தீர்வைத் திணிக்கமுடியாது. அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிய பின்னரே அவர்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ற தீர்வு கிட்டவேண்டும். இது சர்வதேச நியதி.

''இந்த நியதிக்கு முரணாக இலங்கை அரசு செய்யமுடியாது. எனவே, இடைக்கால ஏற்பாட்டை உருவாக்கியே தீரவேண்டிய நிலை இலங்கை அரசுக்கு உள்ளது'' என்று தமது நீண்ட உரையில் சுட்டிக்காட்டினார்.

முதலாவது நாள் பகல் அமர்வு முடிவடைந்த பின்னர் சுவிஸ் வெசிளிவிகார அமைச்சின் தூதர் எஸ்.றொடோல்பே (RODOLPHE) அரசியல் விவகார ஆசிய பிரிவுத் தலைவர் இம்ஹோவ் (IMHOOF) ஆகியோர் புலிகளின் மாநாட்டில் பங்கேற்றனர்.

''தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் பரிமாணம், அதன் வளர்ச்சி, அதன் நோக்கம் தொடர்பாக அவர்களுக்கு விரிவாக எடுத்துக்கூறினோம்.

''இலங்கையில் சமாதானம் நோக்கிய செயற்பாட்டில் உருவாக்கப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலைமை குறித்து விளக்கிக் கூறியதுடன், இலங்கை அரசின் போக்கால் சமாதானத்தில் நம்பிக்கை இழந்து விரக்தியின் விளிம்பில் எமது மக்கள் உள்ளனர் என்ற செய்தியை அவர்களுக்குத் தெரியப்படுத்தினோம்.'' – என்றார் தமிழ்ச்செல்வன்.

எமது மக்களின் மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்திசெய்ய சுவிஸ், உதவிகளை வழங்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினோம் என்றும் அவர் கூறினார்.

அடுத்த நாள் செயலமர்வில் என்ன நடந்தது. என்ன விடயங்கள் ஆராயப்பட்டன. அடுத்த வாரம் பார்ப்போம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பூங்கா

ஒலி இருக்கும் வரை
எமக்கு
சொந்தமானது.

எஸ். வித்தியா,
மூங்கிலாறு.

**உறைந்த கனவுகள்**

வெறுத்துவிட்ட
உலகம்...
வெறுத்துவிட்ட
வாழ்க்கை...
இவை வெறுமனே
எமக்குள்
எழும் மாயம்!
உண்மை தொட்டு
உறவு தொட்டு
உள்ளமதில்
உறுதிகொண்டு
உலகத்தைப் பார்!
உனக்கே இது
விசித்திரமாகத் தோன்றும்.
கனவுகளெல்லாம்
நினைவுகளின்
உச்சி தீண்டும்.
நிம்மதியுடன்
நிறைவிடத்தை
காண்பாய்.
அன்று அறிவாய்
வெறுத்துவிட்ட
வாழ்வு தனில்
மறைந்து கிடந்த
உண்மைகளை!

தமிழன் பன்லூக்கஸ்,
களுத்துறைச்சிறைச்சாலை.

**இனிஎன் செய்வாய்?**

கண்மணியே
உன்னைக் காதலிக்கிறேன்
என்பதற்காக
என்
இதயத்தையா
காயப்படுத்த வேண்டும்?
உண்மையில்
உன்னை - என்
இதயத்தில் வைத்து
இறுகத் தைத்துவிட்டேன்.
இனி என்ன செய்வாய்?

எம். கலைதாசன்,
கிண்ணியா.

**நட்பு**
மனித மனதாலறியும்
மனோ தத்துவம்.
**உறவுகள்**
கால மாற்றத்தில்
வந்து போகும்
குழப்பமான விம்பங்கள்.
**சோதனைச்சாவடி**
கொஞ்ச நேரம் தாமதித்தால்
குட்டியாய் ஒரு
புடவைக்கடை.
**சந்தேகம்**
மருந்து அறியப்படாத
இன்னுமோர் எயிட்ஸ்.

வீ.வசந்தி,
கிளிநொச்சி.

**முயற்சி**

வசதியின்
எச்சத்தில்
வாழவில்லை.
வறுமையின்
உச்சத்தில்
வாழுகின்றேன்.
ஆனபோதும்
மிச்சமாய் உள்ளது
என்னிடத்தில்
முயற்சி.

ஆ. ஆனந்தி,
கிளிநொச்சி.

**மீண்டும் வரும் சொல்ஹெய்ம் ஐயா**

கண்ணீர் வடிக்க
கண்களில் நீர் இல்லை.
கதறி அழ—எமக்கு
சக்தியும் இல்லை.
முடிச்சுக்கட்டி ஓடிவிட
பலமும் இல்லை.
அடைக்கலம் புக
அகதிமுகாமும் இல்லை.
துப்பாக்கிக்கு தீனி போட
எங்களுக்கு புத்திரர் இல்லை.
பீரங்கிக் குண்டுக்கு
காவு கொடுக்க
கணவனுமில்லை.
உடைகளை
பறிகொடுத்ததும் போதும்.
உயிர்களை
பறி கொடுத்ததும் போதும்.
இரத்த ஆறு ஓடியதும் போதும்.
கைதுகளும் போதும்.
சுற்றி வளைப்புகளும் போதும்.
காணாமல் போனோர்
பட்டியல் தயாரானதும் போதும்.
மீண்டும் வரும்
எரிக்சொல்ஹெய்ம் ஐயா
எங்களுக்கு நீங்கள்
பெற்றுத்தர வேண்டும்
நிரந்தரத் தீர்மானம்.

பாபு,
கல்முனை.

**தீபாவளி வாழ்த்துக்கள்**

உணர்வுகள்
மூச்சுவிடுவதால்
இதயம் கனக்கிறது.
உறவுகளின்
நினைவலைகள்
இதய வீணையை
மீட்டும்போது
கண்ணீர்ச் சுரப்பிகள்
தானாகவே
சுரந்துவிடுகின்றன.
எத்தனை தீபாவளிகள்
இந்த வெஞ்சிறைக்குள்
கடந்துவிட்டன?
ஆலய மணி கேட்டு
புத்தாடைகள் அணிந்து
ஆலயம் சென்று வந்து
தாயின்
தாழ்பணிந்தெழுந்து
ஆசிபெற்ற
நாட்கள் கூட
எங்களுக்கு
மறந்துபோய்விட்டன.
தீபாவளி நாளில் கூட
திறப்புச் சத்தம் கேட்டு
காக்கிச் சட்டைகளில்
விழித்து
இறுகிய
இதயவுணர்வுடன்
இவ் இனிய நாளை
கடத்த வேண்டிய
துர்ப்பாக்கிய
நிலையெமக்கு!
உறவுகளுடன
ஒன்றாக அமர்ந்து
உணவுண்ட நாளும்
நண்பர்களுடன்
மகிழ்ந்திருந்த நாளும்
அக்காவின்
குழந்தைகளை
அள்ளிக் கொஞ்சிய
நினைவுகளும்
நினைவினுள்
முள்ளாய்க் குத்துகிறது.
எங்கள்
அன்பான உறவுகளுக்கு
வாழ்த்துச் சொல்ல
ஆசை தான்.
முடியவில்லை.
விலங்கிடப்பட்ட
கரங்களின்
விரல்களுக்குள்
பேனை பிடிக்க
கொஞ்சம்
சுதந்திரம் இருப்பதால்
கவி வரியில்
எங்களினிய
தீபாவளி வாழ்த்துக்கள்.
அடுத்த தீபாவளியாவது
எம்முறவுகளுடன்
மலரட்டும்.

கஸ்ஸடி றொபட்,
களுத்துறை
சிறைச்சாலை.

**அறுவடை அங்குசம்**

விதையாய்
விளை முளையாய்
பதியமாகி
நாற்றங்காற்சாரில்
நீங்கள்
உறங்கிய வேளை,
மண்ணும், நீரும்
உங்கட்கு
போசனை ஆயின.
நீங்கள்
மூக்கு வெடித்து
முகையாக
முறுவலித்தபோது
பசுமை படர்ந்த
பளபளப்பே
பார்வைக்கு விருந்தாகி
படர்நோய்க்கு
மருந்தாகும்
பயன்பாட்டை
உறுதிப்படுத்தின.
ஆனால்,
பருவச் செழிப்பின்
போக்கிலே
பசுமை படர்ந்த
கிளை தோறும்
பருத்த முட் பரம்பல்—அவை
பாற் பற்களாயிருந்தாலும்
வீரியம் பெறும்போது
விடப் பற்களாகும்
என்பதை
நாம் அறிவோம்.
வீறார்ந்த உங்கள்
வளர்ச்சிப் படிம
விளைச்சலிலே
விரியும்
புட்பங்களையும்
விஞ்சும் கனிகளையும்
அறுவடை
செய்ய வேண்டிய
நாம்
அச்சுறுத்தும்
விடப் பற்களைக்கண்டு
அடிமாற மாட்டோம்
அயர மாட்டோம்.
ஆக்கும் கரங்களிலே
அறுவடை
அங்குசத்தைக் கொண்டவன்
அஞ்சவே மாட்டான்.

அனலக்தர்,
ஏறாவூர்—03.

**நினைவின் நெரிசல்**

இரவின்
நிசப்தப் பொழுதுகளில்
மீட்க முடிகிறது
உன் நினைவுகளை
நினைவுகளின்
நெரிசலில்
தொலைகின்ற விம்பங்கள்.
அதனைத் தேடுவதால்
எனக்கில்லை இரவுகள்

என். நிலவன்,
உடையார்கட்டு வடக்கு.

**தெருக்குறள்**

கடவுள் ஒருவரேயெனில்
எப்பெயரில்
உருவில் அழைத்தாலும்
அருள்கிட்டும்.
குறை போக்கவே
வாழ்வின்
பயன் பிறவி
குணம் போக்காரே
சாவிலும்.
தாய்மையின்
தனித்தன்மை
தான் காதல்
கற்பில் நேர்மை
இல்லையே
பெண்மையில்.
அழகு
அழிந்துகொண்டே
இருக்கும்.
ஒழுக்கம்
அழகுபடுத்திக்கொண்டே
இருக்கும்.
உடலால்
வாழ்ந்து கொண்டே
மனிதன்
உள்ளத்தால் வேறு
வாழ்க்கை வாழ்கிறான்.

துசை எட்வேட்,
திருகோணமலை.

**கவி**

நாலுவரிக் – கவி
நான் எழுத
நாடே – தா
நல்ல சேதி

திண்டுவளர்ந்தான்
நல்லூர்.

**வாழ்க்கை**

வலிகளும்
வேதனைகளும்
மனம்
நிறைந்த நாளில்
கண்களில் ஆழம்
குறைந்து போனதால்
வரண்டு போனது
அதன் கரையோரம்.
விதலைகளும்
சில தூர
விடுமுறைகளும்
ஆரம்பமாய்
அரும்பியபோது
அரவணைத்துக் கொண்டது
தேவைகளும்...
அதன் தேடல்களும்
முற்றுப் பெறப்போகும்
தொடர்கதையாய் அல்ல
நம் வாழ்க்கை
முடிவுறாத
முகவுரைகளாய்!

புதியவன்,
யாழ்ப்பாணம்.

**நீ வேண்டும்**

உன் நினைவுகளால்
என் தூக்கத்தைக் கலைக்க
நீ வேண்டும்.
உன் குரலினால்
தொலைபேசியில்
தொல்லை கொடுக்க
நீ வேண்டும்.
என்னைக் கவர்ந்தெடுத்த
உன் விழிகள் கொண்ட
நீ வேண்டும்.
என் இதயம் திருடி
காதல் அவஸ்தைக்குள்ளாக்கிய
நீ வேண்டும்.
நீ வேண்டும்
நீ வேண்டும்.
என்றுமே நீ வேண்டும்.

மஹீஸா,
புத்தளம்.

**காலத்தால் முடியுமெனில்...**

உன் பிரிவை
எதிர்நோக்கி நானும்
என் பிரிவை
எதிர்நோக்கி
நீயுமாய்
பிரிவுப் பாதையில்
நம் காதல் பயணம்!
இருந்தும்...
பிரிவை எதிர்நோக்கிய
எம் பயணம்
முடிவிலியாய்
பாசத்தோடு வளர்கையில்
நம் பாசத்துக்கு
முற்றுப்புள்ளி
வைக்க காலத்தால்
முடியுமென்றால்
எம்மோடு
கைகுலுக்கிக் கொள்ளட்டும்.
இல்லையேல்
எம்மைக் கடைசிவரை
காலமேனும்
கைகோர்க்கச் செய்யட்டும்!

எஸ். நிலா,
கொழும்பு.

**ஜெயிக்க...**

கத்தும் கடலும்
தன் காதலை
கரைக்கு
சொல்லுது பார்...
சொத்தான
தன் காதலியை
அலைக்கரம் கொண்டு
தழுவுது பார்...
காதல் கொண்ட
கரையும்
மண்ணை இழக்குது
பார்...
கடலும் நீரை
இழப்பதனால்
கரையில் மழையும்
பொழியுது பார்...
இழப்புகள் காதலில்
தேவை என
இயற்கையும்
இங்கே
சொல்லுது பார்...
இழப்புகள் காதலில்
இல்லையென்றால்
என்றும்
காதல் ஜெயிக்காது.

சி.சதீஸ்,
வற்றாப்பளை.

**சிந்தனையில்**

என்னருமைத்தோழியே!
சந்தித்த முதல்நாள்
சிந்திக்கவில்லை - நீதான்
என் நண்பி என்று.
சிந்தித்த மறுகணம் - நீதான்
என் உயிர்த் தோழி!
நாமிருவர் கொண்ட
அளவற்ற அன்பை
புரிந்திட்ட போது
பிரிந்திட்டோம் நாம்.
ஆனாலும்,
பிரிந்திட்ட உன் நட்பை
சந்தித்த இடத்தில்
மீண்டும் சந்திக்க
சிந்தித்தேன்.
சந்திக்கும் சிந்தனையில்
தோற்றிட்டேன் தோழி
முடியவில்லையே!
உனை சந்திக்க.....

ச. மேனகா,
வவுனியா.

**தவிப்பு**

அகதியைப் போல்
அலைகிறேன்—உன்
மனதில்
இடம்பிடிப்பதற்காய்.
பிச்சைக்காரன் போல்
கேட்கிறேன்—உன்
காதல் முடிவை.
பக்தனைப் போல்
துடிக்கிறேன்—உன்
தரிசனம் கிடைப்பதற்காய்.
காதலியாய் நீ
வர வேண்டும்—என்
வசந்தத்துக்காய்.

அ.ரவி,
மட்டக்களப்பு.

**புரையோடிப்போன புலம்பல்கள்**

ஏற்றத் தாழ்வுகள்
எங்களுக்கு மட்டுமல்ல
ஏணிப் படிகளில்
ஏறி இறங்கும்
எல்லார்
வாழ்விலும் தான்
படிக்கற்களாய்
பழக்கப்பட்டதொன்று!
இலையுதிர்காலம்
உண்டென்றால்
இளவேனிலும்
ஒரு நாள் திரும்பும்.
இது
எங்களின்
அபிலாசைகட்கு
நாங்களே இட்ட
நம்பிக்கையின்
அடித்தளங்கள்.
பட்டைகள்
குற்றப்பட்ட
ஏழைகள் பட்டியலில்
எங்கள்
வாழ்வு மட்டும்
ஒரு வட்டத்துக்குள்
வடிவாக
வரையப்பட்டுகின்றது.
நாங்கள் மட்டும்
எதிர்காலத்தின் எதிர்வுகளை
சுமந்தபடி எங்களின்
வசந்தங்களைத் தேடி...

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

**உனக்காக**

இரு விழிப் பார்வையால்
பாசப் புயல் வீசி
என்னை உன் இதய
அறையில் பூட்டி
உனை
என் கைதியாக்கியவனே,
உன் தரிசனத்துக்காய்
தினம் நான் தவம் கிடக்கிறேன்.

த.மேரி தர்சினி,
முள்ளியவளை.

**காதல் தவிப்பு**

இசைக்குக் காற்று
சொல்லும் காதல்
சுகமானது.
பூமிக்குச் சூரியன்
சொல்லும் காதல்
சுகமானது.
வண்டுக்குப் பூ
சொல்லும் காதல்
தேனானது.
உனக்கு நான்
சொல்லும் காதல்
தடையானது.
ஓட்டில் ஓடும்
மழை நீரைப் போல்
ஓடோடி வந்தேன்
காதல் சொல்ல.
மூழ்கிப் போன
படகைப் போல்
தாழ்ந்துபோகிறேன்
கண்ணிழந்த
குருடனாய்
காதிழந்த
செவிடனாய்
வாயிழந்த
ஊமையாய்
என்னை இழந்து
காதலால்
தவிக்கிறேன்.

கே.சீலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய்கர்— அந்த விடுதியை விட்டு நிர்மலாவுடன் வெளியே வந்தான். அவன் முகத்தில் குறும்புடன் கூடிய புன்னகை இருந்தது. வெகுநாட்களாக முரண்டுப் பிடித்துக்கொண்டிருந்த பசுமாட்டை அடக்கி விட்ட ஆணவம் இருந்தது. நிர்மலா வாடிய மலராக பாடாத தேனீயாக அவனுடன் சேர்ந்து நடந்தாள்.

''ஜெய்.... என்னை கைவிட்டுட மாட்டீங்களே...! ஜெய் என்ன பேசாமல் இருக்கீங்க.....?''

''என்ன பேசணும்....?

''இல்ல என்னை கை விட்டுட மாட்டீங்க தானே..?''

''உன்மேல் நான் கைவச்சிட்டேன். ரொம்ப நாளா நீ எனக்கு டிமிக்கி குடுத்துக்கிட்டிருந்தே. உன்னை சம்மதிக்க வைக்க நான் பட்ட பாடு... எப்படியோ என் காரியம் வெற்றியா முடிஞ்சிடுச்சி..''

''நீங்க என்ன பேசுறீஞ்க..? என்னை உயிருக்குயிரா காதலிக்கிறதாகவும், என்னையே மணம் முடிக்கிறதாகவும் சத்தியம் செஞ்சீங்களே..''

''கதையை கச்சிதமா சொன்னதாலத் தானே நீ கட்டிலுக்கே வந்தே. வந்தோமோ சந்தோஷமா அனுபவிச்சோமேன்னு இல்லாம காதல், கல்யாணம்னு கணக்குப் பண்ணவாரியே...''

''ஐயோ... நீங்க என்ன சொல்லுறீங்க...?''

''உன்னோட சேர்த்து இருபதாவதுன்னு சொல்லுறேன்''

''அடப்பாவி.. அப்பாவியா பேசி என்னை அழிச்சிட்டியே.. கலகலன்னு இருந்தேன். காதல்வலை வீசி களங்கப்படுத்திட்டியே! பெண்பாவம் உன்னைச் சும்மா விடாது...''

''இங்க பரு நிர்மலா உன்னை மாதிரி கன்னிப் பொண்ணுங்களோட சாபமெல்லாம் என்னை எதுவும் செய்யாது. நீ கோபப்படுறதுல எந்த பிரயோசனமும் இல்லை. ஏதாவது பணம் வேணும்னா சொல்லு, எவ்வளவு வேணும்னாலும் தாரேன். வாங்கிட்டு வாயை மூடிக்கிட்டு போயிடு. வேற எவனாவது ஒருத்தன் மாட்டுவான். அவனை மணம் செஞ்சிக்கிட்டு மனசந்தோஷத்தோட வாழ்க்கையை தொடங்கு. அதுதான் உனக்கு நல்லது... என்ன சரிதானே...?''

நிர்மலா கண்களில் கண்ணீர் வழிந்தோட அவன் முகத்தில் காறி உமிழ்ந்து விட்டு, விடுவிடுவென அந்த இடத்தைவிட்டு வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

அவனுக்கு இதெல்லாம் சர்வசாதாரணமான விஷயமாகும். அவனிடம் இதுவரை சிக்காத மீனே இல்லை. துள்ளியோடும் புள்ளி மானைக் கூட குறிவைத்து மிக லாவகமாக பிடிப்பதில் அவன் கெட்டிக்காரன். பிரபலமான தனியார் வங்கி ஒன்றில் காசாளனாக இருக்கும் அவன் செல்வத்தில் வசதியாகவன். அவன் தாய் வெளிநாட்டில். தந்தை பினான்ஸ் நிறுவனம் ஒன்றில் பங்காளர். பணத்துக்கு பஞ்சமில்லை. வாட்டசாட்டமான கவர்ச்சியா உடலமைப்புள்ள எப்பேர்ப்பட்ட அழகியானாலும் தன் கவர்ச்சியான பேச்சில் மயக்கிவிடும் கைராசிக்காரன். மலர் விட்டு மலர் தாவும் வண்டைப்போல விதவிதமான அனுபவங்களை பெற்றுக் கொள்வதில் அதிக ஆர்வமுள்ளவன்.

ஜெய்கர் ஒருவாரம் வங்கிக்கு போகாமல் விடுப்பில் இருந்தான். அந்த ஒரு வாரத்தில் இன்னொரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் ஷோபாவுக்கு வலை வீசினான். கடைசி நாள் மீன் வலையில் சிக்கியது. தேனைக் குடித்த ஜெய்கர் அடுத்த மானைத் தேட கால அவகாசம் இல்லாமையினால் விடுப்பு முடிய வங்கிக்கு சென்றான். அங்கே அவனுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. ஏற்கனவே அந்த வங்கியில் வெற்றிடமாக இருந்த கணினியாளர் பதவி இதுவரை யாருமே நியமிக்கப்படாமல் காலியாகவே இருந்தது. ஆனால் — அவன் போன போது அங்கே ஒரு அழகு மயில் அமர்ந்திருந்தது. ஜெய்கர் இதுவரை இப்படியொரு அழகியை பார்த்ததில்லை. கண்ணில் ஒத்திக் கொள்ளக்கூடிய அழகு. நல்ல சிவந்த நிறம். ஒல்லியான தேகம். நீண்ட கூந்தல். சிரித்த சின்ன முகம். கண்களை வேறு இடத்துக்கு மாற்றுவது கடினமாக இருந்தது. அவள் பெயர் — கனிமொழி. முக்கனிகளையும் சேர்த்து எடுக்கப் பட்ட பழச்சாறு போல அவள் பார்வையில் சுவை இருந்தது. பேச்சில் றோஜாவின் மணம் வீசியது.

ஜெய்கருக்கு வேலையே ஓடவில்லை. எந்நேரமும் ஓரக்கண்ணால் அவளைப் பார்த்தான். ஆனால், அவள் யாரையும் பார்க்கவில்லை. எவருடனும் பேசவில்லை. தன் வேலையில் கவனமாக இருந்தாள். அவள் அந்த வங்கியில் சூரியனாக இருந்தாள். சூரியகாந்திகளாக இருந்த ஆண்கள் அவளையே சுற்றிச் சுற்றி வந்தார்கள். அவளோ தன் வேலையில் மட்டுமே கவனமாக இருந்தாள்.

ஒருவாரம் ஓடியது. ஜெய்கர் எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டான். என்ன வெல்லாமோ வித்தைகளை கையாண்டான். ஆனால், எதுவுமே கைகூடவில்லை. அவள் அவனை திரும்பியும் பார்க்கவில்லை. அவனுக்கு அவமானமாக இருந்தது. அவன் கண் பட்டவுடனேயே காலடியில் விழுந்த பெண்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால், என்னதான் காவடி எடுத்தும் கனிமொழியின் கடைக்கண் பார்வை அவனுக்கு கிடைக்கவில்லை.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை மாலை நேரம். எல்லோருமே வேலை முடிந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஜெய்கர் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த கனிமொழிக்கருகில் வந்தான்.

''மிஸ்... கனிமொழி உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்..'' கனிமொழி அலட்சியமாக அவனைப் பார்த்தாள்.

''என்ன பேசப் போறீங்க.. வேலை சம்பந்தமாகவா...?''

''இல்ல.. சில சொந்த விஷயமாக பேசணும்...?''

''இங்க பாருங்க மிஸ்டர் ஜெய்கர், இது தொழில் செய்யிற இடம். நாம் வேலை செய்ய இங்கே வந்திருக்கோம். சொந்த விஷயங்கள் பேசறதுக்கு வரல்ல. அதோட உங்களைப் பத்தி நான் நல்லாவே தெரிஞ்சி வச்சிருக்கேன். உங்களால் கசக்கி வீசப்பட்ட நிர்மலாவை ஞாபகம் இருக்கா. அவ என்னோட உயிர்த் தோழி. உங்களால பாதிக்கப்பட்ட அவ மனஉளைச்சலால தற்கொலை செய்யிற அளவுக்கு போயிட்டா. நான்தான் அவளை சமாதானப் படுத்தினேன். இப்போ அவ வேறொரு நல்லவரை மணம் முடிக்கப் போறா. பெண்களை வெறும் கிள்ளுக்கீரைகளா நினைச்சி செயல்படுற உங்களை மாதிரி ஆண்களை நான் வெறுக்குறேன். உங்களை மாதிரி கேவலமான எண்ணங்களுள்ளவங்களோட பேசுறதையே நான் அவமானமா நினைக்கிறேன். தயவு செஞ்சி என்னை வீணா தொந்தரவு செய்யாதீங்க...''

படபடவென பேசிவிட்டு விடுக்கென அந்த இடத்தைவிட்டு வெளியேறிய கனிமொழியை அவமானம் நிறைந்த மனத்துடன் பார்த்தக் கொண்டிருந்தான் ஜெய்கர்.

மேலும் சில நாட்கள் சென்றன. அன்று நடந்த சம்பவத்துக்குப் பின் ஜெய்கர் கனிமொழி பக்கமே திரும்புவதில்லை. அவளை கண்டாலே எட்ட விலகிச் சென்றுவிடுவான். ஆனால், அவன் மனதில் ஒரு வஞ்சம் இருந்தது. தன்னை அவமானப்படுத்திய கனிமொழியை பழிவாங்கக் காத்திருந்தான். அவளை கசக்கிமுகர்ந்துவிட தருணம் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜெய்கர் மறுபடியும்அவளிடம் பேச்சுக் கொடுத்தான். ஆனால் காரியாலயம் சம்பந்தமான விடயங்களை மட்டுமே பேசினான். மேலும் மலர்விட்டு மலர் தாவும்மனதினை சிலகாலம் மாற்றிக் கொள்ள நினைத்தான். இப்போதெல்லாம் அவன் எந்தப் பெண்ணையும் தேடிச் செல்வதில்லை. அவன் குறி முழுவதும் கனிமொழியை நோக்கியதாகவே இருந்தது.

அன்று ஒரு சனிக்கிழமை, கனிமொழி வாடகைக்கு இருக்கும் வீட்டினை ஏற்கனவே அவன் அறிந்து வைத்திருந்தான். அவள் தன் தாய், தந்தை, தம்பியுடன் வசித்து வந்தாள். அப்பா ஓய்வுபெற்ற அரச ஊழியர். நோயாளியான அவர் வீட்டை விட்டு வெளியே செல்வதில்லை. கனிமொழியின் வீடு நகரிலிருந்து ஒதுக்குப்புறமான இடத்தில்தனியாக இருந்தது. வாடகை குறைவாக இருந்தமையினால் அவள் அந்த வீட்டை பிடித்திருந்தாள். அப்பாவின் பென்ஷன் மற்றும் அவளின் சம்பளத்தில்தான் குடும்ப வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது.

ஜெய்கர் — அன்று எப்படியாவது ஏதாவது காரணமொன்றைச் சொல்லி கனிமொழி வீட்டுக்கு சென்றுவிடத்தீர்மானித்தான். ஆனால், என்ன காரணம் சொல்வதென்பது தான் தெரியவில்லை. முதலில் வீட்டுக்குப் போவோம் — பின்பு எதையாவது சொல்லிச்சமாளிப்போமென்று முடிவு செய்தான். ஒரு ஓட்டோவில் அவள் வீட்டை நோக்கிப் பயணமானான்.

அவன் வீட்டை அடையவும் உள்ளே ஒரே சத்தமாக இருந்தது. அவன் என்னவென்று தெரியாமலேயே வீட்டை நோக்கி ஓடினான். உள்ளே கனிமொழியின் தந்தை தரையில் மல்லாக்க விழுந்து கிடந்தார். கனிமொழியின் தாயும், தம்பியும், தங்கையும் அவரைத் தூக்கிக் கொண்டிருந்தார்கள். கனிமொழியைக் காணவில்லை. ஜெய்கர் மனதுக்குள் கடவுளை வேண்டிக் கொண்டான். கனிமொழியின் மனதில் இடம் பிடிக்க நல்லதொரு சந்தர்ப்பம்....

# தண்டனை



பாலா சங்குப்பிள்ளை

''அம்மா நான் கனிமொழியோட ஒண்ணா வேலை செய்யிறவன். காரியாலய விஷயமா இந்தப் பக்கம் வந்தேன். சத்தம் கேட்டு ஓடிவந்தேன். என்ன விஷயம்?''

''ஐயோ தம்பி இவர் திடீர்னு கீழே விழுந்துட்டாரு. இவருக்கு இரத்தழுத்தம் இருக்கு. கனிமொழி டவுனுக்கு போயிட்டா உதவிக்கு யாருமே இல்ல. நல்ல வேளையாக நீங்க வந்தீங்க. உடனடியாக இவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகணும்.''

ஜெய்கர் தாமதிக்கவில்லை.

உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றான். அவருக்கு தீவிர முதலுதவி செய்யப்பட்டது. வெகுநேரம் கழித்து கனிமொழி பதற்றத்துடன் ஓடிவந்தாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. நன்றியுடன் ஜெய்கரை பார்த்தாள்.

''தற்செயலாகத்தான் அந்தப்பக்கம் வந்தேன். வந்தது நல்லதா போயிடுச்சி. பயப்படுறதுக்கு ஒண்ணுமில்ல. சரியான சமயத்துல கொண்டுவந்ததால ஆபத்தான கட்டத்தை தாண்டிட்டாரு...'' என்றான்.

அந்த சம்பவத்துக்குப் பின் கனிமொழிக்கு ஜெய்கர் மேல் நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது. மேலும் ஜெய்கர் முன்னரைப் போலில்லாமல் சற்று மாறியிருப்பதாக அவளுக்குப் பட்டது. எனவே அவள் அவனிடம் சகஜமாக பழகினாள். சாதாரணமாகப் பழகிய அவள் மனதில் மெதுவாக கதால் பூக்கத் தொடங்கியது.

ஜெய்கரும் தான் திருந்திவிட்டதாகவும் இப்போது எல்லாவகையிலும் சுத்தமானவனென்றும் அவளுக்கு காட்டுவதில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டான். ஆனல், தப்பித் தவறியும் அவன் அவளிடம் வித்தியாசமாக பேசுவதை தவிர்த்துக் கொண்டான்.

நாட்கள் ஓடின. கனிமொழி ஜெய்கரை தீவிரமாக நேசிக்கத் தொடங்கினாள். அவன் இல்லாவிட்டால் வாழ்க்கையே இல்லை என்ற அளவுக்கு அவனை காதலிக்க ஆரம்பித்தாள். ஆனால், உள்ளத்திலுள்ளதை வெளியே சொல்லவில்லை. பள்ளத்தில் ஓடும் வெள்ளத்தைப் போல அவளின் காதல் உள்ளம் பொங்கிப் பெருகியது.

ஏற்கனவே சூடுபட்ட ஜெய்கரின் வாயிலிருந்து இனி காதல் என்ற வார்த்தை நிச்சயமாக வராதென்பது அவளுக்குத் தெரியும். எனவே, வாய் திறக்க வேண்டியவள் அவள் தான். அந்த தருணத்துக்காக அவள் காத்திருந்தாள். அன்று வருடத்தின் இறுதிநாள். விடிந்தால் புதுவருஷம். எனவே வங்கியில் ஒரு விஷேட விருந்துக்கு ஏற்பாடாகியிருந்தது.

விருந்து முடிய இரவு ஒன்பது மணியாகியிருந்தது. ஜெய்கர் தன் நண்பனொருவனின் காரை எடுத்துவந்திருந்தான். இருட்டாகிவிட்டதால் தன்னை வீட்டில் கொண்டுபோய் விடுமாறு கனிமொழி கேட்டிருந்தாள். ஜெய்கர் அவளையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். ஜெய்கர் காரை ஓட்ட அவள் முன்புறம் அமர்ந்திருந்தாள். ஒருவரும் சிறிது நேரம் பேசவில்லை.

கனிமொழி தயக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.

''ஜெய்கர் உங்ககிட்ட முக்கியமான விஷயமொன்னு பேசணும் இப்ப பேசலாமா...?''

''ஓ தாராளமாக பேசலாமே....!''

''வந்து இது சொந்த விஷயம்....''

''உங்களோட சொந்த விஷயமா?''

''இல்ல ரெண்டு பேரோட சொந்த விஷயம்..''

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க..?''

''நான் ஒரு பெண்ணுன்னுற வெட்கத்தை விட்டு உங்ககிட்ட பேசுறேன். என்னோட உள்ளத்தில உள்ள அதே எண்ணம் தான் உங்க மனசுலயும் இருக்கும்னு நினைக்கிறேன். வந்து... நான் உங்களை மனசார நேசிக்கிறேன். உங்களையே மணமுடிக்க விரும்புறேன். அன்னைக்கி நான் எதும் தப்பா பேசியிருந்தா மன்னிக்கணும். அறியாம பேசிட்டேன்.''

ஜெய்கர் — சட்டென காரை பாதை ஓரத்தில் நிற்பாட்டினான். கனிமொழியை அலட்சியமாகப் பார்த்தான்.

''மிஸ் கனிமொழி; நீங்க என்னை தப்பா நினைச்சிட்டீங்கன்னு நினைக்கிறேன். நீங்க வேணும்னா என்னை காதலிக்கலாம். ஆனால், நான் எந்த தப்பான எண்ணத்துலயும் உங்ககிட்ட பழகலை. அதிலும் நான் யாரையும் நேசிக்கிறதாவோ, கல்யாணம் பண்ணிக்கிறதாவோ இல்லை. நான் ஒரு சுதந்திரப் பறவை. நீங்க அழகா அம்சமா இருக்கீங்க. நீங்க விரும்பினா வேணும்னா ஒரு நாளோ ரெண்டு நாளோ இல்ல இந்த நிமிஷத்துல வேணும்னா உல்லாசமா இருக்கலாம். அப்புறம் நான் யாரோ நீங்க யாரோ.

(06 ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐடியா...




அடடா... நல்ல ஐடியாவாக இருக்கிறதே..! இனிமேல் இடம்பெயர்ந்து ஓட வேண்டிய நிலை ஏற்பட்டாலும் எதற்கும் ஒரு பழைய வாகனத்தை வாங்கி இப்படி ஒரு நடமாடும் வீடாக மாற்றி வைப்பது நல்லது.

# கண்ணாமூச்சி



மேலே உள்ள படத்தின் மையப்புறத்தில் வட்டமான ஒரு பகுதி இருக்கிறதா? அந்த பகுதியை இமைவெட்டாமல் 20 விநாடிகள் உற்றுப் பாருங்கள்? என்ன தெரிகிறது? மையப்பகுதி அசைகிறதா? நன்றாகப் பாருங்கள். அசையோ அசை என்று அசையும்...

# ஓவியச் சிரிப்பு



# குறும்பு

பிரசவ காலத்தில் தாயாரின் வயிற்றில் குழந்தை ஊர்வதும் - உதைப்பதும் தாயாருக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி... சுகமோ சுகம்.
அதற்காக இந்த குழந்தை இப்படியா உதைவது? கால் அடையாளம் வயிற்றில் தெரியும் வரை...!



# ஜோக்ஸ்

அமெரிக்கர், இங்கிலாந்துக்காரர், இலங்கையர் ஆகிய மூவரும் ஒரு ரயிலில் பயணம் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

அவர்கள் செல்ல வேண்டிய இடம் வந்துவிட்டது. இந்த நேரத்தில் அமெரிக்கர் என்ன செய்வார்? தன்னுடன் வந்த தனது மனைவியைக் கூடக் கவனிக்கமாட்டார். தனது பெட்டி - படுக்கைகளை எல்லாம் மறக்காமல் எடுத்துக் கொண்டு விறுவிறென்று ரெயிலை விட்டு இறங்கி வீட்டை நோக்கிச் செல்வார்....





இங்கிலாந்துக்காரர் என்றால்... தனது பெட்டி படுக்கைகளை மறக்காமல் எடுத்துக் கொண்டு... தனது மனைவியையும் மறக்காமல் கூட்டிக் கொண்டு வீட்டுக்குப் போவார்.

இலங்கையரென்றால் தனது பெட்டி படுக்கைகளைப் பற்றிக் கவலைப்படமாட்டார். தனது மனைவியைப் பற்றியும் கவலைப்படமாட்டார். தன்னுடன்வந்த யாராவது அவர்களது மனைவியை மறந்து போய் விட்டுப் போய் விடுகிறார்களா என்று கவனித்து அவர்களைக் கூட்டிக் கொண்டு வீட்டுக்குப் போவார்.

# சர்வதேச நீரிழிவு தினம் சிறப்பிதழ்



சாமந்தி டீ சில்வா

நவம்பர் 14 ஆம் திகதி சர்வதேச நீரிழிவு நோய் தினமாகும். இத் தினத்தையொட்டி நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதில் முதன்மைச் சிகிச்சை நிலையமாகத் திகழும் Ceylinco Diabetes Centre இந்நோய் தொடர்பான பல விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதோடு நவம்பர் மாதத்தை நீரிழிவு மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

நீரிழிவு நோய் தொடர்பாக Ceylinco Diabetes Centre இன் சிரேஷ்ட வைத்திய அதிகாரி சாமந்தி டீ.சில்வா கூறுகையில்:-

"இலங்கையில் ஏற்படுகின்ற மரணங்களுக்கான முதன்மைக் காரணிகளில் நீரிழிவு நோயும் ஒன்று. இலங்கைச் சனத்தொகையில் பதினான்கு சதவீதத்தினரும் மேல்மாகாணத்தில் இருபது சதவீதத்தினரும் இவ் வருடம் இந் நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

"2005 ஆம் ஆண்டளவில் இச்சதவீதம் மேலும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு உள்ளதோடு உலகளாவிய ரீதியில் சுமார் இருநூறு மில்லியன் பேர்கள் இந்நோய்க்கு உள்ளாவர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

"நீரிழிவு நோய் ஒரு அமைதியான நோய். எவ்வித நோய் அறிகுறிகளும் இன்றி மூன்று தொடக்கம் நான்கு வருடங்கள் வரை இந் நோய் காணப்படும்.

"இந்நோயினால் ஏற்படும் சிக்கல்களே நீரிழிவு நோயைக் கண்டுபிடிக்க உதவுகிறது.

"உயர் இரத்த அழுத்தம், இதய நோய், கண்பார்வை இழப்பு, நீறை குறைதல், சிறுநீரகம் செயலிழத்தல் போன்றவை நீரிழிவு நோய் உள்ளதென்பதற்கான அறிகுறிகளாகும்.

இந்நோய் பற்றிய போதுமான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் இல்லாமையே இந்நோய் அதிகரிக்கக் காரணம்.

"இந்நோயை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்திவிட ஒவ்வொருத்தரும் தொடர் வைத்தியப் பரிசோதனைகளை மேற் கொள்ள வேண்டும்.

இந்நோய்க்கான சிறந்த சிகிச்சையும் ஆரம்பப் பரிசோதனைகளையும் எமது நிலையம் வழங்கிவருகின்றது.

"இது தவிர Diabetology, Cardiology, Ophthalmology, Neurology, Hephrology, Dermatology Diet Nutrition போன்ற சிகிச்சை முறைகளையும் நாம் வழங்கி வருகின்றோம்.

"இந்நோய் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் பொருட்டு இம்மாதம் 14 ஆம் திகதி நீரிழிவு நோய் பற்றி ய கருத்தரங்கு ஒன்றையும் நாம் ஏற்பாடு செய்துள்ளோம். டிசம்பர் மாதம் டாக்டர் சோமசுந்தரத்தினால் தமிழ்மொழி மூலமான கருத்தரங்கு ஒன்றும் நடத்தப் படும்" இப்படி அவர் கூறினார்.






நவம்பர் 14 உலக நீரிழிவு தினமாகும். செலிங்கோ டயபிட்டீஸ் சென்ரர் இம்மாதத்தில் தனது சகல விதமான நீரிழிவு நோய் சிகிச்சைகளுக்கும் 10% விசேட கழிவை வழங்குகின்றது.

மேலதிக தகவல்களுக்கு 2 39 29 29 அழையுங்கள்.

உலக நீரிழிவு தினம்
14 நவ.

ceylinco diabetes centre
நாம் தடுப்போம், நாம் காப்போம்

6வது மாடி, செலிங்கோ ஹவுஸ்,
69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.
மின்னஞ்சல்: diabetes_centre@ceylife.lk
இணையம்:www.ceylincodiabetes.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

நவம்பர் 14 – 20, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

## அழிவிலிருந்து நாடு மீளுமா?

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் முதலாவது பட்ஜட் இவ் வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.

அரசின் பட்ஜட் எப்படி இருக்கப் போகிறது என்பதற்கு கடந்த சில வாரங்களாக நாட்டில் நிகழ்ந்து வரும் சம்பவங்கள் கட்டியம் கூறி வருகின்றன.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கப்போவதாக கூறிக் கொண்டு பதவிக்கு வந்தவர்கள் சம்பளத்துக்குப் பதிலாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரித்துக் கொண்டு செல்கின்றனர். அரிசி, பருப்பு, சீனி, பால்மா, காஸ், பெற்றோல், மின்சாரம், தண்ணீர், பஸ் கட்டணம் என்று விலை உயராத பொருட்களே இல்லை.

அத்தியாவசியப் பொருட்களுக்கு உரிய மானியங்களை வ்ழங்கமுடியாமல் இருப்பதால் உயர்ந்துவரும் வாழ்க்கைச்செலவைக் கட்டுப்படுத்த முடியாது என கைவிரித்து விட்டார், வர்த்தக வாணிப நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே.

இந்த அரசு ஆட்சிக்குவந்து ஏழு மாதங்கள் கழிந்துவிட்டன. விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அரசு தடுமாறுவது நன்கு தெரிகிறது.

அத்துடன் கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் கூட போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமல் இடைநிறுத்தப்பட்டுவிட்டன. ரூபாவின் பெறுமதி மோசமான நிலையை அடைந்துவிட்டது. அந்நிய செலாவணி கையிருப்பும் வீழ்ச்சி கண்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் குறைந்திருந்த வாழ்க்கைச் செலவுப் புள்ளி இந்த அரசு பதவி ஏற்ற பின்பு 12.1 சதவீதமாக அதிகரித்துள்ளது. தற்போதைய நிலைமை தொடருமானால் நாட்டின் விவசாய, கைத்தொழில் துறைகளில் பெரிய பாதிப்பு ஏற்படப்போகிறது.

ஜனாதிபதியோ இது குறித்து கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஜனாதிபதியின் கவனம் எல்லாம் நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றி சட்டத்துக்கு முரணாக தமக்கு வாய்ப்பாக புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதும், தனக்கு தற்போதுள்ள அதிகாரங்களை நீடித்துக் கொள்வதும் ஆகும். இதற்காக மாற்றுக் கட்சியினரை வளைத்துப் பிடிப்பதிலேயே தற்பொழுது கூடிய நாட்டம் காட்டப்பட்டு வருகிறது.

ஜே.வி.பியினர், ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் ஒரு சிறிய விலை உயர்வுக்கும் பெரும் ஆர்ப்பாட்டங்களையே நடத்தி வந்தனர். தமது கூட்டமைப்பு பதவிக்கு வந்தால் விலைவாசிகள் இறங்கும் என்று வாய் ஜாலம் காட்டிவந்தனர். ஆனால், இன்று அவர்கள் என்ன செய்கிறார்கள்? கப் சிப் என்று இருக்கிறார்கள்.

பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து மீள்வதற்கு தற்பொழுது அரசிடம் ஒரு வழி மட்டுமே இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து அதனை சரியான பாதையில் நகர்த்திச் செல்வது தான் அது.

டோக்கியோ உதவிவழங்கும் நாடுகள் மாநாட்டில் இணக்கம் காணப்பட்ட 45 ஆயிரம் கோடி ரூபாவை இதன் மூலமே அரச பெறமுடியும்.

இந்த அரசு பதவிக்குவந்தவுடன், நோர்வே அனுசரணையாளர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தது இதனையெல்லாம் கருத்தில் கொண்டுதான். ஆனால் பேரினவாதிகளின் பிடியில் இருந்து ஜனாதிபதி மீளமுடியாத நிலையில் இருந்து வருகிறார்.

தற்பொழுதும் காலம் கடந்து விடவில்லை. இதய சுத்தியுடன் ஜனாதிபதி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பாரானால் நாடு பொருளாதார அழிவில் இருந்து மட்டும் அல்ல, போர் அழிவில் இருந்தும் தப்பிப் பிழைத்து விடும். ஜனாதிபதி செய்வாரா?

# புஸ்வாணமாகிவிட்ட எதிர்பார்ப்புக்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்க வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட முக்கிய சந்திப்பு கிளிநொச்சியில் எந்தவிதமான முன்னேற்றமும் இன்றி முடிவடைந்துள்ளது.

ஜனாதிபதி தனது முன்னைய நிலைப்பாட்டில் இருந்து சிறிதாவது இறங்கிவரவில்லை.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தேசியத் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திப்பதற்காக வியாழன் தீபாவளி தினம் கிளிநொச்சி புறப்பட்ட சமயம், ஜனாதிபதியிடமிருந்து முக்கியமான ஒரு செய்தி ஜான் பீற்றர்சனால் புலிகள் தலைவருக்கு எடுத்துச் செல்லப்படுவதாக பலரும் நம்பினர்.

ஊடகங்களும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டிருந்தன.



ஆனால், இந்த எதிர்பார்ப்புக்கள் எல்லாம் புஸ்வாணமாகி விட்டன.

ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை. முன்பு எதனைச் சொன்னாரோ அதனையே ஜனாதிபதி திரும்பவும் சொல்கிறார்.

இடைக்கால நிர்வாக ஏற்பாடு எதுவும் இறுதித் தீர்வின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும் என்பதே ஜான் பீற்றர்சனிடம் ஜனாதிபதி இறுதியாக சொல்லி அனுப்பிய தகவல். அதாவது இடைக்கால நிர்வாகம் குறித்தும் இறுதித்தீர்வு குறித்தும் ஒரே சமயத்திலேயே பேசப்படும் என்பதுதான் அது.

இதனைச் சொல்வதற்கு இப்படி ஒரு முக்கிய சந்திப்புத் தேவையா?

ஜனாதிபதியின் நிலைப்பாடு மாற்றமடையாத நிலையில் புலிகள் தற்போது ஜான் பீற்றர்சனிடம் மாற்று யோசனை ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி உள்ளனர்.

ஜான் பீற்றர்சன் கொழும்பில் ஜனாதிபதியை மீண்டும் சந்தித்து புலிகளின் மாற்று யோசனையைத் தெரிவிப்பார்.

பாலஸ்தீன தலைவர் யாஸீர் அரபாத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்ள கெய்ரோ செல்வதற்கு முன்பு ஜான் பீற்றர்சன் புலிகள் தரப்புக்கு ஜனாதிபதியின் பதிலைத் தெரிவிப்பார் என்று நம்பப்படுகிறது.

### நம்பிக்கை தந்த அகாஷி விஜயம்

கடந்த வாரத்துக்கு முதல்வாரம் ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி கிளிநொச்சி சென்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் மற்றும் புலிகள் பிரதிநிதிகளையும் சந்தித்தபோது சமாதானப் பேச்சில் நிலவும் முட்டுக்கட்டையை நீக்கும் யோசனை ஒன்றை அகாஷி மூலம் ஜனாதிபதி புலிகளிடம் தெரித்துள்ளார் என்று தகவல்கள் வெளிவந்தன. அதாவது, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றிய பேச்சுக்களை மட்டும் புலிகளுடன் நடத்த ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. புலிகளின் கோரிக்கையும் அதுதான்.

ஜனாதிபதி தனது நிலைப்பாட்டில் இருந்து நேரத்துக்கு நேரம் மாறுவதால் புலிகள் இதனை நோர்வே மூலமாக அறிவிக்குமாறு கிளிநொச்சியில் வைத்து அகாஷியிடம் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பான நோர்வேயின் அறிவிப்பு ஒன்று வெளிவரும் என்று எதிர்பார்க்கப்பட்டு வந்த நேரத்திலேயே நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் ஆகியோரின் கொழும்பு விஜயம் இடம் பெற்றது. லண்டனில் இருந்து மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் வந்தார்.

ஒரு புறம் தேசியத் தலைவர் பிரபாகரன், மதியுரைஞர் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோடும் மறுபுறத்தில் ஜான் பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்ம், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர், நோர்வே வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி கோல் பிறிலியன் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பின் முடிவுகளை நோக்கும் போது ஜனாதிபதி மீண்டும் குத்துக்கரணம் அடித்து விட்டார் என்றே நம்பப்படுகிறது.

ஜனாதிபதி மீது புலிகளும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் வைத்திருந்த அவநம்பிக்கை மற்றும் ஒரு தரம் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் கிளிநொச்சி செல்ல முன்னர் கொழும்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களைச் சந்தித்த போது ஜனாதிபதி மீது தமக்கு உள்ள அவநம்பிக்கையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் வெளிக்காட்டி இருந்தனர்.

''இனப்பிரச்சினையை இதய சுத்தியுடன் தீர்ப்பார் என்பதில் எமக்கு ஜனாதிபதி மீது நம்பிக்கை இல்லை. சமாதான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் ஜனாதிபதி உறுதிப்பாட்டுடன் இருப்பவர் போன்று தெரியவில்லை. தனது தனிப்பட்ட அரசியல் நலன்களை எட்டுவதற்காக தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை வைத்துக் கொண்டு அதன்படியே அவர் செயற்படுகிறார்'' என்று தமிழ்தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவித்திருந்தனர்.

அதுதான் தற்பொழுது நடைபெற்றுள்ளது. ஜனாதிபதி மீண்டும் ஒரு தடவை நிலை தடுமாறிவிட்டார்.

-சஞ்சாரன்-

# ஏமாற்றம் தந்த இந்திய விஜயம்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க பல்வேறு எதிர்பார்ப்புக்களுடனும், நம்பிக்கையுடனுமே இந்தியாவுக்கு சென்றார். ஆனால், ஜனாதிபதியின் நோக்கம் நிறைவேறவில்லை. எதிர்பார்ப்புகளை விட ஏமாற்றமே அதிகம்.

இழுபட்டுக் கொண்டிருக்கும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சை மேலும் இழுத்தடித்துக்கொண்டிருக்கின்றார் ஜனாதிபதி.

இப்படியான ஒரு சூழ்நிலையில் ஜனாதிபதிக்கு கைகொடுத்து உதவ மூன்றாவது தரப்பு ஒன்று தேவைப்படுகின்றது.

இந்த மூன்றாவது தரப்பாகவே ஜனாதிபதி இந்தியாவை தேர்ந்தெடுத்து காய் நகர்த்தினார். இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வதில் பெரும் ஆர்வம் காட்டினார்.

இந்திய இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி மற்றும் இராணுவ உயரதிகாரிகள், ஆலோசகர்கள் இங்கு தொடர்ச்சியாக வந்து சென்றனர்.

இந்திய உயர் அதிகாரிகளும் இவ்வாறு கண்ணோட்டம் விட்டுச் சென்றனர்.

இலங்கைக்குத் புதிய இந்தியத் தூதுவராக வந்துள்ள நிருபமாராவ் அண்மையில் திருகோணமலைக்குச் சென்று திரும்பினார்.

தண்டனை
சிறுகதை தொடர்ச்சி
18 ஆம் பக்கத்தில்.

இவை அனைத்திற்கும் பின்னரே ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க தனது இந்திய விஜயத்தை மேற்கொண்டார்.

இந்தியாவில் ஆளும் கட்சியாக இருக்கும் சோனியா காந்தியின் தலைமையிலான காங்கிரஸுடன் ஜனாதிபதி, குடும்ப நண்



பரைப்போல் காட்டிக் கொள்பவர்.

தனது தாயாரின் காலத்தில் இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோதே இரு குடும்பங்களுக்கும் இடையிலான உறவுபலமானது என்றும் அடிக்கடி கூறுவார் ஜனாதிபதி சந்திரிகா.

இந்தப்பின்னணியை வைத்துக்கொண்டு இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தை மிகவும் இலகுவாக செய்து கொள்ளலாம் என்ற இறுமாப்புடனேயே ஜனாதிபதி இந்தியாவுக்குப் பறந்தார்.

ஆனால் நிலைமையோ தலைகீழாக மாறிவிட்டது. இலங்கையில் உள்ள தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒட்டு மொத்தமாகப் பாதுகாப்பு உடன்படிக்கைக்கு எதிராகக் குரல் எழுப்பிவிட்டன.

அதேபோன்று தமிழ்நாட்டிலும் அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை வன்மையாகக் கண்டித்தன.

இப்படியான நிலையில் தான் இலங்கை இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் தட்டிப் போய்விட்டது. ஜனாதிபதியும் வெறும் கையுடனேயே நாடு திரும்பிவிட்டார்.

அதைவிட ஒரு முக்கியமான விடயம் ஒன்றையும் இங்கு குறிப்பிட வேண்டும். அதாவது ஜனாதிபதி இந்தியாவில் இருக்கும்போது இடம் பெற்ற இந்திய மீனவர்களின் படை எடுப்பு ஜனாதிபதிக்கு ஒரு சவாலாகமட்டுமல்ல அச்சுறுத்தலாகவும் அமைந்துவிட்டது.

மீனவர்களின் படையெடுப்பு ஒருபுறம் சேது சமுத்திரத்திட்டம் மறுபுறம் ஜனாதிபதிக்கு திரிசங்கு நிலையை ஏற்படுத்திவிட்டது.

இப்பொழுது நோர்வே சமாதானத் தூதுவர்களின் முயற்சியும் கைகூடவில்லை. இதுவரை அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனுடன் மட்டும் பேச்சை நடத்தியவர்கள் இம்முறை ஜனாதிபதியின் ஆலோசனைகளுடன் தலைவர் பிரபாகரனையே சந்தித்துப்பேசினர்.

ஆனால், ஜனாதிபதி பழைய குருடி கதவைத்திறடி என்பது போல் புதிதாக எதையுமே கூறவில்லை. இதனால் ஜனாதிபதி மீண்டும் இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி சிந்திக்க ஆரம்பித்துவிட்டார். கை கூடுமா?

-சரா கோகுலன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஸ்டர் வேதாளம்



விழமையான ஆர்ப்பாட்டம் எதுவுமில்லாமல் சைலண்டாக தரை இறங்கினார் வேதாளத்தார். எமக்கு முன்னால் நின்ற அவரிடம், எமது மேசையிலே இருந்த தீபாவளி பலகாரத் தட்டை நகர்த்தி, "எடுத்துக் கொள்ளும்" என்றோம். எடுத்து கொறிக்கத் தொடங்கினார்.

"சரி, சாப்பிட்டுக் கொண்டே கொண்டு வந்த விஷயங்களை கொட்டுமேன்!" என்றோம்.

"ஜமாதாணப் பேஜ்ஜுக்கள்... தொளர் பாக..." என்று தொடங்கினார்.

"பொறும்.. பொறும்... முதலில் பலகாரங்களை ஒரு வெட்டு வெட்டி விட்டு பிறகு ஒழுங்காகப் பேசும்... அல்லது பேசி விட்டு பலகாரத்தைச் சாப்பிடும்" என்றோம்.

பலகாரத் தட்டை பார்த்து காலிபண்ணி விட்டுத் தொடர்ந்தார்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக மர்மமான சில முன்னேற்றங்கள் இருப்பதாகப் பேசிக் கொள்கின்றார்கள். ஆனால் எவர் வாயிலிருந்தும் எதனையும் கறக்க முடியவில்லை" என்றார்.

"இதைச் சொல்லத்தான் இவ்வளவு தூரம் வந்தீரோ?" என்றோம்.

"இது விடயத்தில் அவசரமான அறிவிப்புக்களை விட அம்மா தரப்பு ஆளாய்ப் பறக்கிறதாம். ஆனால் புலிகள் தரப்பு பிடி கொடுப்பதாக இல்லையாம்...."

"அப்படியென்றால் இணக்கப்பாடு ஒன்று வந்து விட்டதோ?"

"வந்த மாதிரித்தான் என்று பேச்சு... ஆனால், அது பற்றிய முடிவை, தலைவர் மாவீரர் தினத்தில் தனது உரையில் நறுக்குத் தெறித்தால்போல் தெரிவிக்கப் போகிறாராம்... ஆனால்...." என்று இழுத்தார் வேதாளத்தார்.

"ஆனால் என்ன ஆனால்..., நீரும் நறுக்குத் தெறித்தால் போல் விஷயத்தை போட்டு உடையுமேன்.." என்றோம் நாம்.

"அதற்கு முன்னர் - அதாவது தலைவரின் உரையை உலகமே எதிர்பார்க்கும் அளவுக்கு ஒரு பிரபல்யத்தை ஏற்படுத்தவிடாமல் - தனது வாயால் முடிவுகளை வெளிக்கொணர அம்மா அவசரப்படுகிறாராம்.

"அப்படியென்றால் தலைவரின் பேச்சில் வெளிப்படும் கருத்துக்களை அதற்கு முன்னரே சொல்லி பெயரை தட்டிக் கொள்ள அவசரப்படுகிறார் என்று சொல்லும்."

"ஆம், கிட்டத்தட்ட அப்படித்தான்... ஆனால், அது விடயத்தில் ஆற அமர.. உறுதியான சில உறுதி மொழிகளை பெற்றுக் கொள்வதில் புலிகள் உறுதியாக நிற்கிறார்கள். தலைவரின் உரையை சாதாரண அரசியல் வாதிகளின் உரைகளை போல் அந்த தினத்தில் மட்டும் சொல்லிவிட்டு இருக்க அவர்கள் விரும்பவில்லையாம். எனவே பேச்சுக்களா?... அப்படி என்றால் எல்லாவற்றையும் முடிவுக்கு கொண்டு வருவோமா என்ற உறுதியான நிலைப்பாட்டுக்கு வர அவர்கள் முடிவு எடுத்துவிட்டார்கள். இனியும் இதோ - அதோ என்று எதனையும் இழுத்தடிக்க அவர்கள் விரும்பவில்லையாம். இம்முறை தலைவரின் உரையால் உறுதியான முடிவு என்ன என்பது தெரியவருமாம்.."

அதற்காகத்தான் தற்போது துரித நடவடிக்கைகளோ?"

"ஆம். வெளிநாட்டு சுற்றுப் பயணம் செய்த குழு வெளிநாட்டவர்களின் மன நிலையை நாடிபிடித்துப் பார்த்து விட்டு வந்து சொல்லிஇருக்கிறதாம். நோர்வே தரப்பிடமிருந்து அரசின் நிலைப்பாடு பெறப்பட்டிருக்கிறது. இவைகளை வைத்து நாடுதிரும்பியுள்ள மதியுரைஞருடன் ஆலோசனை நடக்கிறது. மாவீரர் தின செய்தியில் அவை வெளிப்படுமாம்...."

"அப்படியா! சரி... அடுத்து இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் என்ன புஷ்வாணமாகிவிட்டதோ...! இனி எப்போ... கைச்சாத்தாகுமாம்?"

"அது முடிந்துபோன கதை. அப்படியான நோக்கம் சிந்தனை எல்லாவற்றையும் கைவிட்டுவிட்டதாம் இந்தியா" என்றார்.

"என்ன..? போனவாரம் அதனை இலங்கை அரசு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப் போவதாகக் கூறினீரே!"

"ஆமாம், ஆனால் அது சும்மா காலத்தைக் கடத்த சொல்லப்பட்ட கதையாம். ஒப்பந்தம் கைச்சாத்தானால் ஏற்படும் விளைவுகள் பற்றி விலாவாரியாக விளக்கிய பெருமை வைகோவைச் சாருமாம்.

"அப்படியா! சிறை சென்று வந்தும் அவர் அடங்கவில்லை பாரும்."

"ஆம், அதாவது இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் சிறந்தது; செய்யப்பட வேண்டியதுதான். ஆனால், தற்போது அதனைச் செய்தால் அதனை ஆதாரமாக வைத்து புலிகளை சண்டைக்கு இழுத்து - இந்தியாவுடன் சேர்ந்து அவர்களைப் பலவீனப்படுத்த இலங்கை அரசும் முயலும்... அதற்கு இந்தியா உதவக் கூடாது. ஒரு சமாதான சூழல் வந்து... எல்லாம் அமைதியான பின் இந்த ஒப்பந்தத்தை செய்தால் - இரு நாடுகளுக்கும் இது சாதகமாக அமையும் என்று விளக்கி வைத்தாராம்.. அதனையடுத்து அந்த கோப்பு தூக்கி தூரப்போடப்பட்டு விட்டதாம்."

"ஓஹோ! அப்படியா சங்கதி?"

"அடுத்து..., சிவப்பு சட்டைக் கட்சியும்... தேரர்களின் கட்சியைப் போல் சின்னாபின்னப்பட்டுவிடக்கூடிய சாத்தியப்பாடுகள் ஏற்பட்டுவிட்டனவாம்."

"ஏன் என்ன நடந்தது..?"

"வெளிநாட்டிலிருந்து வந்த அதன் தலைவர் ஒருவர் அந்த கட்சியை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர விரும்புகிறாராம். ஆனால், ஏனைய தோழர்கள் அதனை எதிர்க்கிறார்களாம்... அதனால் அங்கே சின்ன கசமுசாவாம். இந்த கசமுசாவைப் பயன்படுத்தி அந்தக் கட்சியை சில்லபல்லமாக்க சில பெரிய கட்சிகள்... பெரிய பெரிய பெட்டிகளில் பணக் கட்டுக்களுடன் சுற்றிச் சுற்றி வருகின்றனவாம்" என்று சொன்ன வேதாளத்தாரின் கடைசி வார்த்தைகள் தூரத்திலே கேட்டன.

# வீழ்ச்சி அடையும் பி.ஜே.பி அடுத்த கட்டம் என்ன ?

இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் பிரதமர் வாஜ்பாய் முன்கூட்டியே லோக்சபாத் தேர்தல்களை அறிவித்தபோது பி.ஜே.பி. தொண்டர்களின் உற்சாகம் உச்சத்தில் இருந்தது. ஆனால், பத்துமாதங்களுக்குப்பின் இப்போது கட்சி விரக்தியின் விளிம்புக்கு வந்து விட்டது.

அண்மையில் நடந்துமுடிந்த மகாராஷ்டிர மாநிலத்தேர்கல்களில் கட்சி வென்றிருக்க வேண்டியது; ஆனால், தோல்வியே கிடைத்தது; அதைவிடப் பெரிய தோல்வி சரத்பவார் கட்சிக்கும் காங்கிரஸுக்கும் இடையில் மகாராஷ்டிராவில் அரசமைப்பதில் ஏற்பட்ட இழுபறி சுமுகமாகத்தீர்ந்ததே.

காங்கிரஸைவிட அதன் கூட்டாளியான சரத்பவார் கட்சி 3 இடங்களை கூடுதலாகப் பெற்றதால் முதல்வர் பதவி தனது கட்சிக்கே என சரத்பவார் உரிமை கோரியும் சோனியா காந்தி கடைசிவரைவிட்டுக்கொடுக்கவில்லை.

சரத்பவார் தான் வளைந்து கொடுக்க நேரிட்டது.

சரத்பவார் – காங்கிரஸ் இழுபறியில் சரத்பவார் வென்றால் பி.ஜே.பி தனது தோல்வியிலும் ஒரு வெற்றியை பெற்றதாக நினைத்திருக்கலாம். ஆனால், சோனியா தரப்பு வென்றது பி.ஜே.பிக்கு நல்ல செய்தி அல்ல. அதாவது தனது கூட்டாளிக்கட்சிகளை சோனியா வெகு லாவகமாக கையாள்கிறார் என்பதே அந்த கெட்ட செய்தி.

ஒரு புறம் தி.மு.க போன்ற தமிழக கூட்டாளிகள் கேட்பதற்கு எல்லாம் வளைந்து கொடுக்கிறார்; மறுபுறமோ சரத்பவார் போன்ற ஆபத்தான ஒரு கூட்டாளியை இறுக்கிப்பிடித்து தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகிறார். இரண்டுவாரம் எடுத்தது மகாராஷ்டிராவில் புதிய அரசு அமைய. முதல்வர் பதவி சரத்பவார் கட்சிக்கா காங்கிரஸுக்கா என்ற சர்ச்சையே காரணம். சோனியா விட்டுக் கொடுப்பார்; விட்டுக் கொடுப்பது அவரது அரசியலின் இன்றியமையாத உத்தி என்றே பலரும் எண்ணினர். ஆனால், எல்லோரும் மூக்கில் விரல் வைக்கும் விதமாக சரத்பவரை பணிய வைத்தார் சோனியா. காங்கிரஸ் கட்சிக்குள் மட்டுமல்ல கூட்டணிக்கட்சிகளிடையே கூட அவரது செல்வாக்கு ஆழமாகச் செல்கிறது என்பது தெளிவாகியது.

தேர்தலில் வெல்லமுடியாத வயிற்றெரிச்சலில் இருந்த பி.ஜே.பிக்கு இது புண்ணிலே புளிப்பற்றியது போல. இது எல்லாம் சேர்ந்து



வாஜ்பாய்

கட்சியை அதிதீவிர இந்து மதவாதத்தை மீண்டும் நாடவைக்கும் என்று தெரிகிறது.

1990 களில் அத்வானி அயோத்திக்கு நடத்திய ரதயாத்திரை கட்சியின் செல்வாக்கு அதிகரிக்க முக்கிய காரணம். அதேமாதிரி ஒரு ஜெகஜாலவித்தையை அத்வானி நடத்த மாட்டாரா என கட்சி ஏங்குகிறது. ஆனால் வாக்காளர்கள் இந்தப் பழைய உத்திகளுக்கு எடுபடுவரா என்பதே கேள்வி.

பீகார், உத்தரபிரதேசம் ஆகிய பெரிய மாநிலங்களில் பி.ஜே.பி காங்கிரஸை விட வெகுவாக முன்னிலையில் இருந்துவந்தது.

1998 லோக்சபாத் தேர்தலில் பி.ஜே.பி 52 லோக்சபா இடங்களை உத்தரப்பிரதேசத்தில் வென்றபோது காங்கிரஸால் ஒரு ஆசனத்தைக்கூடப் பெறமுடியவில்லை. இன்றோ பி.ஜே.பி 10 ஆசனங்களும் காங்கிரஸ் 9 ஆசனங்களும் என்ற நிலைவந்துவிட்டது.

இப்போது பீகாரில் பி.ஜே.பி எம்பிக்களைவிட காங்கிரஸ் எம்பிக்களின் எண்ணிக்கை அதிகம். ஆந்திரா, தமிழ்நாடு, மேற்குவங்கம் ஆகிய மற்ற குறிப்பிடத்தக்க பெரிய மாநிலங்களில் முறையே பி.ஜே.பி 7,4,2 ஆசனங்களை வெல்லத் தொடங்கியது. இந்த தேர்தலில் அது மீண்டும் பூஜ்யமாக மாறிவிட்டது. கட்சி தெளிவாகவே தடுமாறுகிறது. வாஜ்பாய் என்ற தனிமனிதரைக் காட்டி வெல்வோம் என்ற பி.ஜே.பியின் ஆணவமே தோல்விக்குப் பிரதான காரணம்.

பாரம் பரியமாக இளைஞர் கூட்டம் பி.ஜே.பி ஆதரவாளர்களாகவே இருந்துள்ளனர். ஆனால், சமீகாலமாக இளம்வாக்காளர்கள் காங்கிரஸ் பக்கம் சாயத் தொடங்கியிருப்பது முக்கியவிடயம் . வயதானவர்கள் பெரும்பாலும் காங்கிரஸ் ஆதரவாளர்கள். இவர்களுடன் இளைஞர்களும் சேர்ந்துவிட்டதால் பி.ஜே.பியின் வாக்கு வங்கி வங்குரோத்து நிலையிலுள்ளது. இப்போதைக்கு பி.ஜே.பிக்கு உள்ள ஒரே ஆயுதம் இந்துத்வாவே. ஆனால் பி.ஜே.பி ஒருபோதும் இந்தியாவை ஆண்டிராதகாலத்தில் இந்து வெறி வாக்காளர்களை பி.ஜே.பியிடம் ஈர்த்

## பக்கத்து வீடு

ததுபோல் இனி நடக்குமா? 'பி.ஜே.பி ஒரு முறை ஆண்டுவிட்டது – பி.ஜே.பி ஆட்சி என்றால் என்ன?' என்பது வாக்காளருக்குத் தெரிந்து விட்டது.

இந்தநிலையில் பழைய உத்தி கைகொடுக்குமா என்பது சந்தேகமே. தவிர கட்சிக்குள் பதவிப்போட்டி வேறு தொடங்கிவிட்டது.

அத்வானி, வாஜ்பாய் இருவருக்கும் வயதாகிவிட்டதால் அடுத்த பெரும் தேர்தல் போரைச்சந்திக்க இவர்கள் இருக்கமாட்டார்கள் என முடிவுகட்டிக்கொண்டு இரண்டாம்



சோனியா

மட்டத்தலைவர்கள் தலைமைப்பதவிக்கு அடிபடுகிறார்கள்.

மீண்டும்ராமர் கோயில் கோஷத்தை கட்சி தூக்குவதைவிடவேறு வழியில்லை என்று கட்சியின் புதிய தலைவராகியுள்ள அத்வானி கருதுகிறார் ஆனால் அதற்கும் முட்டுக்கட்டை உண்டு; அதவாது வாஜ்பாய் நடத்திய கூட்டணி அரசில் இருந்த பங்காளிகள் ராமர் கோயில் கட்டுவதை அரசியலில் முன்னிறுத்தக்கூடாது என்று கூறிவருகின்றனர்.

குறிப்பாக ஜோர்ஜ் பெர்னாண்டஸின் கட்சி இதில் மும்முரமாக உள்ளது. ராமர் போயில் பிரச்சினையை கிளப்பினால் பி.ஜே.பி கூட்டணியை விட்டு வெளியேறுவோம் என இக்கட்சி கூறுகிறது.

அதற்குப்பின்னால் மற்றொரு விடயமும் உண்டு. பெர்னாண்டஸ் கட்சியின் தளம் பீகார், ஜோர்கண்ட் மாநிலங்கள் ஆகும். இங்கு அடுத்த ஆண்டு சட்டசபைத்தேர்தல் வருகிறது. கடந்த லோச்சபா தேர்தலில் பீகாரில் ஆளும் லல்லுவின் கட்சி, காங்கிரஸ் ஆகியவற்றுடன் தலித்தலைவர் பாஸ்வானின் கட்சியும் சேர்ந்ததால் காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்றது.

இப்போது வல்லு – பாஸ்வான் இடையே விரிசல்கள் ஏற்பட்டிருப்பதால் பாஸ்வானை சேர்த்து புதிய அணி அமைக்க பெர்னாண்டஸ் முயல்கிறார். இதற்கு சாட்டாக, 'பி.ஜே.பி ராமர் விடயத்தை எடுத்தது; அதனால் பி.ஜே.பி கூட்டணியை விட்டு வெளியேறி பாஸ்வனுடன் புதிய கூட்டணி அமைத்துள்ளோம்' என்று சொல்லலாம். இப்புதிய மூன்றாவது கூட்டணி பீகாரில் லல்லுவை வீழ்த்தவும் கூடும்.

ஆகவே உள்நெருக்கடிகள், சோனியா அடுக்கடுக்காச் சாதித்துவரும் வெற்றிகள், கூட்டணித்தோழர்களின் நிர்ப்பந்தங்கள் ஆகியவற்றுக்கிடையில்தள்ளாடும் பி.ஜே.பிக்கு இது நிச்சயமாகவே சோதனைக்காலம் தான்.

எஸ்.சுரேந்திரஜித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### தங்கச்சி மார் மீது அரசியல் வாதியின் அக்கறை

மலையககுளிர்ப் பிரதேசத்தில் உள்ள அந்த அரசியல் வாதி எப்போதுமே கொஞ் சம் ஓப்பெனாகவே பேசுவாராம். தலைவரின் கட்டளைப்படி தோட்டம், தோட்டமாகச் சென்று கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக விளக் கம் அளிக்கும் பொறுப்பு இவரிடம் ஒப்ப டைக்கப்பட்டதாம்.

குஷிப்பேர் வழியான இந்த அரசியல் வாதி மலையக மக்கள் முன்னணியில் அடை யாளச்சின்னத்தின் பெயரைக் கொண்ட தோட்டத்துக்குச் சென்றாராம்.

அங்கே கொழுந்து நிறுக்கும் இடத்தில் கூட்டமாக நின்ற பெண்களைக் கண்டதும் இவருடைய கார் தானாகவே நின்றுவிட்ட தாம்.

''என்ன தங்கச்சி மார்! எல்லாம் இப்படி மொலிவிழந்து போச்சி. இனிமே கவலைப் பட வேண்டாம். இந்த தீபாவளியை ரொம்ப சந்தோஷமாகக் கொண்டாட நம்ப தலைவர் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து இருக் கார் பயப்படவேண்டாம்.

''தீபாவளி அட்வான்ஸ் இரண்டாயிரம் ரூபா கிடைத்தது. பாக்கி சம்பளம் எல்லாம் கிடைத்தது.''

''எல்லாரும் வீட்டுக்குப் போய் சுடு தண்ணி வைச்சி குளிக்கனும். நல்லாச் சாப் பிடனும். ஒடம்பை கவனமாக பார்த்துக் கொள்ளனும். தங்கச்சிமார் எல்லாம் குளிர்ச் சியாக கண்ணுக்குத் தெரியனும்'' என்று இரட்டை அர்த்தத்தில் சற்று அழுத்தமாகக் கூறி னாராம்.

இதனால் ஆத்திரம் அடைந்த பெண் தொழிலாளர்கள் ''மோய், டேய்! மொதல்ல நீ உன்னுடைய வீட்டுக் குப் போய் அவுங்க ளப் பாருடா. ஒரு வீட்டுக்கு ஒன்பது வீட்டை வைச்சி இருக்க. இங்கு வந்து எங்க உடம் பைப் பத்திப்பேசு ரியா?'' என்று கையில் வைத்திருந்த கம்பு களைத் தூக்கினராம்.

நடடாராஜா நடடா என்று கம்பீரமாக வந்த அந்த அரசியல்வாதி குதிக்கால் குண்டி யில் அடிக்க ஓட்டம் பிடித்தாராம். ஒருபடியாக கார்ச்சாரதி மெதுவாக வந்து அரசியல் வாதியின் காரைக் கிளப்பிக் கொண்டு போனாராம். இது எப்படி இருக்கு?

### அரசியல் சண்டியரின் அபாரமான பல்டி

இந்த அரசியல் வாதிக்கு அரசியல் ரௌடி என்ற ஒரு பட்டப் பெயரும் உண்டாம். இவ ரும் தனது பட்டப் பெயரை அடிக்கடி ஞாப கம் படுத்துவதுபோல் ஏதாவது ஒன்றை செய்து கொண்டே இருப்பாராம்.

இவர்தான் நாட்டில்வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட போது புறக்கோட்டை வர்த்தகர்களி டம் மூட்டை மூட்டையாகப் பொருட்களை திரட்டினவராம்.

''இரண்டு மூடைகள் போதாது நான்கு மூடைகள் தா'' என்று முதலாளியை தாக்கிய தோடு, ''உனது கடையை தீ வைத்து கொளுத்துவேன்'' என்று அச்சுறுத்தினா ராம்.

அதோடு நின்றுவிடவில்லை. அதிஉயர் நாடாளுமன்றத்திலும் அடிக்கடி சண்டித்த னத்தைத் காட்டுவாராம்.

எல்லோருமே ஒரு பௌத்த பிக்குவைக் கண்டுவிட்டால் மிகவும் மரியாதையாகக் குனிந்து வணங்குவது வழமை.

ஆனால், இந்த சண்டியர் குனிவதுபோல் குனிந்து பிக்கு எம்.பியின் உயிர் நாடியி லேயே கை வைத்து கசக்கிவிட்டாராம். இத னால் பௌத்த பிக்கு டியூப் போட்டு சிறுநீர் கழிக்கும் பரிதாபநிலை ஏற்பட்டதாம்.

இதற்கு எல்லாம் கிடைத்த தண்டனை என்ன தெரியுமா? பிரதி அமைச்சர் பதவி அதிஉயர் அம்மணியே எனது செயல்களை அங்கீகரித்து விட்டார் என துள்ளிக்குதித் தாராம்.

'சாதாரணமாக இருந்த போதே எல்லோ ரும் பயந்தார்கள். இப்போதுதான் ஒரு பிரதி அமைச்சர் எதையும் செய்யலாம்' எனத் துணிந்து விட்டாராம்.

வெளிநாட்டில் இருந்து வந்த (18 வயது) மகனை இரவுவிடுதிக்குள் விடவில்லை என்று காடையர்களுடன் சென்று அடித்து நொருக்கினாராம்.

ஆனால், இப்போது இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்பது போல் இப்படி ஒரு சம்பவம் நடை பெற்றதா, உடனே சம்பந் தப்பட்டவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும் என அரச ஊடகங்கள் மூலம் அறிக்கை விடுகிறாராம்.

எப்படி இருக்கிறது இந்தக் கண்டியரின் பல்டி?

### குழந்தையின் உயிருக்கு விலைபேசும் முத்தர்

உலகத்தின் எல்லை (WORLD END) என்ற மலைத் தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ள செழிப்பான ஒரு தேயிலைத் தோட்டம்தான் டயகம தோட்டம்.

அங்கே உயிருக்காகப் போராடிக்கொண் டிருக்கின்றது ஒரு 18 மாதக்குழந்தை. அந்தப் பச்சிளம் குழந்தையின் இருதயத்தில் ஒரு ஓட்டை.

இக்குழந்தைக்கு உடனடியாக சந்திர சிகிச்சை செய்ய வேண்டும். அதற்கு ஐந்து லட்சம் ரூபாவுக்கு மேல் தேவைப்படுகிறது. இக்குழந்தையின் பரிதாபநிலையை அறிந்த ஜனாதிபதி ஒரு தொகையை வழங்கி உள் ளார்.

மிகுதித் தொகையை எப்படிச் சேர்ப்பது என்று துடிப்புடன் பல்வேறு பிரமுகர்களி டமும் உதவிக்கு நாடினார். சென்ற இடத்தில் எல்லாம் அனுதாபத்துடன் உதவினார்கள்.

மலையகத்தின் பெருந்தலைவர் தானே என்று கூறிக்கொள்பவரின் தொழிற் சங்கத் தில் தான் இக்குழந்தையின் பெற்றோரும் காலம் காலமாக அங்கத்தினர்களாக சந்தா செலுத்தி வருகின்றனராம்.

இதனால் அந்த தகப்பன் சகல விதமான தஸ்தா வேஜுக்களுடனும் முத்தான அமைச் சரின் அலுவலகத்துக்குச் சென்றாராம். அங்கே அந்த ஏழைத் தகப்பனின் நம்பிக்கை சிதறடிக்கப்பட்டதாம்.

அமைச்சரும் வாய்க்கு வந்தபடிப் பேசித் தட்டிக்கழித்து விட்டாராம். அமைச்சரின் செய லாளரோ முத்தரையும் மிஞ்சிவிட்டாரார். யார் மேலோ உள்ள கோபத்தை எல்லாம் அந்த அப்பாவித் தொழிலாளியின் மீது காட்டி னாராம்.

புரியாத ஆங்கில வார்த்தைகளில் திட்டித் தீர்த்ததுடன் தஸ்தாவேஜுக்களையும் முகத் தில் எறிந்துவிட்டாராம்.

இந்த மலையக அமைச்சருக்கும் அவரது செயலாளருக்கும் வந்த கோபத்துக்கு கார ணம் என்ன தெரியுமா? இந்த அப்பாவிக் குழந்தைக்கு மலையக சந்திரன் பெருமள வில் உதவி செய்த தகவல் எட்டிவிட்டதுதா னாம். அது தான் உத்தர தாண்டவம் ஆடிவிட் டாராம்.

மலையக் சந்திரனோ மாற்று சங்கத்தான் என்றாலும் குழந்தையின் உயிரைக் காப்பாற்ற உதவினாராம். ஆனால் முத்தரோ தனது சங்கத்தினரையே அவமானப் படுத்தி அனுப்பினாராம்.

எப்படி இருக்கு இவரின் மக்கள் சேவை?


அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
எமது விநியோகஸ்தர்கள்
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165


## சொற்சிலம்பம் போட்டி இல.134

சொற்சிலம்பம் 134 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் நவம்பர் 21 ஆம் திகதி ஆகும். விடைகள் நவம்பர் 28ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர் களின் பெயர்கள் டிசம்பர் 05ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.132க்கான விடைகள் அருகே தரப்பட் டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியி ருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக் கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.132

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மு | 2 க | 3 வ | ரி | ■ | 4 உ | 5 த | 6 வி |
| 7 க | டு | கு | ■ | 8 க | ர | ண் | டி |
| 9 தா | ம் | ■ | 10 க | ல | ம் | ■ | வெ |
| ■ | 11 பு | 12 த | ல் | வி | ■ | 13 க | ள் |
| 14 அ | ■ | 15 கு | வி | ■ | 16 போ | ரா | ளி |
| 17 தி | 18 க | தி | ■ | 19 ச | ல | ம் | ■ |
| 20 ப | ரு | ■ | 21 ச | க | ■ | 22 பு | 23 வி |
| 24 தி | மி | ங் | கி | ல | ம் | ■ | டை |

## சொற்சிலம்பம் போட்டி இல.134

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | | |
| | ■ | 10 | | | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | | ■ | 14 |
| ■ | | ■ | 15 | | ■ | 16 | |
| 17 | | 18 | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | ■ | |
| | ■ | 22 | | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.134

**இடமிருந்து வலம்**

1. சீதையை மணக்க இராமன் முறித்த வில்.
5. பெரியோர் தரும் வாழ்த்து.
7. நஞ்சு.
8. கோமாதாவைக் கொல்வதை இப்படிச் சொல்வர்.
10. கனிதல்.
11. புகழ், கீர்த்தி, பெருமைக்கு இப்படியும்ஒரு சொல் உண்டு.
13. சாப்பிடு.
15. மூப்புக்கு முன்னறிவிப்பது செய்வது.
16. தூங்கு / துயில்கொள்.
17. முகத்துக்கு நேரே செய்யும் உபசாரம்.
19. களம் / இடம் / தளம்.
20. அணி / குழு.
21. போன்று
22. கருங்கல் (கடவுள்) சிலை.

**மேலிருந்து கீழ்**

1. உயர்ந்த மிருகம்.
2. ஒரு திசை
3. கணவன் – மனைவி.
4. அர்ஜுனன் மனைவி. அபி மன்யுவின் தாய்.
5. அவா
6. பிரேதம் தீ மூட்ட அடுக்கி யுள்ள விறகுக் கும்பி
9. பிதாவின் மகன்
12. இருப்பவன்
14. சமூகத்தில் தனி ஆளுக்கு அடுத்த தனி அலகு.
15. நல்ல
16. சில அல்ல
17. (கூரையின் / மலையின்) உச்சி.
18. இல்லாள்.
19. விடிய
21. (இந்தியாவில் கொண்டா டப்படும்) ஒரு பண்டிகை.

## சொற்சிலம்பம்-131 பரிசு பெறுவோர்.

1. இ.பத்மதாஸ்,
அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.
2. தெ.தேவகி,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
3. இ. ஆறுமுகம்,
C/O, த.இராசேந்திரம்,
தொட்டிலடி, சங்கானை.

### பாராட்டுப் பெறுவோர்

1. ஜெயசேகரா நகுலன்,
''ஸ்ரீ ரங்கம்''
கேணியடி,
கொக்குவில் மேற்கு.
2. செல்வி.க. யமுனா,
மே/பா டாக்டர் சி.பேரம்பலம்,
சில்வா வீதி,
வட்டக்கச்சி.
3. இ. சறோஜினி,
72, பூந்தோட்டம்,
ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு.
4. ச. பாலசூரியன்,
18/5, குடியிருப்பு,
வவுனியா.
5. ஆர். இராஜேந்திரா,
21B, கனகரட்டினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
6. சி.லோகேஸ்வரன்,
எம்.ஓ.எச். விடுதி ஒழுங்கை,
கல்முனை.
7. வே. அருண்,
வைத்தியசாலை அருகாமை,
முள்ளியவளை.
8. சூசைப்பிள்ளை இருதயராஜா,
பத்திமா சந்தி, 8 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
9. ச. லிண்டன்,
95, கருணைபுரம்,
த.பெ.எண். 30400.
10. ச.சசிக்கா,
சாவிங்கா A.P.O,
281,நீதிமன்ற வீதி,
திருகோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் தவிப்பு

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறு விறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

6

அந்தத் தெம்புடனேயே தாங்கள் தங்கியிருந்த நண்பரின் வீட்டிற்கு வந்தனர்.

அனைவருடனும் இருக்கையில் அதிகமாய்த் தெரியவில்லை. தனிமை தீர்ப்பின் பாதிப்பை பன்மடங்கு அழுத்தமாய் உணர்த்தியது.

நேரம் செல்லச் செல்ல குயில்தாசனுக்கு இரத்த அழுத்தம் அதிகமாகியது. அந்த வேகத்தில் அரற்றத் துவங்கியவர்... சிறிது நேரத்தில் கத்தவும், சத்தமாய் அழவும் துவங்கிவிட்டார்.

ஆசையாய்ப் பெற்ற மகனை அகாலத்தில் பறி கொடுக்க எந்தப் பெற்ற மனம்தான் தாங்கும். திடீரென விபத்திலோ நோய் வாய்ப்பட்டோ பறி கொடுக்க நேர்ந்தாலே அது மிக கொடுமைதான். அதிலும் இப்படிச் செய்யாத தவறுக்காய் சட்டம் என்றும் நீதி என்றும் புனைந்து தூக்குக் கயிற்றுக்கு தாரை வார்க்க யாருக்குதான் மனம் ஒப்பும்?

அழுவது ஆண்மைக்கு அழகில்லையாம். அட... போதும் இந்த போலித் தத்துவங்கள்... வறட்டு கௌரவங்கள்.... மனம் எல்லோருக்கும் ஒன்றுதான். ஆண் என்பதால்இரும்பிலும் பெண் என்பதால் மலரிலுமா இருக்கிறது. தந்தையாய் நில்லாது நல்லதொரு நண்பனாய் நின்று வளர்த்தவருக்குத் தானே தெரியும் பிள்ளையின் அருமை.........

பொறுக்கியாய் கேடியாய் அனைவருக்கும் பொல்லாதவனாய் பெற்றவர்களையே மதியாதவனாய் வாழும் மகனை இழக்கவே எந்தத் தாயும் தந்தையும் விரும்ப மாட்டார்கள். அப்படி இருக்க... அருமையாய் பெருமையாய் ஒழுக்கமும் பண்பும், கல்வியும் சிறப்பும் பெற்றவனாய் எல்லாருக்கும் பிரியமானவனாய், மிகையாக அல்ல, உண்மையிலேயே அந்த சோலையார் பேட்டை கிராமத்திற்கே செல்லப்பிள்ளையாய் பெற்றோருக்குப் பெருமிதம் தரும் மகனாய் வாழ்ந்தவனை, அநியாயமாக இழப்பதா? அடுக்குமா இந்தக் கொடுஞ்செயல்.....

அந்தத் தந்தையின் பரிதவிப்பை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. கதறும் அந்த உள்ளத்திற்கு ஆறுதல் தர யாரால் முடியும்?

இன உணர்வோட, மொழிப்பற்றோட நான் வாழ்ந்ததுக்கா எனக்கு இந்தத் தண்டனை. என்னைப் பழிவாங்க முடியாதவங்க அநியாயமா என் பிள்ளைய பழிவாங்குறாங்களே... டேய்! என்னைய கூட்டிட்டு போங்கடா... என்னைய தூக்குல போடுங்கடா... என் பிள்ளைய விட்ருங்கடா.... அய்யோ அறிவு என் மகனே. உன்னை நான் எப்படா பார்க்கப் போறேன்? வாடா... வந்திருடா.... நான் எப்படிடா உன்னை விட்டுட்டு இருப்பேன். இத்தனை வருசமா நீ இன்னைக்கு வந்திருவ நாளைக்கு வந்திருவ என்னுநம்பிக்கையோட இருந்தேனே.... எல்லாம் போச்சே.... நான் போறேன் என் பிள்ளைக்கிட்ட போறேன் என்ன விடுங்க...... அறிவு டேய் அறிவு வாடா.

புலம்பல் கதறலாக மாறி வெறி கூச்சலாகியபோது அனைவரும் பயந்துவிட்டனர். யாருக்கும் அடங்காத குயில்தாசனை அடக்க ஆள் தேடினர். உடன் நினைவுக்கு வந்தது பாலகுருதான். உடனே அழைத்தனர். நடு இரவென்றும் பாராது வந்தார்.

ஒருவருக்கும் அடங்காத குயில்தாசன் பாலகுருவிடம் ஒரு குழந்தைப்போல ஒடுங்கினார்.

'எப்பா என் பிள்ளைய காப்பாத்துப்பா... எப்படியாவது காப்பாத்துப்பா...' கதறினார்; உடைந்து அழுதார்.

'விட்டுருவோமா நாங்க.. இதென்ன... கீழ்க் கோர்ட்டு தான. உச்சநீதிமன்றம் இருக்கு அங்க போவோம்... எத்தனையோ வழி இருக்கு. நாங்கல்லாம் எதுக்கு இருக்கோம்....'

## மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

என்ன என்ன வார்த்தைகள் சொன்னாரோ. குயில்தாசன் மெதுவாய் உறக்கத்தில் மூழ்கினார்.

காலையில் மருத்துவமனையில் சேர்த்தனர். செய்தி கேள்விப்பட்டு நண்பர்கள் வந்து பார்த்து ஆறுதல் கூறினர்.

இத்தனைக் களேபரத்திலும் அற்புதம் மனதில் ஒரே எண்ணம் மட்டுமே ஓடியது.

'காப்பாத்துவேன். என்பிள்ளைய நான்காப்பாத்துவேன்!'

அந்த உறுதிதான் அவரை நடத்திச் சென்றது. செல்லும். இத்தனை நாட்களை போலவே... இனியும்.

***

தீர்ப்பைக் கேட்ட தமிழ் உணர்வாளர்கள் அனைவரும் அதிர்ந்து போயினர். அவர்கள் மனமெங்கும் வெறி வந்தாற்போன்ற கோபமும் வேகமும் பொங்கியது. இந்தத் தீர்ப்புக்குக் காரணமான எல்லோரையும் மனதுக்குள் திட்டித் தீர்த்தனர். 'செய்யணும் ஏதாவது செஞ்சு 26 பேரையும் வெளிய எடுக்கணும். எவ்வளவு தைரியம்மா இப்படி ஒருதீர்ப்பு கொடுத்திருக்காணுங்க. கேட்க யாரும் இல்லைனு நினைப்பா. உச்ச நீதிமன்றத்துக்கெல்லாம் காசு செலவழிச்சு போக முடியாதுன்ற எகத்தாளமா? இருங்கடா இருங்க. உங்க மூஞ்சிய கிழிக்கிறா மாதிரி காசுவசூல்பண்ணிவழக்க நடத்தி எல்லோரையும் வெளிய கொண்டு வர்றோம் பாரு...'



எங்கிருந்து தான் ஆவேசம் வந்ததோ.....!

ஒருவோருவர் மனதிலும் தீப்பொறியாய் கோபம். ஏதாவது செய்ய வேண்டுமென்ற வேகம். என்ன செய்வது என்ற யோசனை. அந்த யோசனையின் முடிவாய் அவர்கள் நின்ற இடம் பழ.நெடுமாறனின் வீடு.

அதிகாலையிலிருந்தே தமிழ் உணர்வாளர்கள் அந்த வீட்டை நிரப்பத்துவங்கி விட்டனர்.

அந்த அதிகாலை நேரத்திலும் விழித்திருந்தார் நெடுமாறன். உயரமாய் ஒடிசலாய் இருந்த நெடுமாறனுக்கு வயது பின் அறுபதுகளில்.

தமிழகத்தின்மூத்த அரசியல் வாதிகளில் ஒருவர்.

அவர்களை அந்த அதிகாலையில் எதிர்பார்த்திருந்தது போலவே இருந்தது அவரது முகபாவம். இரவு முழுவதும் தூங்காத களைப்பு அவர் கண்களில். சிறிது நேரம் ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. அந்த மௌனத்தை உடைத்து முதலில்பேசியவர் நெடுமாறன்தான்.

'இப்படி அநியாயம் பண்ணிட்டாங்க.'

'ஆமாங்கய்யா'

'அடுத்து என்ன செய்யலாம்னு நினைக்கிறீங்க'.

'உச்சநீதி மன்றத்துல வழக்க நடத்த நிறைய காசு வேணும்லங்கய்யா. அதனால உடனே நிதி வசூல் வேலையில இறங்கணும். இப்பவே ஆரம்பிச்சாதான்சரியா வருங்கய்யா'.

'சரிதாங்க. நானும் அத பத்திதான் இராத்திரியெல்லாம் யோசிச்சுட்டு இருந்தேன். வழக்குல ஆஜராக மூத்த வழக்கறிஞர் நடராஜன கேட்கலாம்னு இருக்கேன். அவரு பூந்தமல்லி கோட்டுலேயே ஆஜராக கேட்டப்ப சம்மதிச்சிருந்தாரு. ஆனா அந்த நேரத்துல அவரு கேட்ட பணத்த என்னால திரட்ட முடியல. உதவி கேட்டுப்போனசில தலைவர்களும்நழுவிட்டாங்க. அதனாலென்ன திரும்பவும் அவரையே வச்சு வழக்க நடத்திரலாம். நீங்க சொன்ன மாதிரி நிதி வசூல் வேலையும் ஆரம்பிச்சிர வேண்டியதுதான். ஆனா அதுக்கு முன்னாடி நம்ம ஒருங்கிணைப்புக் குழுவ கூட்டி எல்லோர்கிட்டயும் பேசணும்ல.'

இடைமறித்தார் ஒருவர்.

'அதெல்லாம் சரிப்பட்டு வராதுங்கய்யா. நாளாயிரும். நாம உடனே வேலைய ஆரம்பிக்கலாங்கய்யா'.

'அப்படியில்லங்க. ஒரு குழுவா நாம செயல்பட்டுட்டு இருக்கிறப்ப தன்னிச்சையா முடிவெடுக்கிறது தப்பு. மேல் முறையீட்டுக்கு இன்னும் 21 நாள் இருக்கு. அப்படியெல்லாம் நாளாயிராது. கவலைப்படாதீங்க'.

தமிழர்களை, தமிழின உணர்வாளர்களை ஒன்றிணைத்து, தமிழர் பிச்சினைகளுக்காகப் போராடுவதையே பணியாகக் கொண்டு, நெடுமாறன் தலைமையில் மொத்தம் 80 அமைப்புகளுக்கு மேல் இணைந்துஒரு ஒருங்கிணைப்பக் குழுவாக செயல்பட்டுக்கொண்டிருந்தனர்.

பல இளைஞர்களும் அன்று வந்து நெடுமாறனை சந்தித்து உடனே ஏதாவது செய்ய வேண்டுமென துடித்தனர். அவர்களுடைய உணர்வும் தீர்ப்பை கேட்டவுடன் எழுந்த கோபமும் வேகமான செயல்பாடுகளுக்குத் தூண்டியது. ஆனால் நெடுமாறனின் வயதும் அரசியல் முதிர்ச்சியும் எதையும் திட்டமிட்டு நிதானமாக செய்வதற்கானது. ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டியே முடிவு செய்ய வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அதைப்பொறுமையாகவிளக்கி பிறருக்குப்புரியவும்வைத்தார்.

தன் திட்டங்களின் முதல் கட்டமாக முதலில் அவர் தொடர்பு கொண்டது வழக்கறிஞர் சந்திரசேகரனை. 26 பேரில் 7 பேருக்காக வாதாடியவர் அவர். மூத்த வழக்கறிஞர் நடராஜனிடம் ஜூனியராக இருந்தவர். அன்றைய பத்திரிகைகளில் பெரிய அதிகாரியின் பேட்டிக்குகீழேயே 'உச்சநீதிமன்றத்தில் வழக்கை தூள்தூளாக்குவோம்' என்று இவரது பேட்டியும்வந்திருந்தது.

தொடர்பு கொண்ட உடனேயே, 'ஐயா நானே உங்களைப் பார்க்க வரணும்னு இருந்தேங்கய்யா.... வந்திடறேன்' – என்றார்.

அவரை மாலையில் வரச்சொல்லிவிட்டு குழுக் கூட்டத்திற்கான அழைப்பிதழ் கடிதத்தை எழுதினார். பின்னர் சென்னையில் உள்ள ஒருங்கிணைப்புக் குழுவின் முக்கியத்தலைவர்களைத் தொடர்பு கொண்டு காலை 10 மணிக்கு நேரில் சந்தித்துப் பேச அழைப்பு விடுத்தார். சிலர் தாமாகவே தொடர்பு கொண்டனர். அதிலும் வெளியூர்களிலிருந்து வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி அழைப்புகள் வந்த வண்ணம் இருந்தன.

வேறு என்ன என்ன செய்யவேண்டும். வரவிருக்கும் குழுத் தலைவர்களிடமும் வழக்கறிஞர்களிடமும் என்ன பேச வேண்டும் என்பதைச் சிறு குறிப்புகளாக எழுதி விட்டு, குளிக்கக் கிளம்பினார்.

(தவிப்புத் தொடரும்....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# சிங்கத்துக்கு சவால்

**தாய்வான் நாட்டுக்காரர் ஒருவர் சிங்கத்தை அடக்க முற்பட்டு; சிங்கத்தின் கூண்டுப்பகுதிக்குள் குதித்த சம்வம் ஒன்று தாய்வான் மிருகக் காட்சிச் சாலையில் இடம்பெற்றுள்ளது.**



மரத்தடியில் ஒய்ந்திருந்த இரண்டு சிங்கங்களின் அருகில் சென்ற சென் என்ற இந்த தாய்வான்காரர் ''இயேசு உன்னைக் காப்பார்'' என உரத்துச் சத்தமிட்டார்.

இவர் தனது இரண்டு கரங்களையும் உயர்த்திய வண்ணம் ''வா... என்னைக் கடித்துக்குதறு'' என்று சத்தமிட்டார். பின்னர் அவர் பின்நோக்கி வந்து அருகேயிருந்த கல்லின் மேல் ஏறிய போது ஒரு சிங்கம் அவர் மேல் பாய்ந்து அவரின் தோள் பகுதியை கடித்தது. அவர் அதற்கு பின்வாங்கி ஓடியபோது அது அவரது காற்சட்டையை கிழித்தது.

அங்கு கூடி இருந்தவர்களின் கூச்சலை அடுத்து காவலர்களும், மிருகக் காட்சிச்சாலை வேலையாட்களும் அவ்விடத்துக்கு கூட்டமாய் விரைந்து வந்தனர். காவலர்கள் சிங்கத்தின் மீது தண்ணீரை பாய்ச்சியும், சிங்கத்தை நோக்கி தாக்குதல் நடத்தியும் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இத்தனைக்கும் மத்தியில் தனது ஆடையையும், பேனாவையும் பொறுக்கிக் கொண்டு எழுந்தார் இந்த நபர். பொலிஸாரினால் வைத்திய சாலைக்கு சோதனைக்காக கொண்டு





செல்லப்பட்டார்.

தைப்பே வைத்தியசாலை டாக்டர் வோன்ஜாசிங் கூறுகையில், சிங்கம் இவரை கடித்ததற்கான அடையாளங்கள் இவருடைய உடம்பில்காணப்பட்டன என்றும் இவர் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட ஒருவாராக இருக்கக்கூடும் எனவும் கூறினார். இவர் வைத்திய பராமரிப்பின் கீழ் உள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார நாற்காலி அசையுமா? முறியுமா?

எங்கோ ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டுக் கிடந்து ஜே.வி.பியினரை ஸ்ரீ.ல.சு கட்சியுடன் இணைப்பதிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை உருவாக்குவதிலும் பெரும் பங்காற்றியவர் அநுராபண்டார நாயக்க.

இருவேறு துருவங்களாகவும் அரசியல் சித்தாந்த கோட்பாடுகளில் எதிரும் புதிருமாகவும் இருந்து செயற்பட்ட இருகட்சிகள் இவை. சுதந்திரக் கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவின் கணவரும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவருமான விஜயகுமாரணதுங்கவைப் படுகொலை செய்தவர்களே ஜே.வி.பியினர்தான்.

இதனை ஜனாதிபதி சந்திரிக்காவே பல்வேறு மேடைகளில், பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்ணீர் மல்கக் கூறி நாட்டு மக்களின் அனுதாபத்தைப் பெற்றார்.

இதனை எவராலும் மறுக்கவும் முடியாது; மறைக்கவும் முடியாது.

இரண்டு கட்சிகளும் இணைவது என்பது எண்ணெயும் தண்ணீரும் ஒன்று சேர்வது போல் தான் என்று வெளிப்படையாகவே கூறப்பட்டது.

ஸ்ரீ.ல.சு கட்சியின் மூத்த தலைவர்களான டி.எம்.ஜயரத்ன, ரட்ணசிரி விக்கிரம நாயக்க, இன்றைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஜே.வி.பியுடன் இணைவதை கடுமையாக எதிர்த்தனர்.

இது தொடர்பாக நடைபெற்ற பேச்சுக்களிலும் கலந்து கொள்ளாமல் தவிர்த்து வந்தனர்.

இந்த எதிர்ப்புகளை எல்லாம் விட ஜனாதிபதியின் இரு பிள்ளைகளும் கூட தமது தந்தையைப் படுகொலை செய்தவர்களுடன் தாயார் உறவு வைத்துக் கொள்வதை வன்மையாகக் கண்டித்தனர்.

இதனால் ஜே.வி.பியும், ஸ்ரீல.சு.கட்சியும் இணைவது கேள்விக் குறியாகி இருந்தது. இணைப்பு ஏற்படாது என்ற நிலை ஏற்பட்டது.

இப்படியான நிலையிலும் அநுராபண்டாரநாயக்கவும், மங்கள சமரவீரவும் தமது உயிரைப் பணயம் வைத்தாவது இரு கட்சிகளையும் இணைப்போம் என்று சூளுரைத்தனர்.

வாய்ப் பேச்சில் மட்டுமல்லாமல் அதனை செயலிலும் காட்டிவிட்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை உருவாக்கிய சிற்பி என்று அநுராபண்டார நாயக்காவைக் கூறலாம்.

நாடாளுமன்றத்தில் 19 பேராக மட்டுமே இருந்த ஜே.வி.பியினரின் எண்ணிக்கையை 39 ஆக அதிகரிக்கச் செய்த கைங்கரியத்தைச் செய்தவரும் இந்த அநுராபண்டார நாயக்காவே.

இப்படி அநுராபண்டார நாயக்காவினால் உரமூட்டி வளர்த்து விடப்பட்ட ஜே.வி.பியினர் இன்று தாமே 'கிங்மேக்கர்' எனக் கூறிக் கொண்டு அரசாங்கத்தில் இருந்துகொண்டே தோளில் அமர்ந்து காதைக் கடித்து வருகின்றனர்.

அண்மைக்காலங்களில் அநுராபண்டார நாயக்காவின் நேரடி எதிரியாக மாறிவிட்டனர் ஜே.வி.பியினர்.

வளர்த்த கடா மார்பில் பாய்ந்துவிட்டது போல் ஜே.வி.பியினர் நடந்து கொள்கின்றனர் என அநுராபண்டாரநாயக்க வெளிப்படையாகவே குற்றம் சுமர்த்தி வருகிறார். "பலம் பொருந்திய இரும்பு மனிதர்களான ஜே.ஆர்.ஜயவர்த்தனா, ஆர்.பிரேமதாஸ போன்ற பெரும் தலைவர்களாலேயே ஸ்ரீல.சு.கட்சியை அசைத்துவிட முடியவில்லை.

"கேவலம் நேற்று முளைத்த களான்கள் போன்ற ஜே.வி.பியினரால் எம்மை என்ன செய்ய முடியும்? அவர்கள் ஒரு தூசுக்கும் பெறுமதி இல்லாதவர்கள். கட்சியின் உத்தியோ பூர்வ ஜனாதிபதி வேட்பாளர் நானே" என்று தம்பட்டம் அடிக்க ஆரம்பித்துவிட்டார் அநுரா.

அநுராவின் இந்த அதிர்வேட்டுகள் ஜே.வி.பியினர் மத்தியில் பெரும் பூகம்பத்தையே ஏற்படுத்திவிட்டன.



அநுரா விமல்

இப்பொழுது ஜே.வி.பியினர் உஷராகி விட்டனர். "கட்சிக்குள்ளேயே விமர்சிக்கப்பட்ட அநுராவை நாங்களே ஓரளவு கௌரவமான மனிதராக்கினோம். அமைச்சு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டபோது அநுராவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பி கௌரவமான அமைச்சைப் பெற்றுக்கொடுத்தோம். அதை எல்லாம் மறந்துவிட்ட அநுராதான் நன்றி மறந்துவிட்டார்" என்கின்றனர் ஜே.வி.பியினர்.

அதோடு நின்றுவிடவில்லை. அநுராவை தோற்கடிப்பதற்காக செல்வாக்குடைய ஒருவரைத் தெரிவு செய்வதில் தீவிரமாக இறங்கி உள்ளனர்.

இப்பொழுது ஜனாதிபதிவேட்பாளராகப் போட்டியிடுவதற்கு இருவரின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

ஆரம்பகாலம் முதலே கட்சியின் வளர்ச்சிக்காக பல போராட்டங்களையும், தியாகங்களையும் செய்து ஜே.வி.பி வட்டாரத்தில் பெரும் செல்வாக்குடையவராக இருப்பவர் அதன் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ.

ஜனாதிபதி நாட்காலியை குறிவைத்தே அவர் எந்த விதமான அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்காமல் தவிர்த்து வந்தார் என்று தற்போது நம்பப்படுகிறது.

அடுத்தவர் லண்டனில் அஞ்ஞாத வாசம் செய்துவிட்டு நாடு திரும்பி கட்சிப்பணிகளில் ஈடுபட்டுள்ள ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ அமரசிங்க. இவர் தலைவராக இருந்தாலும் கட்சி ஆதரவாளர்ளைப் பொறுத்த வரையில் இவர் இரண்டாவது இடத்திலேயே இருக்கின்றார்.

என்றாலும் கூட ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் ஜே.வி.பிக்குள்ளும் கயிறிழுப்புகள், கருத்து மோதல்கள் ஏற்பட்டுவிட்டன.

எதுஎப்படியோ, ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பியினரால் வெற்றிபெற முடியாது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரிந்த விடயம்தான்.

ஆனால், இன்று அவர்களுடைய இலட்சியம் வெற்றி அல்ல. அநுராவை தோல்வியடை செய்வதுதான். நகமும் சதையுமாக இருந்த அநுராவும், விமல்வீரவன்ஸவும் இன்று மோதல் நிலைக்கு வந்துவிட்டனர். ஆளும் அரசாங்கத்துக்குள்ளேயே குத்து வெட்டாகிவிட்டது.

அதேவேளை, தனது ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கதான் என்று ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே அறிவித்து விட்டது. அங்கே போட்டி இல்லை.

அநுராவும், விமல்வீரவன்ஸவும் ஜனாதிபதி நாற்காலியை குறிவைத்து போட்டி போட்டுக் கொண்டிருக்கும் அதேவேளை ஜனாதிபதியோ அந்த நாற்காலியை உடைத்து எறிந்து விட்டு நாடாளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் தீவிரமாக செயற்படுகின்றார்.

ஜனாதிபதி சந்தரிக்காவின் திட்டம் பிழைத்துவிட்டால் பண்டாரநாயக்காவின் கடைசி வாரிசான அநுராவின் அரசியலும் கேள்விக்குறிதான்.

அக்காவின் நாற்காலிக்கு தம்பி துடிக்கின்றார். அதிகாரத்துக்கு அக்கா துடிக்கின்றார். இவர்களில் யாருடைய கனவு பலிக்கும்? காலம் பதில் சொல்லும்.

இரா.பத்திரசிகாமணி

---

# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 14–11–2004, 20–11–2004

பொ. சந்திரன்

## இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| | செவ்வாய் சுவாதி ராகு<br>சுக்கிரன் சித்திரை செவ்<br>புதன் கேட்டை புதன்<br>சூரியன் விசாகம் + அனுசம் குரு + சனி<br>குரு அத்தம் சந்திரன்<br>சனி புனர்பூசம் குரு | | |
| | | | குரு |
| | சூரியன் புதன் | சுக்கிரன் செவ்வாய் கேது | |

ஆனி 28முதல் ஆனி 03 வரை

சந்திரன் மிதுனம் முதல் கடகம் வரை

**மேடம்:** அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

(1,8) உரியசெவ்வாய் 7 இல் பலன் செய்யாது. மேலும் பகைக்கிரகமான ராகுவின் சாரத்தில் இருப்பதும் நல்ல பலன் செய்ய வாய்ப்பு இல்லை. ராசியில் ராகு இருப்பதும் சோதனை தான். எடுக்கும் முயற்சிகள் தாமதமாகலாம். அல்லது தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். அத்துடன் ஆசாரம் அனுஷ்டானம். புகழ் போன்றன எங்கும் பங்கம் உண்டு. (2,7) உரிய சுக்கிரன் 7 இல் ஆட்சியாக இருப்பது நல்லதல்ல. 7இல் சுக்கிரன் சபல புத்தியை கொடுக்கக் கூடும். கையில் பணம் இருக்காது. மேலும் 7 இல் கேது இருப்பது திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வாகன சுகம் உண்டு. (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது தொழில்துறை முன்னேறும். ஈட்டியலாபமும் நல்ல முறையில் முதலீடு செய்யலாம்.

**இடபம்:** கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசிரியம் 1,2

(1,6) உரிய சுக்கிரன் 6இல் ஆட்சியாக இருப்பது பலன் செய்யாது. ஆனால், செவ்வாயின் சாரத்தில் இருப்பதால்ஓர் அளவு ஆறுதல் உண்டு. எடுக்கும் முயற்சிகள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவர் வஞ்சம் தீர்க்கலாம். வழக்குகளை எதிர்கொள்ள நேரிடலாம். திருடர் பயம் உண்டு. (2,5) உரிய புதன் 7 இல் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தராது. நாலுக்குரிய சூரியன் 7 இல் இருப்பதால் வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (7,12) உரிய செவ்வாய் 6இல் இருப்பது நல்லது. திருமண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. தர்மகர்மாதிபனான சனி இரண்டில் இருப்பது சிறப்பில்லை. தொழில்துறை பாதிக்கலாம். இருப்பினும் குரு ஐந்தில் இருப்பதும்; ராசியைப் பார்ப்பதும் நல்ல அம்சம். சகல தோசங்களும் நிவர்தியாகலாம்.

**மிதுனம்:** மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

(1,4) உரிய புதன் 6இல் இருப்பது; விசேஷம். மேலும் தன் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்ல பலனைச் செய்யும். எடுக்கும் முயற்சிகள் நல்ல முறையில் அமையும். சென்ற இடம் எல்லாம் சிறப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. வீடு, வாகன சுகம் உண்டு. தாய்க்கும் நல்ல பலன் உண்டு. இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய குரு நாலில் இருப்பது சாதகமும் இல்லை, பாதகமும் இல்லை. ஆனால் கேந்திராதியத்திய தோசத்தால் பாதகமான பலனை செய்யலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இவ்விரு வீடுகளையும் சனிபார்ப்பதால் நல்லபலனை எதிர்பார்க்க முடியாது. (8,9) உரிய சனி ராசியில் இருப்பது பிதாவுக்கு நல்லதல்ல. தர்மகாரியம் செய்ய பலன் உண்டு.

**கடகம்:** புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

ராசிநாதன் சந்திரன் தனு முதல்கும்பம் வரை சஞ்சரிப்பதால் கும்பத்தை தவிர மற்றைய வீடுகளில்நல்ல பலனைச் செய்யும். கும்பம் எட்டாம் வீடு ஆனபடியால் நல்ல பலனைச் செய்யாது. வார ஆரம்பத்திலும் மத்தியிலும் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். இரண்டுக்குரிய சூரியன் ஐந்தில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. (4,11) உரிய சுக்கிரன் நாலில் ஆட்சியாக இருப்பதால் வாகன சுகம் உண்டு. மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. நண்பர்களால் உதவியுண்டு. இனபந்துக்கள் விசுவாசமாக இருப்பர். (5,10) உரிய செவ்வாய் நாலில் இருப்பதால் தொழில் துறையில் முன்னேற்றம்இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்திதராது.. (7,8) உரிய சனி 12இல் மறைவதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. குரு மூன்றில் இருப்பதும் சுகம் குறைந்த நிலை.

**சிங்கம்:** மகம், பூரம், உத்தரம்1.

ராசிநாதன் சூரியன் நாலில் புதனோடு இருப்பது சிறப்புடையது. சூரியன் நாலில் சிறப்பில்லை புதனும் நாலில் சிறப்பில்லை. ஆனால், இருவரும் இணைவது 4,8,1இல் சிறப்புடையது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும் புதிய புதிய எண்ணங்கள் உருவாகும். உருவாகும் எண்ணங்களை செயலாக்கவும் முடியும். வார இறுதியில் தடைகள் வரவாய்ப்புண்டு. (2,11) உரிய புதன் நாலில் இருப்பதால் கையில்பணம் இருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்லது. (3,10) உரிய சுக்கிரன் மூன்றில் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்லது. நாலு ஒன்பதுக்குரிய செவ்வாய் மூன்றில் இருப்பது பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகன சுகம் உண்டு. (6,7) உரிய சனி 11இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. பகைவிலகும்.

**கன்னி:** உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.

(1,10) உரிய புதன் மூன்றில் இருப்பது சிறப்பு இல்லை. ஆனால், தன் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. எடுக்கும் கருமங்கள் தாமதமாகலாம். தொழில் துறையில் எதிர்பார்க்கும் லாபம் இருக்காது. குறுந்தூரப் பிரயாணம் அமையலாம். (2,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. தெய்வீக அருள்கிட்டும் வாய்ப்பு உண்டு. (4,7) உரிய குரு ராசியில் இருப்பது நல்லதல்ல. வீடு, வாகன சுகம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது கூடாது. (5,6) உரிய சனி 10இல் இருப்பது மத்திம பலனைக் கொடுக்கலாம். பகைவிலகும். திருடர் பயம் இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தராது.

**துலாம்:** சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.

(1,8) உரிய சுக்கிரன் ஒன்றில் இருப்பது அதாவது ராசியில் இருப்பது சிறப்பானது. மேலும் செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைக் கொடுக்கும். நல்ல எண்ணங்கள் உருவாகும். உருவாகும் எண்ணங்களை செயலாக்க முடியும். (2,7) உரிய செவ்வாய் ராசியில் இருப்பதால் கையில்பணம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9 இல் இருப்பதால் வீடு, வாகன சுகம் இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தராது. 10இல் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். (9,12) உரிய புதன் இரண்டில் இருப்பது பிதாவுக்கும் நல்லபலன் உண்டு. சயன சுகம் உண்டு. ஆலயவழிபாடு அமையும். குரு மறைவது நல்ல பலன்கள் தாமதமாகலாம் அல்லது தடைப்படலாம்.

**விருச்சிகம்:** விசாகம் 4, அனுசம், கேட்டை

(1,6) உரிய செவ்வாய் 12 இல் மறைவது நல்லதல்ல. மேலும் பகை கிரகமான ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் சிறப்பில்லை. எடுக்கும் கருமங்கள் தாமதமாகலாம் அல்லது தடைப்படலாம். பகைவிலகும். திருடர்பயம் இருக்காது. வழக்குகள் வெற்றி பெறும். பிரயாண வாய்ப்புகள் உருவாகும். (2,5) உரிய குரு 11இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும். பூர்வீக சொத்து சேரும். (3,4) உரிய சனி எட்டில் இருப்பது கூடாது. வீடு, வாகனம் கையைவிட்டுப் போகபலன் உண்டு. இளைய சகோதரத்துக்கு கூடாது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (7,12) உரிய சுக்கிரன் 12 இல் ஆட்சியாக இருப்பது நல்லது. திருமண பலன் உண்டு. குடும்பத்தில்அமைதி நிலவும். சயன சுகம் உண்டு. பத்துக்குரிய சூரியன் ராசியில்இருப்பது நல்லதல்ல. தொழிலில் லாபம் இருக்காது.

**தனு:** மூலம், பூராடம், உத்தராடம் 1.

(1,4) உரிய குரு 10 இல் இருப்பது மத்திமபலன். பத்தில் வியாழன் பதியை விட்டுக்கிழப்பும் என்ற பழமொழி உண்டு. சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது இவ்வீடுகளில் நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது. ஆரோக்கியமான சிந்தனை உருவாக வாய்யு இல்லை. வீடு, வான சுகம் இருக்காது. தாய்க்கும் நல்லதல்ல. சமூகத்தில் உள்ள அந்தஸ்த்து குறையக் கூடும். (2,3) உரிய சனி 7 இல் இருப்பது கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,10) உரிய புதன் 12 இல் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையிலும் பிரச்சினை உருவாகலாம் 7 இல் சனி இருப்பதால் குடும்ப அமைதி குலையலாம். வெளியார் தலையீடு பிரச்சினையை உருவாக்கலாம்.

**மகரம்:** உத்தரடாம்2,3,4,.திருவோணம், அவிட்டம்1,2

(1,2) உரிய சனி 6இல் இருப்பது சிறப்பானது. மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. எண்ணிய எண்ணம் நிறைவேறும். தெளிவான நோக்கு இருக்கும். கையில் பணம் இருக்கும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை இருக்கும். (4,11) உரிய செவ்வாய் 10இல் இருப்பது நல்லதும் இல்லை கூடாதும் இல்லை. வாகன சுகம் இருக்காது. நண்பர்களால் செலவு இருக்கும். 7இல் வீடு சுத்தமாக இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். (5,10) உரிய சுக்கிரன் 10 இல் ஆட்சியாக இருப்பதால் தொழில் சமச்சீர் நிலைநீடிக்கும். 10 இல் சுக்கிரன் பலன் செய்யாவிடினும்தீமை இருக்காது. குரு நல்ல நிலையில் இருப்பது விசேஷம். குரு ராசியைப் பார்ப்பதால் சகல தோசமும் நிவர்த்தியாகும்.

**கும்பம்:** அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பது கூடாது. ஆனால், குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. எடுக்கும் கருமங்கள் தடைப்படலாம். தெளிவான சிந்தனை இருக்காது. மனப்பயம் இருக்கும். (2,11) உரிய குரு 8 இல் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களால் பிரச்சினை ஏற்பட இடம் உண்டு. (3,10) உரிய செவ்வாய் 9 இல் இருப்பது பலன் செய்யாது. தொழில்துறையில் முன்னேற்றம்இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (4,9) உரிய சுக்கிரன் 9 இல் ஆட்சியாக இருப்பதால் பெற்றோருக்கு நல்லபலன் உண்டு. வீடு, வாகன சுகம் உண்டு. தெய்வீக அருள் கிட்டும். 7 க்குரிய சூரியன் 10 இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும்.

**மீனம்:** பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.

(1,10) உரிய குரு 7இல் இருப்பது சிறப்பானது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைக் கொடுக்கும் வாய்ப்புள்ளது. சமூகத்தில் உள்ள மதிப்பு உயரும். மேலும் பொறுப்புக்கள் வந்து சேரும். சென்ற இடம் எல்லாம் சிறப்பு உண்டு. தொழில் விருத்தியடையும். ஆனால் இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பதால் தோசமோ தடையோ வரவாய்ப்புள்ளது. (2,9) உரிய செவ்வாய் 8இல் மறைவது; கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்லபலன் இல்லை. (4,7) உரிய புதன் 9இல் இருப்பது நல்ல பலனைச்செய்யாது. ஆனால், தீங்கு இல்லை புதன் 9இல் பலன் செய்வதில்லை. 7 இல் குரு இருப்பதால் திருமணபலன் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். நாலில் சனி இருப்பதால் வீடு, வாகனம் சுகம் இருக்காது. கைமாறிப்போக பலன் உண்டு. சொந்தக்காரருடன் விரோதம் வரவாய்ப்புள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்கை பூண்ட கொற்கைப் பாண்டியன்!

வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப் பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

**யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் தமிழ் நாட்டில் திராவிடகழக பத்திரிகையான நாத்திகம் பத்திரிகையின் துணை ஆசிரியரும் (1958 – 1960) இலங்கையில் தீப்பொறி, ஒரு தீப்பொறி, பல்கலை ஆதியாம் வாராந்த மாதாந்த பத்திரிகைகளின் ஆசிரியரும் பிரபல எழுத்தாளருமான ம.க.அ.அந்தனிசில், சில செய்யுட்களால் மட்டும் அறியப்பெற்றிருந்த நீதி வழுவா பாண்டிய அரசனான மாறன் குலசேகரன் தொடர்பான வரலாற்று அம்சத்தினையும் செவிவழி கதைகளையும் சீராக ஆராய்ந்து முதன் முதலாக தமிழ் கூறும் நல்லுலகிற்கு இங்கு கட்டுரை வடிவில் தந்துள்ளார்.**



சொல்லேருழவன் ம.க.அ.அந்தனிசில்

கம்பர் தனது தனிப்பாடல்கள் சிலவற்றில் உவமானமாக வரலாற்றுத்தரவுகளையும் உட்புகுத்தியிருப்பது கண்கூடு. அவ்வாறான பாடலொன்று வருமாறு:

'கொற்கையான் மாறன் குலசேகரப் பெருமான்/பொற்கையாணதை போதாதோ - நற்கமல / மன்றலே வாரிமணி வாசலையசைக்கத் /தென்றலே யேன் வந்தாய் செப்பு'

ஒருநாளிரவு கம்பர் தன் மனையில் துணைவியுடன் துயில்கொண்டிருந்த வேளை, நடுநிசியில் இல்லக்கதவு மெல்லத் தட்டப்படும் ஓசை கேட்டு விழித்தெழுந்தார். கதவு மீண்டும் மீண்டும் தட்டப்பட்டது.

'என்ன காரியமோ யாரோ கதவைத் தட்டுகிறார்கள்' என்றெண்ணிய கம்பர் கதவைத் திறந்தார். திறந்ததும் தாவி வந்த தென்றல் அவரின் மேனியை மோதித் தழுவியது. காற்றினால்தான் கதவு அசைந்து ஓசையெழுந்ததென்பதை உணர்ந்த கம்பருக்கு பழைய கதையொன்று நினைவிற்கு வந்தது; மேற்சொன்ன பாடலும் பிறந்தது.

'ஓ தென்றலே கொற்கையில் கோலோச்சிய குலசேகரப் பெருமகன் பொற்கை பூண்டது போதாதா? பொய்கையில் தவழ்ந்து நல்ல தாமரையின் நறுமணம் தாங்கிய தென்றலே அழகிய வாசற் கதவைத் தட்டுதற்கு ஏன் வந்தாய் சொல்' என்பது அப்பாடற் பொருள்.

(கொற்கை என்பது தாமிரவருணை ஆறு கடலில் சங்கமிக்கும் இடம். அது பழம்பாண்டி நாட்டின் தலைநகர். அதன் காரணமாகவே மாறன் குலசேகரப் பாண்டியனை கொற்கையான் என்றுரைத்தார் கம்பர்)

**ஏன் பொற்கை?**

மாறன் குலசேகரப் பாண்டியனுக்கு பிறப்பிலேயே ஒரு கை ஊனமா அன்றேல் செருக்களத்திலே ஒருகையை இழந்தானா?

பொய்கையைத் தழுவி வந்த தென்றலுக்கும் பொய்க்கையைப் பூண்டுகொண்ட பாண்டியனுக்கும் தொடர்பென்ன?

நடு இரவில் கம்பர் தன் மனையாளுடன் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் போது தான் கதவு தட்டப்பட்டது. அதன்கண் கம்பருக்கு தன் மனையாள் மீது ஐயம் எழவில்லை. காற்றின் மோதலால் கதவு படபடத்து ஓசையெழுந்ததென்பதை அவர் தெளிந்தார். ஆனால், பாண்டியனின்செயல் விபரீத எண்ணத்தையல்லவா தோற்றுவித்தது!

மாறன் குலசேகரப் பாண்டியனின் வரலாற்றினை அறிந்தவர் மட்டுமே கம்பரின் பாடலைப் புரியமுடியும். பாண்டியன் பொய்க்கை பூண்டமை ஏன்?

'காணார் எனச் செய்யார் மாணா வினை' (பழமொழி நானூறு, 102)

புலவர் முன்றுரையரையன் இயற்றிய 'பழமொழி நானூறு' பாடலில் (இது பதினென் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று) அதற்கான காரணத்தினை அறிய முடியும். அப்பாடல் வருமாறு:-

'எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கித் தனக்குக் கரியாவான் தானாய்ந் - தவற்றை நினைத்துத்தன் கை குறைத்தான் தென்னவனும் காணார் எனச் செய்யார் மாணா வினை'

தான் செய்த குற்றம் தனக்குத் தகுதியல்லவெனக்கருதிய பாண்டியன் நீதியை நிலைநிறுத்த வேண்டி தானே சாட்சியாகத் தன்கையை வெட்டினான் என்று கூறும் இப்பாடல் ஒழுக்கமுடையோர் பிறர் காணவில்லையென எண்ணியோ அன்றி யாரும் அறியமாட்டார்களெனக் கருதியோ தீய செயல்களைச் செய்யமாட்டார்கள் என்பதை உணர்த்துகிறது.

ஆதலின் தான் செய்த குற்றத்திற்காகவே பாண்டியன் தன்கையை வெட்டினான். ஈடாகப் பொய்க்கை பூண்டான். அப்பொய்க்கை பொன்னினால் செய்து பூண்டமையால் பொற்கைப் பாண்டியன் என்று பெயர் பெற்றான்.

தொல்காப்பிய உரையிலும், பாண்டியன் நீதியை நிலைநிறுத்தும் பொருட்டு தன்கையை அரிந்து பொற்கைபூண்டமை சொல்லப்பட்டுள்ளது.

'நாடுவிளங் கொண்புகழ் நடுதல் வேண்டித் தன் ஆடுமழைத் தடக்கையறுத்து முறை செய்த பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்' (தொல். கள. க. இளம்பூ)

பாண்டியன்தனக்குத்தானே கொடுமையான தண்டனை விதித்துக் கொண்டான். அவன் செய்த குற்றம் என்ன? அக் குற்றத்திற்கு ஏன் கையை வெட்டினான்?

**கதவைத் தட்டினான்!**

ஒருநாள் இரவு வேளை தனிமையில் நகர்வலம் வந்த குலசேகரப்பாண்டியன் ஒரு குறிப்பிட்ட வீட்டின் கதவைத் தட்டினான்.

அது தொடர்பான நிகழ்வினை சேர நாட்டு இளங்கோவடிகள் தனது சிலப்பதிகாரம் கட்டுரைக் காதையில் கூறுகிறார்:

(40) "ஒழுக்கொடு புணர்ந்தவிவ் விழுக்குடிப் பிறந்தோர்க்கு இழுக்கள் தாராது இதுவுங் கேட்டி உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி புதவக் கதவம் புடைத்தனன் ஒருநாள் அரச வேலியல்ல தியாவதும்.

(45) புரைதீர் வேலிஇல்லென மொழிந்து மன்றத் திருத்திச் சென்றீர் அவ்வழி இன்றவ் வேலி காவா தோவெனச் செவிச்சூட்டாணியிற் புகையழல் பொத்தி நெஞ்சசுஞ் சுடுதலின் அஞ்சி நடுக்குற்று

(50) வச்சிரத் தடக்கை அமரர் கோமான் உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து இறைக்குடிப் பிறந்தோர்க்கு இழுக்கமின்மை...."

இங்கு அமரர் கோமான் என்பது சக்கரனைக் குறிக்கும். அவனே இந்திரன் (தெய்வேந்திரன்). இந்திரனும் சக்கரனும் ஒருவரென்பதை நாலடியாரின் பாடலால் அறியலாம்.

'சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர் எக்காலுஞ் சொல்லார் மிகுதிச் சொல் - எக்காலும் முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை இந்திரானா வெண்ணி விடும்'

(நாலடியார், 346)

இந்திரனிடம் சக்கர ஆயுதம் இருக்குமென்பர். (வச்சிரப் படை = சக்கர ஆயுதம்) ஆனால், நாலடியார் பாடலில் சொல்லப்பட்டுள்ள சக்கரச் செல்வம் சக்கராயுதத்தை குறிப்பதாகாது.

வச்சிரப்படையுடைய தெய்வேந்திரனின் தலையில் சூடப்பெற்றிருந்த பொன் முடியின் வளையை பாண்டியன் உடைத்தானென்பது புராணம்.

பாண்டியனின் வீரத்தைச் சொல்வதற்காக இளங்கோவடிகள் இப்புராண அம்சத்தையும் குறிப்பிட்டாரென்க.

மேலே சொல்லப்பட்டுள்ள கட்டுரைக் காதைப் பகுதிக்கு புலியூர்க் கேசிகனின் தெளிவுரை வருமாறு:

".....சிறந்த பாண்டியர் குடியில் பிறந்தவர்க்கு அவ்வாறு நேர்ந்து அதுவும் குற்றம் விளைவிப்பதில்லை. இதனையும் கேட்பாயாக!



தன் கணவனைப் பிரிந்து தனித்து வாழ்ந்தவளான கீரந்தை என்பவனின் மனைவியினது வீட்டின் கதவை ஒரு நாள் (அரசன்) தட்டினான்.

"அரசனுடைய காவலல்லாது வேறு யாவதும் குற்றமற்ற காவலாயிராது என்று கூறி, காவலற்ற இவ்விடத்திலே இருத்தி விட்டு, அன்று நீர் போயினீரே? இன்று அந்த அரச வேலி இருந்தால் என்னை இவ் விடரினின்றும் காவாதோ" என்று கூறி அவள் (கீரந்தை மனைவி) வருந்தினாள்.

அச்சொல்லானது பழுக்கக் காய்ச்சிய ஆணியினாற் செவியினைச் சுடுவது போன்று பாண்டியனின் காதுகளிலே சுட, அதனால் நெஞ்சமும் சுடுதலை உடையவனாகி அஞ்சி நடுங்கியவனாக, வச்சிரப் படையினைத் தன் பெருங்கையிலேயுடைய அமரர் கோமானின் உச்சியிலே விளங்கிய பொன்முடியின் வளையினை உடைத்த தன் கையினையே துண்டித்தனன்.

(வளையாத) செங்கோலினையும், குறைபடாத வெற்றியினையும் உடைய இத்தகைய பாண்டியனின் அரச குடியிலே பிறந்தவர்களுக்கு என்றும் குறைபாடே இல்லையாம் என்றவாறு.

**பிராமண வீடா?**

மாறன் குலசேகர பாண்டியன்பிராமண வீட்டுக் கதவைத் தட்டினானா? அதற்கு ஆதாரமில்லை!

முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்திற்கு முதற் கண் அரும்பத உரையாசிரியரும் பின்னர் அடியார்க்கு நல்லாரும் உரை வகுத்தனர். அடியார்க்கு நல்லாரின் உரை நூன் முழுமைக்கும் கிடைக்கப் பெறவில்லை.

கிடைத்தவற்றைத் தொகுத்து டாக்டர் உ.வே.சாமிநாதஐயர் சென்ற நூற்றாண்டில் (1892) முதன்முதல் சிலப்பதிகாரத்தினை அச்சில் பதிப்பித்தார்.

இந்நூற்றாண்டில் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய நாவலர் பண்டித.ந.மு. வேங்கடசாமி நாட்டார் (1942), புலவர் பொ.வேலுத்தேவர் சோமசுந்தரனார் (1969) ஆகிய இருவரும் கீரந்தையையும் மனைவியையும் பிராமண குலத்தவர்களாகக் குறிப்பிடுகின்றனர்.

அதனாற்போலும் கீரைந்தை காசிக்குச் சென்றான் என்ற கதை பிறந்தது. சரி பிராமணர் மட்டுமன்றி பிறரும் காசிக்குச் செல்லமுடியாதா? தவிரவும் வறுமையை விரட்டப் பொருள் கொணரப் புறப்பட்டவன் காசியில் எப்படி 'காசு' தேடுவது? காணிக்கையும் செலுத்தத்தான் (காசும் பிறவும்) காசிக்குச் செல்வார்கள். காசு தேடுவதற்கல்ல! அதேவேளை புலியூர்க் கேசிகனின் தெளிவுரையில் கீரந்தை பிராமணனாகச் சொல்லப்படவில்லை.

சிலப்பதிகார கட்டுரைக் காதையின் பகுதி இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளது. ஆசிரியரான இளங்கோவடிகளே அதனைக்

**இலக்கியப் பொழில்**

குறிப்பிடாதபோது, கீரந்தையையும் மனைவியையும் பிராமணகுலத்தவரென எப்படி துணிவது? ஆதாரம் யாது?

"உதவா வாழ்க்கைக் கீரந்தை" என்ற சொற்றொடரில் குலமோ, பெருமையோ சொல்லப்படவில்லை; வறுமைதான் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அப்படியிருக்க செங்கோல் ஏந்தும் கரத்தினால் அரசன் தட்டிய வீட்டுக்கதவு ஒரு பிராமணனின் வீட்டுக்கதவாக இருக்க வேண்டுமென்று உரையாசிரியர்கள் உயர்வாக காண்பிக்க விளைந்தனர் போலும்!

ஆனால், பாண்டியன் ஒரு வீட்டின் கதவைத் தட்டினான் என்று மட்டுமல்ல பல வீடுகளின் கதவுகளைத் தட்டினானென்ற பிறிதொரு கதையும் தமிழ்நாட்டில் பழங்காலம் முதல் வழக்கில் உள்ளதே. ஆதலின் அப்பல வீடுகளும் பிராமணர்களின் வீடுகளா? இவற்றில் இரண்டாவது கதையே நடந்தேறிய நிகழ்வுக்குப் பொருந்துவதால் அக்கதையினை இங்கு காண்போம்.

**ஏன் தட்டினான்?**

கடைச்சங்க காலத்தில் தென்பாண்டி நாட்டில் செங்கோலோச்சிய அரசர்களுள் ஓங்கு புகழ் கொண்டுதிகழ்ந்தவன் மாறன் குலசேகரப் பாண்டியன்.

அவன் நீதிவழுவாதவனெனப் புலவர்களாலும், குடிமக்களாலும் துதிக்கப்பெற்றவன். செருக்களம் புகுந்து வெற்றிகள் சூடிய வீரனுங்கூட!

முற்காலத்தில் தமிழரசர்கள் நாட்டு நடப்பு அறிவதற்கு வேண்டி இரவு வேளைகளில் மாறுவேடம் பூண்டு நகர சோதனைக்குப் புறப்படுவது வழக்கம்.

அவ்வரசர்கள் பொய்த்தாடி வைத்திருப்பார்கள். அவர் தம் இடையில் உடைவாள் தொங்கும். தமது மேனியை தடித்த போர்வையால் போர்த்து மூடிக்கொள்வர். அப்போர்வை உடைவாளினை மறைத்துவிடும்.

இரவில் யாராவது வழிப்போக்கர் அவ்வரசர்களைக் கண்டால் யாரோ சாமியார் போகிறார் என்றுதான் நினைத்துக்கொள்வர்.

ஒருநாளிரவு வழமைபோல் குலசேகரப் பாண்டியன் மாறுவேடம் தாங்கி நகர சோதனைக்குப் புறப்பட்டான். நெடுவழி நடந்தான்.

கொற்கை வீதிவழி அரசன் திரும்பி வந்து கொண்டிருந்தபோது ஒரு வீட்டில் பெண்ணின் அழுகுரல் கேட்டது. அரசன் துணுக்குற்றான். விரைந்து அவ்வீட்டினருகே சென்று உற்றுக்கேட்டான். (அக்காலங்களில் பெரும்பாலும் வீடுகளுக்கு அரண் (வேலி) இருப்பதில்லை)

அது கீரந்தையின் வீடு. அவன் ஏழையானவன். வறுமையின் பிடியில் சிக்கித் தானும் மனைவியும் உண்டு உடுத்து வாழ முடியாத பயனில்லா வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தான்.

"உதவா வாழ்க்கை" என்பதற்கு பிறருக்கு ஏதும் உதவிசெய்யவியலாத வறுமையுடைய வாழ்க்கை என உரையாசிரியர்கள் பொருள் சொல்வர்

(15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல கதையில் 'அமிர்தம்' படம்

எழுத்துப் பட்டறை என்ற நிறுவனத்தின் சார்பாக வேதம் புதிது கண்ணன் பெருமையுடன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி தயாரித்து இயக்கும் திரைக்காவியம் 'அமிர்தம்'.

பாரதிராஜா, கே.பாலச்சந்தர், எஸ்.பி.முத்துராமன், பரதன் வி.எம்.சி.ஹனிபா மற்றும் முன்னணி இயக்குனர்களுடன் இணைந்து 60 இற்கும் மேற்பட்ட படங்களில் பணிபுரிந்திருக்கும் வேதம் புதிது கண்ணன், சத்தியராஜ் நடித்த வேதம் புதிது என்ற திரைப்படத்தில் இயக்குனர் பாரதிராஜாவால் கதை, வசனகர்த்தாவாக அறிமுகப்படுத்தப்பட்டவர்.

அந்தத் திரைப்படத்தை தன்னுடைய கூர்மையான வசனங்களால் பரபரப்பாக பேசவைத்தவர். அந்த படத்திற்கு சிறந்த திரைக்கதை வசனத்திற்கான தேசிய விருதும் கிடைத்தது.

சின்னத்திரையில் பல மெகா தொடர்களுக்கு கதை, வசனம் எழுதியதில் அண்ணி, சஹானா, நிம்மதி உங்கள் சாய்ஸ், அக்கா முதலியவை எல்லாருடைய நன்மதிப்புக்களையும் பெற்றவை.

மரபுக் கவிதைகள், பிளாஸ்டிக் விழுதுகள், விடியல் புதிது, புது முகம் உட்பட பல டெலிபிலிம்களை எழுதி இயக்கியும் அனுபவம் பெற்றவர்.

இக்கதையை அனுபவமிக்க வேதம் புதிது கண்ணன் 'அமிர்தம்' என்ற இத்திரைப்படத்தின் மூலம் தயாரிப்பாளராகவும், இயக்குநராகவும் அவதாரம் எடுக்கிறார்; காதல் கலந்த சினிமாதான் இந்த 'அமிர்தம்' படத்தில் கருவாக உள்ளது.



-நவ்யா நாயர்-

அழகிய தீயே படத்தில் நடித்த நவ்யா நாயர் இப்படத்தின் கதாநாயகியாக நடிக்கிறார்.

இவருடன் கணேஷ் என்ற புதுமுகம் நடிகர் கதாநாயகனாக அறிமுகமாகிறார். இசை; இளையராஜாவின் வாரிசு பவதாரினி.

## சினி டிப்ஸ்

தனுஷ் - ஐஸ்வர்யா திருமணத்தை எளிதாக நடத்த திட்டமிட்டிருக்கிறார்கள். திருமணம் ரஜினி வீட்டிற்குள்ளேயே நடைபெறுமாம். முக்கிய விருந்தினர் ஒரே ஒருத்தர்தான். அது இயக்குனர் பாலச்சந்தர்!

* * *

தயாரிப்பாளர் சங்கத்தின் சார்பில் முதல்பருக்கு எடுக்கப்படும் விழாவில் மேடை நடனம் ஆட முன்னணி ஹீரோக்கள் மறுத்துவிட்ட நிலையில் ஆட சம்மதித்த இருவர். சிபிராஜ், மற்றும் ஜூனியர் சிவாஜி மட்டும்தானாம்.

* * *

ஆபாச மலை ஷகிலா, நகைச்சுவைக் காட்சிகளுக்குத் தாவிவிட்டார். நகைச்சுவைக் கதாபாத்திரம் ஹிட்டாகிவிட்டால் தொடர்ந்தும் நகைச்சுவைக்கு ஜே போடுவாராம்!

* * *

கிறுக்கல் என்ற கவிதை தொகுப்பை வெளியிட்ட பார்த்திபன் அடுத்து ஒரு தொகுப்பை வெளியிடப்போகிறார். அதன் தலைப்பு 'சும்மா'.

* * *

மன்மதன் படம் முடிந்ததும் ஒரு படத்திற்கு இசையமைக்க ஒப்புக் கொண்டுள்ளாராம் நடிகர் சிம்பு. தந்தையை போல இவரும் சகலகலா வல்லவர் என்பதை நிரூபிப்பார் போலும்.

* * *

திருமணத்திற்கு பின்னர் சினிமாவில் மட்டுமல்ல. விளம்பரப் படங்களிலும் நடிக்க ஆரம்பித்து விட்டார் சிம்ரன். சமீபத்தில் அவர் நடித்த விளம்பரம் சமயல் பருப்பு ஒன்றுக்கான விளம்ரமாகும், நடிக்கும் படம் சந்திரமுகி. திருமணத்திற்கு முன்னர் கூறியதை மறந்து விட்டார் போலும்.

## நிர்வாணமாக நடிப்பது தப்பு!

'சித்ரம்' படத்தில் அறிமுகமாகி 'மின்னலே' படத்தின் மூலம் வசீகாரா என நெஞ்சினிக்க என்று இளசுகளின் தூக்கம் கெடுத்தவர் ரீமா சென். தூள், பகவதி, ஜே.ஜே சமீபத்தில் திரைக்கு வந்திருக்கும் 'செல்லமே' ஆகிய படங்களில் நடித்திருக்கும் ரீமாசென் ரசிகர்களின் விருப்பத்திற்கேற்ப நடிப்பதுதான் தன் விருப்பம் என்கிறார். ''கவர்ச்சியாக நடிப்பேன். ஆனால், ஆபாசமாக நடிக்கமாட்டேன். சினிமாவில் நீண்டகாலமாக நடிகைகள் இதையே சொல்லி வருகிறார்கள்'' என்றார். கவர்ச்சிக்கும், ஆபாசத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று கேட்டபோது — ''எல்லா நடிகைகளுக்கும் கவர்ச்சி அவசியம். தலைமுதல் கால்வரை மூடிக் கொண்டு நடித்தால் யாரும் பார்க்க மாட்டார்கள். கவர்ச்சியும் சினிமாவின் ஒரு பகுதிதான். முத்தம் கொடுத்து நடிப்பது, ஓரளவு ஆடைகளை குறைத்தது நடிப்பது ஆபாசம் அல்ல. ஆனால், மோசமான கோணத்தில் கெமராவை வைத்து எடுக்கப்படும் காட்சிகள்தான் ஆபாசம்'' என்றார்.



ரீமாசென்

நிர்வாணமாக நடித்த நடிகைகளை நீங்கள் கண்டிப்பீர்களா என்று கேட்டபோது — ''நான் கண்டிக்க முடியாது. நான் என்னுடைய கருத்தைத்தான் சொன்னேன்'' என்றார்.

உங்களுக்கு நிர்வாணமாகநடிப்பதற்குஅழைப்புவந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டதற்கு— ''என் வாழ்நாளில் எந்த சூழ்நிலையிலும் அப்படி நடிக்க ஒத்துக் கொள்ளவே மாட்டேன்'' என்றார்.

உங்களுக்கு ஆண் உண்பர்கள் உண்டா? அல்லது யாரையாவது காதலிக்கிறீர்களா ஏன்றதற்கு— ''இதுவரை இல்லை'' என்றார்.



'காதல் செய்ய விரும்பு'
- சந்தோஷ், ஸ்ரீஜா-

## சோனியா ஹிந்தியில் நடிக்கனுமாம்

மனசுக்குள் வேண்டாததைப் போட்டு குழப்பிக்கக் கூடாது என்று சொல்லும் சோனியாஅகர்வால், ஹிந்தி சினிமாவில் நல்ல கதாப்பாத்திரத்தில் நடிச்சு பெயர் வாங்குவதை லட்சியமாக வைத்திருக்கிறேன் என்கிறார்.

எப்பவும் ஜாலியாக இருக்கணும். நான் அப்படிப்பட்ட ரகம்தான் என்றும் சொல்லும் சோனியா, மனசுக்குள் வேண்டாதகை போட்டுக் குழப்பிக்கக் கூடாது. ஹிந்தி சினிமாவில் நல்ல கதாப்பாத்திரத்தில் நடிச்சு பெயர் வாங்ணும்னு லட்சியம் வைத்திருக்கிறேன்.

சினிமாவை குடும்பமாக நினைக்கிறேன், சீக்கிரம் உணர்ச்சி வசப்படுவேன். அது எனக்குள்ள குறை. பொய் பேசுபவர்களை பிடிக்கவே பிடிக்காது என்றார் சோனியா அகர்வால். அவர் லேட்டசாக நடித்து வெளிவந்திருக்கும் 7 ஜி ரெயின்போ காலனியில் நல்ல கதாப்பாத்திரம் கிடைத்திருக்கிறது என்றும் சொன்னார்.

## சந்திரமுகியில் ரஜினியுடன் நடிக்கத் தயார் – கமலஹாசன்

சந்திரமுகியில் நடிக்க எனக்கு அழைப்பு வந்தால் ரஜினியுடன் இணைந்து நடிக்கத் தயார் என தனது 50 ஆவது பிறந்த தின விழாவில் சகலகலா வல்லவர் கமலஹாசன் தெரிவித்தார். இவ்வாறு தெரிவித்த கமலுடன் சில கேள்விகளை நாங்கள் தொடுத்தோம்.

கே: சந்திரமுகி படத்தில் ரஜினியுடன் சேர்ந்து நீங்களும் நடிக்க வேண்டும் என்று நடிகர் பிரபு உங்களிடம் கேட்டாரா?

ப: சிவாஜி புரொடக்ஷன் எனது அப்பா வீட்டுப் பட நிறுவனம். அவர்கள் கேட்டால் நடிக்காமல் இருப்பேனா?

கே: ரஜினியுடன் நீங்கள் இணைந்து நடிக்கும் படம் ஒன்று இருக்கிறது என்று முன்னதாகக் கூறியிருந்தீர்களே! அது இதுதானா?

ப: அது வேறு கணக்கு.

கே: தனிப்பட்ட வாழ்க்கை குறித்து.. இப்போது உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது — போகிறது?

ப: முன்னர் எப்போதையும் விட நான் இப்போது மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். என் வாழ்க்கை அமைதியாகச் சென்று கொண்டிருக்கிறது. என் மூத்த மகள் ஸ்ருதி சென்னையிலேயே இருப்பதால் தினமும் அவளைச் சந்திக்க முடிகிறது. எனது இளைய மகள் அக்ஷரா, தாயுடன் மும்பையில் இருக்கிறார். அவளை மாதத்திற்கு ஒரு முறை சந்திக்கிறேன். என் பிள்ளைகள் இல்லாத வாழ்க்கையை கடினமானதொன்றாகக் கருதுகிறேன்.

இப்போது, எனது முகத்தில் புன்னகை மலர்ந்திருக்கிறது. அது எனது படங்களிலும் எதிரொலிப்பதை நீங்கள் பார்க்கலாம்.

கே: உங்கள் வாழ்க்கையில் மீண்டும் ஒரு புதிய பெண்யொருவர் வந்திருக்கிறார் என்று கூறப்படுகிறதே... உண்மையா?

ப: ஆம்! அது உண்மைதான். சென்னையில் இருக்கும் அனைவருக்கும் இந்த விடயம் தெரியும். அந்தப் பெண்ணுடன் நான் மிகவும் சந்தோஷமாக அதியாக இருப்பதாக உணர்கிறேன்.

இதற்கு முன்னர் என் வாழ்வில் குறுக்கிட்ட எல்லாப் பெண்களையும் விட அந்தப் பெண்ணுடன் நான் கொண்டுள்ள உறவுமன அமைதியைத் தருகிறது. எனது வாழ்க்கையும் மிக அமைதியாகச் செல்வதை உணர்கிறேன்.



கமல்

கே:தற்போது வர்த்தக ரீதியிலான படங்களைத் தவிர்க்க விரும்புகிறீர்களா?

ப: எனது அனைத்துக் படங்களும் 'நாயகன்', 'தேவர் மகன்' உட்பட அனைத்தும் வர்த்தக ரீதியிலான படங்கள் தான். எனினும் நான் வித்தியாசமாக நடிக்க விரும்பும் படங்களை எனது சொந்தத் தயாரிப்பாக 'ராஜ்கமல் பிலிம்ஸ்' சார்பில்தான் தயாரிக்கப்படும். நான் தற்போது நடிக்கும் படம் ஹிந்தி மற்றும் தமிழில் வெளிவர உள்ளது. இதில் காதலை சொல்லும் ஸ்பெயின் படம் ஒன்றின் கதையை மீள் உருவம் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகம் கடிக்கும் தியா



'குறும்பு' நாயகியிடம் ஒரு பழக்கம். தூங்குகிற நேரம் போக மற்ற நேரமெல்லாம் நகத்தை கடித்து துப்பியபடியே இருக்கிறார். தியாவுக்கு அப்படி என்ன டென்ஷன்?

'குறும்பு' படத்தில் இரண்டு ஹீரோயின், கதை நல்லா இருந்ததால சரின்னு ஒத்துக்கிட்டேன். 'ட்ரீம்ஸ்' படத்தில நான் தான் ஹீரோயின்னு சொன்னாங்க. கடைசியில வேறொரு நடிகையையும் நடிக்க வச்சாங்க. ஆனாலும், படம் முழுக்க நான்தான் வர்றேன்.

'கற்க கசடற' படத்திலும் இந்த மாதிரி ஆகிப்போச்சு' என்று படபடத்தவர், 'இனி தனி ஹீரோயினாக மட்டும்தான் நடிப்பேன்'' என்றார் உறுதியாக.

அழகான நடிகைகளை பார்க்கும் போது தோன்றும் அந்த கேள்விக்குத் தாவினோம்.

உங்க வருங்கால கணவர் எப்படி இருக்க வேண்டும்?

''படிச்சவரா இருக்கணும். நான் சிவப்பு, அவர் கறுப்பா இருக்கக்கூடாது. என்னைவிட கண்டிப்பா உயரமாக இருக்கணும். முக்கியமா நெஞ்சில் வஞ்சம் இருக்கக்கூடாது.

'ட்ரீம்ஸ்' படத்தில் உதட்டோட உதடு வைத்து முத்தம் கொடுத்து அசத்தியிருக்கிறீர்களே...! முத்தத்தைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?

''காட்சிக்குத் தேவைப்பட்டா சரிதானே. கதாபாத்திரத்திற்கு ஏற்றமாதிரி நடிக்கத் தானே வேணும்.''

# தேவதையைக் கண்டதால் கலங்க வைக்கிறார் தனுஷ்

பல வெற்றிப் படங்களைத் தயாரித்த ரோஜா கம்பைன்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் தனுஷ் முதன்முறையாக நடிக்கும் படம் தேவதையைக் கண்டேன். இப்படத்தை புதிய இயக்குநர் ஜி.பூபதி பாண்டியன் இயக்குகிறார்.



காதலிப்பதற்கு முன் ஆயிரம் தடவை யோசிக்கலாம். காதலை ஏற்றுக்கொண்டபிறகு எக்காரணம்கொண்டும் பின் வாங்கக் கூடாது. அப்படி பின்வாங்கினால் ஏமாற்றப்பட்ட காதலன் வாழ்க்கை என்னவாகும்? இந்தக்கேள்விக்கு விடையாக வருவதுதான் வித்தியாசமான காதல் கதையான தேவதையைக் கண்டேன்.

தனுஷ் இதுவரை நடித்த படங்களிலிருந்து முற்றிலும் வித்தியாசமான கதை அம்சம் கொண்ட படமாக தேவதையைக் கண்டேன் படம் இருக்குமாம்! அதற்கு தனுஷ் ஏற்றிருக்கும் கதாபாத்திரமே மிகச் சரியான உதாரணம். தெருத் தெருவாய் கைக்கிளில் சுற்றி டீ விற்கும் மொபைல் டீ கடைக்காரராக, பாபு என்ற ஏழை இளைஞனாக நடித்திருக்கிறார் தனுஷ். அது மட்டுமல்ல தன் கதாபாத்திரத்தின் தன்மையை உணர்ந்து தன் நடிப்பால் அந்த பாத்திரத்துக்கு உயிரூட்டி இருக்கிறார். ஏழு பேண்ட், பத்து சட்டை, ஒரு செருப்பு இதுதான் தேவதையைக் கண்டேன் படத்தில் தனுஷ் பயன்படுத்திய உடைகள். ஹீரோயிசம் இல்லாத யதார்த்தமான ஹீரோவாய் தனுஷ்!

கிளைமாக்ஸ் காட்சி உட்பட சில காட்சிகளில் இருதயத்தை கனக்கச்செய்யும் அளவுக்கு அற்புதமாய் நடித்திருக்கிறர் தனுஷ். நகைச்சுவை நடிப்பிலும் கலக்கியிருக்கிறார்.

# பழக்கூட்டமாய் ப்ரியாமணி

திராட்சை கண்கள், அப்பிள் உதடு, ஒரேஞ்ச் நிறம்... சின்ன பழக் கூட்டமாக இருக்கிறார் ப்ரியாமணி.



ப்ரியாமணி

முதல் படம் 'கண்களால் கைது செய்' பாரதிராஜா இயக்கம். இரண்டாவது படம் 'அது ஒரு கனாக்காலம்' இயக்குநர் பாலுமகேந்திரா.

இப்படியொரு அதிர்ஷ்டம் யாருக்குக் கிடைக்கும்? ஆனாலும், ப்ரியாமணியின் நிலை இன்னும் முன்னேற்றகரமாய் இல்லை.

கனாக்காலம் எனக்கு நிறைய வாய்ப்புகளை பெற்றுத்தரும் என்று சொல்லும் ப்ரியாமணி, நிஜத்தில் ரொம்ப சோம்பேறியாம்.

''பாடசாலை வீட்டுவேலைகளைச் செய்ய வைக்கிறதுக்குள்ள போதும்போதும்னு ஆயிடும். படிக்காமலே புத்தகங்களை கிழிக்கிறதுல ப்ரியா கில்லாடி'' என்று செல்லமாக அவரை கடிந்து கொள்கிறார் அவர் அம்மா.

பத்தாம் வகுப்பில் பிட் எழுதி வைத்து வீட்டில் மாட்டிக் கொண்ட அனுபவமும் ப்ரியாமணிக்கு இருக்கிறது!

சரி, படப்பிடிப்பு இடத்தில் இயக்குநர் சொல்றதை செய்யறேன். பாரதிராஜா சார் எந்த சீன் ஆனாலும் நடிச்சு காட்டுவார். பாலுமகேந்திரா சார் சீன் இதுதான்னு சொல்லிவிட்டு நம்மையே நடிக்க விடுவார்.'' என்றார் பழக்கனி ப்ரியாமணி.

# மீனாவின் முட்டை காதல்!



மீனா

பார்க்காத காதல் தொலைபேசிக் காதல், இணையத்தளக் காதல் என்றெல்லாம் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால், முட்டை காதல்?

'கண்ணம்மா' படத்தில் ஒரு முட்டையால் மீனாவுக்கு ஹீரோ பிரேம்குமார் மீது காதல் உருவாகிறது. அதுவும் சாதாரண முட்டையல்ல. அசிட் முட்டை!

கதைப்படி மீனா மீது ஒருவன் அசிட் முட்டை வீசுகிறான். இதைப் பார்த்த ஹீரோ மீனாவை காப்பாற்ற முட்டையை தனது முதுகில் தாங்கிக் கொள்கிறார்.

முதுகு மொத்தமும் பொரித்த பணியாரம் போல ஆக. ஹீரோ மருத்துவமனையில். ஹீரோவைப் பார்க்க வரும் மீனாவுக்கு காதல் கண்டபடி எகிறுகிறது.

இந்தக் காட்சிக்கு கருணாநிதி வசனம் எழுதியிருக்கிறார். படத்தில் எல்லையில் காவல் காக்கும் வீரர்களுக்கு மீனா நாடகம் நடத்தி நிதி வசூல் செய்யும் காட்சியும் இப்படத்தில் இருக்கிறது.

இதற்கு கருணாநிதியே பாடல் எழுதியிருக்கிறார்.

''என் இருவிழி மழைதனை காணாதீர்
என் இதயம் மகிழ்வதை காண்பீரே
போர்வாள் ஏந்தி...
என் மகன் பொன்முடி...
புல்லரைவீழ்த்தி உயிர்துறந்தான்''

என்று செந்தமிழ் சொல்கிறது இப்பாடல்.

# சந்திரமுகி நாயகிக்கு இன்ப அதிர்ச்சி!

ரஜினிக்கும் ஜோடி என்று சென்னையில் இருந்து தொலைக்காட்சியில் வந்த தகவலை சொன்னதும் ஆகாயத்தில் மிதந்தேன்.

சந்திரமுகியில், ரஜினிகாந்தின் ஜோடியாகி நடிக்கும் நயன்தாரா கேரளா குயில். கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படித்தபோது இயக்குநர் குரியன் சினிமாவுக்கு இழுத்து வந்தார்.

'மனசின் அக்கரை', 'விஸ்மயல் தும்பத்து' மற்றும் 'நாட்டு ராஜா' படங்களில் நடித்தபின் சரத்குமார் ஜோடியாக 'ஐயா' படம் மூலம் தமிழில் பிரவேசித்தவர். இப்போது ரஜினிக்கு ஜோடி. சென்னையில் இருந்து தொலைபேசியில் வந்த தகவலை சொன்னதும் ஆகாயத்தில் மிதந்தேன் என்று சொல்லும் நயன்தாரா உண்மையாகவே ரஜனி ரசிகையாம்.

ஜக்குபாய், சந்திரமகி படச் செய்திகளை தொடர்ந்து பத்திரிகைகளில் படித்துக்கொண்டிருந்த எனக்கு இந்த வாய்ப்பு இன்ப அதிர்ச்சி என்றார் அவர்.

ராமாவரத்தில் உள்ள சிவாஜி கார்டன். நீண்ட வயல்வெளிகளையும், தோப்புகளையும் தென்னைமரங்களையும் கொண்டது. இங்கு சந்திரமுகி படப்பிடிப்பு நடக்கிறது. இதில் ரஜினியின் நடை, உடை, பாவனைகள் 'பாட்ஷா' ஸ்டைலில் இருப்பதாக படக் குழுவினர் கூறுகின்றனர்.



'அந்தநாள் ஞாபகம்'
-ரமணா, ஸ்ரீதேவிகா-

# ஹொலிவூட் - 7 தளபதிகள்

ரசிகர்களை மிரட்டும் அதிரடி ஆங்கிலப் படம். இதில் 7 தளபதிகள்.

முதல் உலகப் போருக்கு முன்பாக நடந்ததாகச் சித்திரிக்கப்படும் கற்பனைக் கதை.

குறிப்பிட்ட சில நாடுகளில் ஆதிக்க வெறியில் உலக நாடுகள் போர் அபாயத்தை சந்திக்க வேண்டிய நிலை.

7 சாகச வல்லவர்கள் ஒன்றுசேர்ந்து ஆதிக்க வெறிகொண்ட நாடுகளுக்கு எதிராக உலகைக் காக்கும் முயற்சியில் இறங்குகிறார்கள். நீர் மூழ்கிக் கப்பல் மூலம் தங்கள் பயணத்தை தொடங்குகிறார்கள்.

இந்த 7 பேர் கூட்டணிக்குள்ளேயே தீய சக்திகளின் கூட்டாளி வனும் இருப்பதும் தெரியவர வெனிஸ் நகரில் நடக்கும் உலகத் தலைவர்களின் மாநாட்டை குண்டுவைத்து தகர்க்கவும் தயாராகிறது அந்த தீயசக்தி. வெற்றியாருக்கு? என்பது கிளைமாக்ஸ்.

கூட்டணித்தலைவராக சிக்கிக் கொண்ட சீன்கானரி அவர்களிடம் இருந்து மீளும் காட்சி ரசிகர்களை இருக்கை நுனிவரை கொண்டு வருகிறபரபரப்பு.

அனல் பறக்கும் இன்னோருவர் கேப்டன் நிமோ என்றால்... அழகுப்புயலாக பேடா வில்சன். ரத்தக் காட்டேரி மாதிரி குணம் ஒருபக்கம் மிரள வைக்க.. அந்த முத்தக்காட்சி ஜில்லென்றது.

அரைவாசித் தலையுடன் வருவது, பாதி உடம்புடன் வருவது என்று அந்த மர்ம மனிதன் கேரக்டரில் வரும் டோனிகுர்ரன் பிரமாண்டமாக அசத்துகிறார்.


நீர்முழ்கிக் கப்பலையும், தீவிரவாதிகளையும் ஆயுதக் கிடங்கையும் காட்டும் வீடியோ இதுவரை இல்லாத பிரமிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

ஸ்டிபன் நாரிங்டனின் இயக்கத்தில் ஏகப்பட்ட சுவாரசியங்களும், பரபரப்புப் காட்சிகளும் ரசிகர்களை விறுவிறுப்பின் உச்சத்துக்கே அழைத்துச் செல்கின்றன.

பலமுறை பார்க்கத் தூண்டும் ஆங்கிலப் படைப்பு 7 தளபதிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்



கிருஷ்ணசாமி சுதா,
யாழ்.பல்கலைக்கழகம்.

**கேள்வி:–** பித்தா! உமக்கு உலகில் மிகமிக பிடித்தது எது அதாவது நீர் எதில் அளவு கடந்த அன்பு வைத்துள்ளீர்? உமக்கு பிடிக்காதது எது?

**பதில்:–** பிடித்தது – நான் அளவு கடந்த அன்பு வைத்திருப்பது – எல்லாம் எனது மனைவியில்தான் (இந்த பதில் எழுதும் போது எனது மனைவி அருகில் நின்கிறாள்) பிடிக்காதது எனது மனைவி (இப்போ அவள் சென்றுவிட்டாள்)

கே.எஸ்.பற்றிமா, இரணைப்பாலை.

**கேள்வி:–** எனது அருமை மருமகன் பித்தா! என்னுடைய தோழிக்கு இப்போது வயது 25. அவள்; தான் இப்போது 8 மாதக் குழுந்தையாக வர ஆசைப்படுகிறாள். இதற்கு என்ன மருமகனே செய்யலாம்?

**பதில்:–** குட்டி பாப்பா ஒன்றை தூக்க வேண்டிய வயதில் இந்த பாப்பா... தான் குட்டி பாப்பாவாக ஆசைப்படுகிறது. அப்படி குட்டி பாப்பாவாக மாறுவது நல்லதுதான். குடும்ப கவலை, காதல் தொல்லை, படிப்புத் தொல்லை பெண்களாயின் அந்த 3 நாள் தொல்லை எல்லாம் இல்லாமல் நிம்மதியான வாழ்க்கை தான். ஆனால் என்றும் பாப்பாவாகவே இருந்தால் பாப்பா.. ஒரு பாப்பாவை தூக்குவது எப்போது.

ச.யோக சீலன், பாரதிபுரம் கிழக்கு.

**கேள்வி:–** ஆண்கள் பெண்களைக் கண்டதும் கண் இமைகூட மூடாமல் பார்க்கிறார்களே ஏன்பித்தா?



**பதில்:–** பெண்கள் இப்போதெல்லாம் இறுக்க – இறுக்கவும் – இறுக்காத இடங்களை கிழித்துவிட்டும் நடமாடும் கண்காட்சியாகத் திரிகிறார்களே... ஆண்கள் எப்படி இமையை மூடுவது.... பெண்கள் உடம்பை மூடிக்கொண்டு திரிந்தால் .... ஆண்கள் இமையை மூடிக் கொண்டு திரிவார்கள்.

இவர்கள் மூடாவிட்டால். அவர்களும் மூட மாட்டார்கள்.

அருள் ஞானசீலன் யாசிதா, சரசாலை தெற்கு.

**கேள்வி:–** தள்ளாடும் வயதிலும் பதவி ஆசை பிடித்து அலையும் ஆனந்த சங்கரி பற்றி கூறுங்களேன்?

**பதில்:–** அவருக்கு பதவிகள் மேல் ஆசையே இல்லை என்று அவர் அடிக்கடி கூறுகிறாரே..... நீங்கள் பதவி ஆசை என்று சொல்கிறீர்கள்.... தவிர... ஆடிய கால்களும் பாடிய வாயும் சும்மா இருக்காது என்பார்கள்... இவர் காலம் காலமாக ஆட்சியாளர்களின் தாளத்துக்கு ஆடியவர். அதனால் அவர்களின் செல்லப்பிள்ளையாக இருந்தவர். ஆனால், இப்போ சாயம் வெளுத்துத் போனதால். மக்கள் பிரதிநிதித்துவம் இன்றி தூக்கி வீசப்பட்டு விட்டார். இனி என்ன செய்வது? பிழைப்புக்கு என்ன வழி? அதனால் ஆட்சியாளர்களின் தாளத்துக்கு ஆட வேறு வழியில்லை. எனவே புலி எதிர்ப்பு என்ற போர்வையில் இப்போதும் அவர்களுக்கு செல்லப் பிள்ளையாக இருக்கிறார்.

அ.அருஞ்சலை, வத்தளை.

**கேள்வி:–** பித்தா! கவிஞர்கள் பெண்களை மட்டுமே வர்ணித்து கவிதை எழுதுகிறார்களே? ஆண்களை ஏன் வர்ணிப்பதில்லை?

**பதில்:–** சரி.... ஒரு உதாரணம் நிலவு ஒரு பெண்ணாகி உலவுகின்ற அழகோ என்ற பாடலை கொஞ்சம் மாத்தி ஆண்களுக்காக பாடிப்பார்ப்போம்.

பொங்கல் பானை ஒரு வயிறாகி வந்து நின்ற அழகோ. ஏயார் போட் றண்வே ஒரு தலையாகி மாறிவந்த வடிவோ...

இப்படி ஒரு பாடல் தேவையா...

ரீ.ஆர். , உடையார் கட்டு.

**கேள்வி:–** பித்தா! பெண்கள் பின்னால் ஆண்கள் அலைகிறார்களா? அல்லது ஆண்கள் பின்னால் பெண்கள் அலைகிறார்களா?

**பதில்:–** அவர்கள் பரகசியமாக; இவர்கள் ரகசியமாக.

வை.குழந்வேல், வத்தளை.

**கேள்வி:–** பித்தா! குழந்தைகளுக்குரிய பாலை பெரியவர்கள் குடிக்கலாமா?

**பதில்:–** புட்டிப்பால் என்றால் பாதகமில்லை... அவசர தேவைக்கு குடிக்கலாம். ஆனால்..... என்றால்.... மகா.... பாவம்.



ரீ.தமிழரசி, பெரியபோரதீவு.

**கேள்வி:–** பித்தா டக்ளஸுக்கும் – கருணாவுக்கும் இடையில் முறுகலா? அதனால் தான் பரந்தன் ராஜனுடன் ஒட்டிக் கொண்டாரோ?

**பதில்:–** அப்படி இல்லை. பரந்தன் ராஜன் இலங்கையிலே காலூன்ற ஆதாரம் ஒன்று தேவை... அதனால் கருணாவை பிடித்துக் கொண்டார்... அவ்வளவுதான்.

ச.ஜென்சன், மல்லாவி.

**கேள்வி:–** கற்பக மரம் – அலாவுதீன் விளக்கு – அரசு வேலை. இந்த மூன்றும் ஒரே சமயத்தில் பித்தனுக்கு கிடைத்தால் என்ன செய்வீர்?

**பதில்:–** அரசு வேலை... வேஸ்ட் வேண்டாம். அலாவூதின் விளக்கை தேய்த்து அதில் வரும் பூதத்தை வைத்து என்னால் பராமரிக்க முடியாது வேண்டவே வேண்டாம். கற்பக மரம் இருந்தால் எதனையும் கேட்டு பெற முடியும் அல்லவா....

து.சாரங்கன், வவுனியா.

கேள்வி:– பித்தன் அண்ணா! சிறியர்கள் ஆகிய நாம் புகைப்பிடிப்பது தவறா?

**பதில்:–** இல்லை.... புகை விடுவதுதான் தவறு....



செ.அஜித்தன், வாழைச்சேனை.

**கேள்வி:–** பித்தா! நாம் ஓட்டுப்போட்டு தெரிவு செய்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்ற பின் ஊர்ப்பக்கம் வருவதேயில்லையே! ஏன் பித்தா?

**பதில்:–** நீங்கள் இடம்பெயர்ந்து – குடிசை வீடுகளில் வாழுவீர்கள். உங்கள் வீடுகளுக்கு தண்ணிவசதி இருக்காது, மின்சார வசதி இருக்காது. நிவாரண உதவிகள் இருக்காது. உங்கள் குடும்பங்கள் கஷ்டத்திலே வாடும். அதனை பார்க்க அவர்களுக்கு நெஞ்சு பொறுக்காது. அழுகை வரும்... இந்த தர்மசங்கடமான நிலைமைகளை தவிர்ப்பதற்காகத்தான் அவர்கள் ஊர்ப்பக்கம் வருவதில்லை.

வ.அழகன், கற்பிட்டி.

**கேள்வி:–** பித்தன் சார்! பெண்கள் குழந்தை பெறும்போது அனுபவிக்கும் பிரசவ் வேதனையை ஆண்களும் அனுபவிக்கும் இயற்கை நியதி ஒன்று உருவாகினால் எப்படி இருக்கும்?

**பதில்:–** பிறப்பு வீதம் குறையும் – அடுத்து இந்த வீட்டு பெண்ணுக்கு குழந்தை பிறக்கும் போது பக்கத்துவீட்டு மாமா பிரசவ வலியால துடிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

பிறகூடி,
மானிப்பாய்.

**கேள்வி:–** அன்பின் முன் பித்துவுக்கு வணக்கம். வீரப்பன் மரணம்பற்றியமர்மம்விளங்கவில்லை. ஆனால் ஜேயும், விஜய்யும் வேறு ஒரு ராஜ்ஜியத்தைக் கைப்பற்றியது போல் பிதற்றுகிறார்களே! உமது அபிப்பிராயம் என்ன?

**பதில்:–** வீரப்பன் கொல்லப்பட்டு விட்டான் என்று ஒருபுறம் குதூகலிக்கிறார்கள். ஆனால் கர்நாடகா மாநிலத்தில் உள்ள தமிழர்கள் தங்களுக்கிருந்த காவல் தெய்வம் கொல்லப்பட்டுவிட்டதே என்று கண்ணீர் விட்டு அழுகிறார்கள். இன்றும் வீரப்பனின் சமாதிக்கு வந்து அழுது தொழுதுவிட்டு செல்கிறார்களாம் – லொறி – பஸ்களில் சாராசாரியாக வீரப்பன் இருக்கும் கர்நாடகாவில் உள்ள கன்னட மொழி பேசும் மக்கள் அங்குள்ள தமிழர்கள் மீது கை வைப்பதில்லை. ஏற்கணவே அங்கேயுள்ள கன்னடக்காரர்கள் தமிழர்களை அடித்து – கொன்று எரித்து அட்டகாசம் பண்ணியபோதெல்லாம் வீரப்பன் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து தமிழர்கள் மீது கைவைத்தால் கன்னடர்கள் கடத்தப்படுவார்கள் என்று அச்சுறுத்தியதால் அவர்கள் கம் என்றிருந்தார்கள். ஆனால் இனி அப்படி எதுவும் நடந்தால் காப்பாற்ற ஆள் இல்லை என்று புலம்புகின்றார்கள். கெட்டிக்காரனின் பொய்யும் புழுகும் எட்டு நாளுக்கு தான் என்பார்கள். கர்நாடகாவில் ஒரு கலவரம் வந்தால் அதற்கு பின்னர்தான் ஜெயினதும் விஜயினதும் வண்ட வாளங்கள்... தண்ட வாளம் ஏறும்.

பெ.சத்தியலீலா, வேரவில்.

**கேள்வி:–** பித்தா! பொதுவாக நிறை கூடிய பெண்களே சாதிக்கிறார்களே! ஏன் பித்தா?

**பதில்:–** இல்லை சாதிக்க தொடங்கும் போது நிறை குறைந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் சாதித்த பின் ஏகத்துக்கு நிறை கூடிவிடுகிறார்கள். இறந்த கால உதாரணம் – ஜெயலலிதா, சந்திரிகா. எதிர் காலம் உதாரணம் – சோனியா, பிரியங்கா.

த.வையவன், மன்னார்.

**கேள்வி:–** பித்தா! திருமணம் முடிக்க உள்ள எனது நண்பனை எப்படி வாழ்த்தலாம்?

**பதில்:–** நண்பா! புடைவையை தோய்க்கும் போது வெறும் தண்ணியிலே போட்டுத் தோய் – உள் பாவாடை, கவுண் என்பவற்றைத் தோய்க்கும் போது சலவைத் தூளைப் போட்டு அரைமணி நேரம் ஊறவைத்து தோய். அப்பம், தோசை என்பவற்றை சுடும்போது கொஞ்சம் முட்டை வெள்ளைக் கருவை போட்டுச் சுடு.... அப்பமும் தோசையும் மெல்லிசாக – மொற மொறப்பாக வரும். அதிகாலையில் வாசலில் கோலம் போடாமல் சமையல் செய்யத் தொடங்காதே. வீட்டிலே விளக்கு ஏற்றும் போது கிழக்கு முகமாக பார்த்து விளக்கேற்று ... மனைவி சொல்கேட்டு நட, எதிர்த்துப் பேசாதே... காலையில் மனைவி



நித்திரையில் எழுவதற்கு முன் நீ – எழு. இரவில் அவள் தூங்கிய பின் தூங்கு – Wish you a happy married life.......

எப்படி வாழ்த்து..... இப்படியே வாழ்த்தும்.

ச.தமயந்தி, வட்டக்கச்சி.

**கேள்வி:–** பித்தா! நமது பெண்களில் பலர் வெளிநாட்டு மாப்பிள்ளைமாரையே எதிர்பார்கிறார்களே! ஏன் வெளிநாட்டு மாப்பிள்ளைமார் என்ன அனுபவசாலிகளா?

**பதில்:–** பின்ன.... வெளிநாட்டு மாப்பிள்ளைகளில் பாதிப்பேரும் எயிட்ஸுடன் தான் மாப்பிள்ளைகளாகின்றனர். அனுபவமில்லாமலா....

சி.கலைவாணி, வெள்ளவத்தை.

**கேள்வி:–** பத்து விமல் வீரவன்ச அடுத்த ஜனாதிபதியானால்?

**பதில்:–** இலங்கையை காப்பாற்ற அந்த கடவுளாலும் முடியாமல் போகும்.

கஜநிதி, மல்லாவி.

கேள்வி:– பித்து மாமா! நான் ஒரு பெண். சந்தேகம் எதுவும் இல்லை. ஆனால் எனக்கு மீசை முளைக்கிறது. மீசை முளைக்காமல் இருக்க என்ன செய்யலாம்?

பதில்:– மீசை முளைக்காமல் இருக்க பச்சை மஞ்சளை நன்றாக அரைத்து நன்றாகப் பூசி வந்தால் மீசை முளைக்காது என்று ஏதோ ஒரு புத்தகத்தில் வாசித்த ஞாபகம் அதற்கும் நிற்காமல் மீசை முளைத்தால்... உம்மை அக்கா என்று கூப்பிடுவோரை



அண்ணா என்றும்; சித்தி என்று கூப்பிடுவோரை சித்தப்பா என்றும் மாற்றிக் கூப்பிடச் சொல்லும். வேறு வழி ஏதுமில்லை.

## பித்தனின் கேள்வி

கேள்வி:– நாடாளுமன்றத்தில் நடந்து முடிந்த நவராத்திரி விழா எமக்கு கூறும் செய்தி என்ன?

## வாசகர்கள் பதில்கள்

பகிரதன் – பூண்டுலோயா.

இந்த நாட்டில் தமிழர்களும், தமிழ்பாரம்பரியங்களும், தமிழ் பண்பாடுகளும் இன்னும் சாகவில்லை என்பது புலப்படுகின்றது.

தாரணி – பதுளை.

அரசியல் முரன்பாடுகள் இருக்கின்ற போதும் அத்தனையையும் மறந்து கலாசாரத்திற்குள்ளும், பண்பாட்டுக்குள்ளும் மனிதர்கள் ஒன்றுபட்டுவிடுவார்கள் என்பது காட்டப்பட்டது?

நீருஜா – வெள்ளவத்தை.

மதத்தால் மொழியால் வேறுபட்டிருந்தாலும் கல்விக்கு அரசி கலைவாணிதான் என்பதை நாடாளுமன்றப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

சுபா – கொட்டகலை.

நாடாளுமன்ற அரசியல் வரலாற்றில் மட்டுமல்ல இலங்கை வரலாற்றிலும் குறிப்பிட்டுக் காட்டப்படவேண்டிய விடயமாகி விட்டது இந்நிகழ்வு. மறந்துவிடமுடியாது.

குவின்ரன் – மீசாலை.

தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு விடிவெள்ளி தமிழனுக்கு வெற்றி நிச்சயம் இது வேதசத்தியம்

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.



ஐந்து தரமான – குறும்பான யதார்த்தமான – பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை நவம்பர் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

**கேள்வி:–** பித்தா! தாயா, தாரமா என்று பட்டிமன்றம் வைப்பார்கள் ஏன் தந்தையா – புருஷனா என்று பட்டிமன்றம் வைப்பதில்லை?



**பதில்:–** தாயும் – தாரமும் – தமிழ் நாட்டு அதிரடிப்படையும் – வீரப்பனும் மாதிரி ஆனால் தந்தையும் – புருஷனும் அப்படியா பாவம் அப்பாவிகள்...

**இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி**

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு – 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸின் எதிர்காலம் என்னவாகும்?

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் மூவர், அமைச்சர்களாக நியமனம் பெற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, அவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றி - எம்.பி. பதவிகளுக்கும் வேட்டு வைப்பதற்கு மு.கா.அரசியல் பீடம் தயாராகிவருகிறது என அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் அறிவித்திருக்கிறார்.

அதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் பதவியில்இருந்து ரவூப் ஹக்கீமை விரட்டியடிக்கப்போவதாக மாற்றுக் குழுவினர் சூளுரைத்துள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களான றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ. மஜீத், அமிரலி ஆகிய மூவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால், அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாக நியமிக்கப்பட்டதன் பின்னணி பற்றி கடந்த வாரம் இப்பகுதியில் விபரித்திருந்தோம்.

இன்று மேற்படி இரு தரப்பினரதும் கருத்துக்கள் மற்றும் அவர்களது எதிர்கால நகர்வுகள் குறித்து ஆராய வேண்டியுள்ளது. ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸா அல்லது சர்ச்சைக்குரிய மூன்று எம்.பிக்களை உள்ளடக்கிய மு.கா.மாற்றுக் குழுவினரா அரசியல் களத்தில் ஜெயிக்கப்போகின்றனர் எனும் முடிவை அறிந்து கொள்வதில் மக்கள் மிகவும் ஆவலாகவே இருக்கின்றனர்.

### ஹக்கீமின் ஆத்திரம்

"முஸ்லிம் சமூகத்தின் நலனில் எவ்விதமான அக்கறையுமின்றி தமது சுய அரசியல் லாபங்களுக்காக, அமைச்சர் பதவிகளைப் பெற்றதன் மூலம் இம் மூன்று எம்.பிக்களும் கட்சிக்கும், சமூகத்துக்கும் துரோகமிழைத்து விட்டனர்" என்று மு.கா. தலைவர் ஹக்கீம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

"முஸ்லிம் சமூகத்தைப் பலவீனப்படுத்துவதற்காக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்டு வருகின்ற சதி நடவடிக்கைகளுக்கு இவர்கள் துணைபோய் விட்டனர்" எனவும் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளார்.

"முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பலத்தை உடைப்பதற்காகவே, முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அமைச்சர் பதவிகளை வழங்கியுள்ளார்" என ஹக்கீம், ஜனாதிபதி மீது பலத்த கண்டனத்தையும் வெளியிட்டிருக்கிறார்.

தனது ஜனாதிபதி பதவிக்காலத்தை நீடிப்பதற்கான சூழ்ச்சியில் வெற்றியீட்டுவதற்கான ஓர் அங்கமாகவே மு.கா.எம்பிக்களை சந்திரிகா அம்மையார் விலை கொடுத்து வாங்கியுள்ளார் எனவும் அற்ப சலுகைகளுக்காக அந்த எம்.பிக்களும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு சோரம் போய்விட்டனர் எனவும் மு.கா. தலைவர் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சிதைத்து - முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பலத்தை இல்லாமல் செய்வதற்கு சந்திரிகா அம்மையார் முனைந்திருப்பதால், அவரைப் பதவியில் நீடிக்க விடாது - வீட்டுக்கு அனுப்பும் போராட்டத்தில் மு.கா. ஈடுபடப்போகிறது என ஹக்கீம் மிகவும் ஆக்ரோஷமாகக் கூறியுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதியிடமிருந்து கிடைக்கப்பெற்ற அற்ப சலுகைகளுக்காக, முஸ்லிம் காங்கிரஸின் கொள்கை, கோட்பாடுகளை மீறி முஸ்லிம் சமூகத்தைக் காட்டிக்கொடுக்க முற்படுகின்ற மூன்று எம்.பிக்கள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதன் மூலம், அவர்களைக் கட்சியிலிருந்து விலக்கி- எம்.பி. பதவிகளைப் பறிப்பதற்கான ஏற்பாடுகளில் மு.கா. அரசியல் பீடம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### தலைமைத்துவமே பொறுப்பு

மு.கா. தலைவர் ஹக்கும், மேலே சொல்லியிருக்கின்ற எல்லா விடயங்களும் சரியே. என்றாலும் அவற்றைச் சொல்கின்ற அருகதை அவருக்கு இல்லை என்பதை அவர் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பலத்தை சிதைப்பதற்கு சந்திரிகா அம்மையார் மேற்கொள்கின்ற சதி நடவடிக்கைகளுக்கு மு.கா. எம்.பிக்களே துணைபோகின்றனர் என்றால், அதற்கான முழுப்பொறுப்பையும் கட்சியின் தலைமைத்துவமே ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

முஸ்லிம்களின் விடுதலைக்காக உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ்,



அந்த நோக்கில் - இலட்சியத்தில் இருந்து விலகி, வெறும் அமைச்சுப் பதவிகளுக்கும், சலுகைகளுக்கும் என பேரின வாதிகளிடம் சரணாகதி அரசியல் நடத்தும் பாரம்பரியத்தை ஏற்படுத்தியதும், புனித குர்ஆன், ஹதீஸ் கோட்பாடுகளின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட அந்த அரசியல் நிறுவனத்தை, சொகுசுகளை அனுபவிக்கும் களமாக மாற்றியதும் மு.கா. தலைமைத்துவம்தான் என்பதை மறுக்க முடியுமா?

முஸ்லிம் சமூகத்தின் பெயரால் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் மேற்கொண்டுவந்த அரசியல் பிழைப்புவாதத்தை, கூட இருந்து கற்றுக்கொண்டவர்கள் இப்போதுதான் தனி அணியாகச் சென்று செய்யமுற்பட்டிருக்கின்றனர் என்பதுதான் யதார்த்தம். அதனால், அந்தப் பழம் புளிக்கும் என்று கூறுவதிலோ, கைசேதப்படுவதிலோ நியாயம் கிடையாது.

மு.கா. தலைவர் ஹக்கீம் வழமையாகக் கூறுவது போன்றே இப்போதும் ஒரு விடயத்தை தெரிவித்துள்ளார். அதாவது மக்களை வீதியில் இறக்கிப் போராடுவது என அவர் கூறி வருகின்றமை கேலிக்குரிய ஒரு விடயமாகி விட்டது.

### கோட்டை விட்டதால் கைசேதம்

முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்துப் போராடும்- முறியடித்தே தீரும்- தலைமைத்துவம் வேள்வித் தீயில் குளிக்கும் என்றெல்லாம் சூளுரைத்துப் பழக்கப்பட்ட ரவூப் ஹக்கீம், இப்போது ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு எதிராக ஐந்து லட்சம் மக்களை வீதியில் இறக்கிப் போராடுவதற்கு மு.கா. தயாராகிறது என்ற அபாய அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.

கடந்த ஐ.தே.க. அரசில் எந்த அமைச்சுப் பதவிகளுக்காக சமூகத்தை மறந்து செயற்பட்டோரோ, அவை இன்று தனது எதிரிகளைச் சென்றடைந்திருக்கின்றன என்பதை நினைத்து- ஆத்திர மேலீட்டால்தான் மு.கா. தலைவர் ஹக்கீம் இவ்வாறு சூடான வார்த்தைகளைப் பாவித்து வருகின்றார்.

அத்துடன் ஹக்கீம் கூறியிருக்கின்ற மற்றொரு விடயம், சம்மந்தப்பட்ட மூன்று எம்.பிக்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதன் மூலம், அவர்களைக் கட்சியிலிருந்து விலக்கி- எம்.பி. பதவிகளைப் பறிப்பது என்பதாகும்.

இது மாத்திரமே கட்சியினால் சட்ட ரீதியாக எடுக்கக்கூடிய ஒரு நடவடிக்கையாகும். இந்த விடயத்தில் கூட முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் கடந்த முறை கோட்டை விட்டதனாலேயே இப்போது கைசேதப்படவேண்டியதாயிற்று.

கட்சியின் கட்டுக்கோப்பை மீறி- தலைமைத்துவத்திற்கு எதிராக செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ. மஜீத், ஹுஸைன் பைலா ஆகியோர் ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து முன்னர் விலக்கப்பட்ட போதிலும் நீதிமன்றம் அதனை நிராகரித்துத் தீர்ப்பளித்தது.

இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கமைவாக இம்மூன்று எம்.பிக்களும், தம்மீதான குற்றப் பத்திரிகைக்கு விளக்கமளிப்பதற்குப் போதிய அவகாசம் வழங்கவில்லை என்பதனாலேயே, அவர்களை விலக்குவது என கட்சி எடுத்த தீர்மானத்தை நீதிமன்றம் செல்லுபடியற்றதாக்கியது. அதனால், அம்மூவரும் தமது எம்.பி. பதவிகளைத் தக்க வைத்துக் கொண்டனர். ஒரு ஒழுக்காற்று நடவடிக்கையைக்கூட முறையாக மேற்கொள்ளாததனாலேயேமுஸ்லிம் காங்கிரஸ் அந்த வழக்கில் தோல்வியடைய நேரிட்டது.

### மு.கா. பின்வாங்குவது ஏன்?

பின்னர் இந்த வழக்குத் தீர்ப்பின் சட்ட நுணுக்கங்களுக்கு ஏற்ப மீண்டும் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி சூட்டோடு சூடாக அப்போது அறிவித்திருந்தார். ஆனால், மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அவ்வாறான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அதற்கான காரணம் கூறப்படவில்லை.

அதனால் ஹுஸைன் பைலா பிரதியமைச்சராகவும், றிஷாத், நஜீப், அமீரலி ஆகிய மூவரும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களாகவும் மிகத்துணிகரமாகப் பதவியற்றுள்ளனர். முஸ்லிம் காங்கிரஸ் முன்னர் கூறியது போன்று அவர்கள் மீது அப்போது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருந்தால் இப்போது அவர்கள் அமைச்சர்களாகியிருக்கமாட்டார்கள்.

மு.கா. தலைவர் ஹக்கீம் தற்போது கூறியுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை என்பதும் நடைமுறைக்கு வருவது சந்தேகமே. ஏனெனில் அவர்கள் அமைச்சர்களாக பதவி ஏற்று இரண்டு வாரங்களுக்கு மேலாகியும், இதுவரை அவர்களுக்கு ஒழுக்காற்று விசாரணைக்கான அழைப்பு விடுக்கப்படவில்லை. அதற்கான ஏற்பாடு செய்யப்படவுமில்லை. இது விடயத்தில் ஏதோ ஒரு சிக்கல் முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கிறது என்பதுதான் உண்மை. அதனால்தான் முஸ்லிம் காங்கிரஸ் பின்வாங்குகிறது.

### ஹக்கீமுக்கு கல்தா

இது ஒருபுறமிருக்க, ரவூப் ஹக்கீமை முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து வெளியேற்றுவோம் என மு.கா. மாற்றுக்குழுவினர் தெரிவித்து வருகின்றனர். அது சட்டரீதியாகவே மேற்கொள்ளப்படும் எனவும் அதற்காக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் அமைச்சர் அமீரலி கூறினார். கட்சி யாப்பை மு.கா.தலைவர் மீறி நடந்துள்ளார் என்பது குறித்து ஒரு வழக்கும், ஹக்கீமினால் பாதிக்கப்பட்ட இரு பெண்களின் வழக்குகளும் அவரை தலைமைத்துவத்திலிருந்து விலக்குவதற்கு ஏதுவாக அமையும் எனவும் அமீரலி உறுதியாகத் தெரிவித்தார்.

**அஸ்லிம் எஸ்.மௌலானா**

அமைச்சர்களாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட றிஷாத், நஜீப், அ... ஆகிய மூவருடன் முஸ்லிம் காங்கி... பிரதித் தலைவர் சட்டத்தரணி என்.எம்.சஹீட், பிரதிச் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ்.ஹமீட், ம... சபைத்தலைவர் இனாமுல்லா ஆகி... உள்ளிட்ட பலர் ஒன்று சேர்ந்து மு... மாற்றுக்குழுவாகச் செயற்படத் தீர்மானித்துள்ளனர். இந்த மாற்றுக்குழுவின் தலைவராக சட்டத்தரணி சஹீட் தெரிவு

(16 ஆம் பக்கம் பார்க்க.

## பொற்கை பூண்ட கொற்கைப் ............

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கீரந்தை தனது வறுமையை நினைந்து பரதேசம் (பிறதேசம்) சென்று பொருள் கொணர்ந்து வாழ்வில் விடிவு தேட விடியற்புறம் புறப்படவிருப்பதையே தன் மனையாளிடம் விநயமாகச் சொன்னான்.

அதுகேட்டு தன் அன்புத் துணைவனைச் சிறிது காலம் பிரிய வேண்டிய கவலையும், யாரின் துணையுமின்றி வேலியில்லாதவீட்டில்தனிமையில்வாழ்வதால் உண்டான அச்சமும் ஒருசேர கீரந்தையின் மனைவிக்குத் துயரம் மேலிட்டு அழுகை உண்டாயிற்று. அழுதாள்; அழுதழுது தன் நிலையைச் சொன்னாள்.

அவ்வேளையிற்றான் குலசேகரப் பாண்டியன் அவ்வீட்டினருகே உற்றுக் கேட்கச் சென்றனன்.

கீரந்தை தன் இனியவளிடம் தான் திரும்பிவரும் வரை அவளுக்கு எவ்வித தீங்கும் நேராதென இன்சொல்லால் தேற்றிக் கொண்டிருந்தான். மனையாளியின் கயல்விழிகளில் ஊற்றெடுத்து மாதுளைக் கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீரையும் துடைத்துவிட்டான். கண்ணீர் ஒழிய வில்லை; பெருகி வழிந்து கொ... ...ந்தது. அழுகை ஓயவில்லை!

அப்போது கீரந்தை சொ... "வளையாத செங்கோலினைய... எங்கள் அரசனின் செங்கோல் நிழ... வேலி) உன்னை என்றும் பாதுகா...ம். அவனது செங்கோலன்றி வேறு ...ம் உண்மையான காவலாயிராது. ...ண அஞ்சாதே; திடம் கொள்; விரைவி... ...தான் திரும்பிவிடுவேன்."

இப்போதுதான் அவளின் அழு...கைக்கான காரணத்தினை அரசன் புரி...ந்தான். தனது செங்கோன்மையில் குடி...கள் கொண்டிருக்கும் மதிப்பையும், ...பிக்கையையும் நினைத்து புளகா...தம் அடைந்தவனாக அரண்மனை ...க்கி நடந்தான்.

அன்றிலிருந்து அரசன் ஒவ்வோ... ...றையும் நகர சோதனைக்காக வலம் ...ும் போது குறிப்பாக கீரந்தையின் வீட்... ...னை நோட்டமிட்டுச் செல்வான். தனி... ...யில் வாடும்கீரந்தையின்மனைவிக்கு கே... ...தும் நேரிடக்கூடாதென்பது அவன் எண்...ணம்.

(தொ...ரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விபரீத ஆசை

நேரம் மாலை 5மணி. வீட்டின் மாடிப் படி வழியாக மெல்லக் கீழே இறங்கி வந்தாள் லின்டா. பகல் முழுவதும் அதிகமாகத் தூங்கியிருந்ததால் கண்கள் இரண்டும் சிவந்து போயிருந்தன. முதல்நாள் இரவு கணவனோடு சண்டை போட்டுக்கொண்டு அதிகமாக வைன் குடித்ததன் காரணமாக உண்டான தலைவலி இன்னும் சரியாக அடங்கவில்லை.

கீழே இறங்கிய லின்டாவால் நிலையாக நிற்கமுடியவில்லை. வீட்டுக்குப் பின்புறம் உள்ள பூந்தோட்டத்துக்குச் சென்றாள். அங்கே போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்த வண்ணம், சிரித்துக் கொண்டிருந்த பூக்களின் பாலும், மறையும் சூரியனின் மங்கிய ஒளியில் கலந்து செம்மஞ்சள் நிறத்தில் தவழ்ந்து கொண்டிருந்த மேகங்களின் பாலும் கவனத்தைச் செலுத்தினாள்.

மனம் இயற்கையின் பால் ஈர்க்கப்பட்டதால் தலைவலி மறைந்து போனது. இவ்வளவு நேரமும் மனதில் நிழலாடிய கணவனுடனான சண்டை பற்றிய எண்ணமும் மறைந்து போனது.

நேரம் ஆறு மணியானது. வானம் கறுக்கத் தொடங்கியது. அந்த நேரம் அவளது கணவனின் மாணவர்களில் ஒருவனான ரீட் அவளது கணவன் ரிச்சட்டைத் தேடி வீட்டுக்கு வந்தான்.

உள்ளே சென்று பார்த்தான். வீடு திறந்து போட்ட நிலையில் கிடந்தது. அங்கு பேராசிரியர் ரிச்சாட்டோ லின்டாவோ இருக்கவில்லை.

வீட்டுக்குப் பின்புறம் வந்தான். அங்கே லின்டா தன்னை மறந்த நிலையில் அமர்ந்திருப்பதைக் கண்டான். அவளை நோக்கி நடந்தான். அவன் வருவதை லின்டா கண்டபோதிலும் எந்த விதமான முகபாவனையும் காண்பிக்காமல் அப்படியே அமர்ந்திருந்தாள்.

ரீட் அவளருகே வந்ததும் ''லின்டா, சேர் இல்லையா?'' என்று கேட்டான். ''அவர் முக்கியமான சந்திப்பு ஒன்றுக்குப் போயிருக்கிறார்.

இரவு பத்து மணிக்குத்தான் வருவார்'' என்றாள் லின்டா.

அவள் பேசும்போது அவளது முகத்தில் தெரிந்த வாட்டத்தையும் சிவந்திருந்த கண்களையும் ரீட் தெளிவாக அவதானித்தான்.

''என்ன நடந்தது? என்பதை ரீட் உணர்ந்து கொண்டான். ''லின்டா இரவு உனக்கும் சேருக்கும் பிரச்சினைபோல'' என்றான்.

''ஆம்'' என்றாள் லிண்டா.

சர்வசாதாரணமாக. ''சரி ஒகே! அதெல்லாம் மறந்திரு. அவர் வரும்வரைக்கும் கொஞ்சம் நேரமாச்சும் சிரிச்சுப் பேசிக்கிட்டிருப்போம்'' என்றான் ரீட்.

''தயவுசெய்து என்னைத் தனியே இருக்கவிடு. உன் பாடம் சம்பந்தமாக சந்தேகங்களை அவர் வந்ததும் தீர்த்துக்கோ! இப்போ இடத்தைக் காலிபண்ணு'' என்றாள் லின்டா.

''எதற்கு லின்டா என்னைப் போய் கோவிக்கிற?'' என்றவாரே அவள் அருகே மிகநெருக்கமாக வந்தமர்ந்த ரீட் அவளை மெதுவாக இழுத்தணைத்து அவளது செவ்விதழைக் கவ்வினான்.

அவ்வளவுதான், அவன்மேல் அப்படியே சாய்ந்து விட்டாள் லின்டா. மனம் முழுவதும் கவலையைத் தேக்கிவைத்திருந்த லின்டாவுக்கு அவனது அணைப்பு இதமாக இருந்தது.

அவனது கைகள் அவளது உடலின் எல்லாப்பாகங்களிலும் புகுந்து விளையாடத் தொடங்கின. இதமாய் இருந்தாள் லின்டா. ஒத்துழைத்தாள். இருவரது உணர்ச்சிகளும் கிளர்ந்தெழ இருவரும் தங்களை மறந்தனர்.

இச்சம்பவம் நடந்து சுமார் பதினைந்து நாட்கள்வரை ரிச்சட் லிண்டாவுடனேயே இருந்தார். முன்பெல்லாம் மூன்று நாளுக்கு ஒருதரம் நான்கு நாளுக்கு ஒருதரம் என்று கல்லூரி விடயமாக வெளியே சென்று வரும் ரிச்சாட் இம்முறை அப்படி எங்குமே செல்லவில்லை.

விதம்விதமான ஆண்களுடன் விதம் விதமான சுவையுடன் அனுபவித்து வரும் லின்டாவுக்கு அந்த 15 நாட்களும் பதினைந்து மாதங்கள் போன்று கழிந்தன.

இந்த நாட்களில் ரிச்சட்டிடம் பாடங்கள் தொடர்பான சந்தேகங்களைத் தீர்க்கவரும் இளம் மாணவர்களைக் கண்டால் மிகவும் ஆசைப்படுவாள். கணவன் இல்லாத நேரத்தில் வரமாட்டார்களா என ஏங்குவாள்.

ஒரு நாள் காலையிலேயே புறப்பட்டு விட்டார் ரிச்சாட். லின்டா தனிமையில் இருந்தாள்.

வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது. கதவைத் திறந்தாள் லின்டா. அங்கே இளைஞன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவனது பெயர் மார்க்கஸ். படிப்புத் தொடர்பான சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள அடிக்கடி வருபவன் தான் மார்க்கஸ்.

உள்ளே அழைத்தாள் லின்டா. கதிரையில் அமர்ந்து கொண்டான் மார்க்கஸ். ''சேர் வர நேரமாகுமா?'' என்றான். ''ஆம்'' என்றாள் லின்டா. அன்றைய பொழுது மகிழ்ச்சியாகவே கழிந்தது.


1977 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி மாலைப் பொழுதில் வீட்டு முற்றத்தில் நின்று கொண்டிருந்தாள் லின்டா. ரிச்சட் வீட்டில் இல்லாததை அறிந்து பீட்டர் என்பவன் லின்டாவைத் தேடி வந்தான். பீட்டர் முன்பும் இங்கு வந்து போய் இருக்கிறான். ஆனால், லிண்டா அவனை வெறுத்து வந்தாள். அன்று லின்டா என்ன நினைத்தாளோ தெரியாது, இரவு 12 மணிக்கு வருமாறு அவனிடம் கூறினாள்.

பீட்டர் வந்து பத்து நிமிடம் கழியுமுன் முற்கதவு தட்டும் சத்தம் கேட்டது. அவனை வீட்டின் ஒரு இடத்தில் மறைத்து வைத்தாள் லின்டா. சிறிது நேரம் சென்றதும் ரிச்சட்டின் சத்தம் கேட்டது.

''நீ எப்படிடா இந்த வீட்டுக்குள்ளே வந்தே. உன்னை விடமாட்டேன்டா'' என ரிச்சட் சத்தம் போடத் தொடங்கினான். சில சாமான்கள் உடையும் சத்தம் கூடவே கேட்டன. அதே நேரம் நலைந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன. வீட்டின் பின் வழியால் மாடியில் இருந்து தப்பித்து ஓடிவிட்டான் பீட்டர்.

மறுநாள் விடிந்ததும் ரிச்சாட் சுட்டுக் கொல்லப்பட்டு கிடக்கும் தகவல் பொலிஸாருக்கு சென்றது. பொலிஸ் விசாரணை நடத்தவும் பொலிஸார் பீட்டரைக் கைது செய்து விசாரணை செய்தனர்.

தெளிவான சாட்சியங்கள் இருப்பதனால் பீட்டர் மறுக்கவில்லை. அதனால் நடந்தவிடயத்தை அப்படியே அவன் பொலிஸாரிடம் கூறினான். பொலிஸார் லின்டாவை விசாரித்தனர். ''பீட்டர் நெடுநாட்களாக எனக்குத் தொல்லை தந்து வந்தான். உனது கணவர் இல்லாத இந்த இரவு நான் வருவேன் நீ எனது ஆசைக்கு இணங்க வேண்டும் என்றான். நான் மறுத்துவிட்டேன். அதே நேரம் எதிர்பாராத விதமாக என கணவரும் வந்து விட்டார். பீட்டர் அவனைச் சுட்டு தப்பிச்சென்றிருக்கலாம்'' என்றாள் லின்டா.




பொலிஸார் தொடர்ந்து உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். ஒரு நாள் திடீரென ஒருவன் லின்டாவின் வீட்டிற்குள்ளே சென்றான்.

உள்ளே சென்றவன் லின்டாவை அழைத்துக்கொண்டு படுக்கையறைப் பக்கமாக வந்து உரையாடிக்கொண்டிருந்தான்.

''லின்டா நீ எதற்கும் பயப்படாதே எல்லாவற்றையும் நான் பார்க்கிறேன். உன் கணவனை நான் கொல்ல வேண்டும் என நினைக்கவில்லை. தொல்லை தந்து வந்த அந்த பீட்டரைச் சுட வந்தேன். கெட்ட நேரம் உன் கணவன் வந்திட்டான். என்னையும் கண்டுவிட்டான். தப்ப வழி இல்லை சுட்டு விட்டேன்'' என்றான்.

அதே நேரம் திடீரெனப் பாய்ந்தனர் பொலிஸார் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

''எனக்கு நீண்டநாட்களாகத் தொல்லை கொடுத்து வந்த பீட்டரை நான் தீர்த்துக் கட்ட விரும்பினேன். கணவன் இல்லாத அந்த நேரத்தைப் பயன்படுத்தி பீட்டரை வரவழைத்தேன். அதேவேளை எனது நீண்ட நாள் கள்ளக்காதலனான இராணுவச் சிப்பாய் ஜேம்ஸிடம் விடயத்தைக் கூறி அவனை துப்பாக்கியுடன் வரச்சொன்னேன்.

''அவர் வருவதற்கு முன் பீட்டர் வந்து விட்டான். கணவன் வந்து விட்டான் எனப் பீட்டரிடம் பொய் கூறி அவனை வீட்டின் ஒரு பகுதியில் மறைத்து வைத்துவிட்டு ஜேம்சைக் கூட்டி வந்தேன். அதே நேரம் ரிச்சாட்டும் வந்துவிட்டான். எம்மிருவரையும் கண்டு விட்டதால் சத்தம் போட்டார். ஜேம்ஸுக்கும் ரிச்சட்டுக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையில் ரிச்சாட் கொல்லப்பட்டார்'' என அவள் கூறினாள்.

வாஷிங்டன் நீதி மன்றம் இருவருக்கும் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

# முஸ்லிம் காங்கிரஸ்......

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

செய்யப்பட்டிருக்கிறார். முன்னர் சர்ச்சைக்குரிய எம்.பிக்கள் மூவரையும் விசாரிப்பதற்கான ஒழுக்காற்றுக்குழுவின் தலைவராகப் பணியாற்றியவரும் இவரே. றிஷாத், நஜீப், ஹுஸைன் பைலா ஆகியோரை 24 மணிநேர அவகாசத்தில் கட்சியைவிட்டு வெளியேற்றுமாறு அரசியல் பீடத்திற்கு பரிந்துரை செய்தவரும் இவர்தான். இப்போது இவரும் தலைமையுடன் முரண்பட்டிருக்கிறார். அதனால் கட்சியிலிருந்து தலைவர் ஹக்கீமுக்கு கல்தா கொடுக்க முற்படும் மாற்றுக்குழுவுக்கு இவர் தலைமை தாங்குவார்.

மு.கா. தலைவர் ஹக்கீம், முஸ்லிம் காங்கிரஸை ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டார் என்பதே [illegible] ஹக்கீம் மீது தெரிவித்துள்ள குற்றச்சாட்டாகும். ஆகையினால் அவரிடம் இருந்து கட்சியை மீட்டெடுக்க வேண்டும் என அவர்கள் கூறிவருகின்றனர். அதற்கான முயற்சிகளை தாம் செய்து வருகின்றனர் எனவும் மாற்றுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸை ஐக்கிய தேசியக் கட்சியிடம் அடகுவைத்து முஸ்லிம் சமூகத்தைக் காட்டிக் கொடுத்தவர் தலைவர் ஹக்கீம் என்பது உண்மைதான். அதற்கு இவர்கள்தான், கூட இருந்து கொண்டு துணைபோனவர்கள் என்பதை மறுக்க முடியுமா? கடந்த ஐ.தே.க. அரசில் ஹக்கீம் அமைச்சுப் பதவிகளை வகித்தபோது, நிறையவே அனுபவித்தவர்கள் தான் இப்போது மாற்றுக்குழுவினராக அவதாரம் எடுத்துள்ளனர். கடந்த பொதுத்தேர்தலின் போது ஐ.தே.கட்சியுடனான உறவை [illegible]மாக இருந்தவர்கள் சட்டதரணி சஹீட், றிஷாத் பதியுதீன் போன்றவர்கள்தான் என்பதை அவர்கள் மறுக்கமுடியாது.

இப்போது முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கட்சியாக இருக்க நேரிட்டதாலேயே பூகம்பம் வெடித்திருக்கிறது. அரசின் பங்காளிக்கட்சியாக இருந்திருந்தால் இந்த அனர்த்தம் நிகழ்ந்திருக்காது.

எது எப்படியோ கட்சி நீதிமன்றம் செல்கிறது. வழக்குப் பேசுவதிலேயே பெருமளவு காலத்தை செலவிட்டு வருகின்ற முஸ்லிம் காங்கிரஸ், வரப்போகும் வழக்குகளில் தப்பிப்பிழைக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். றிஷாத், நஜீப், அமீரலி ஆகியோரின் எம்.பி. பதவிகளுக்கு ஆபத்து வருமோ இல்லையோ? ஹக்கீமின் தலைமைப் பதவிக்கு ஆபத்து வரவேவராது என்பது மட்டும் உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறை மலர்

களுத்துறை சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் கையெழுத்துப் பிரதியான 'சிறைமலர்' நவம்பர் மாத இதழ் வெளிவந்துவிட்டது.

தமிழீழ விடுதலைப் போரில் தமது இன் உயிர்களை ஆகுதியாக்கிய வீர வேங்கைகளை நினைவு கூருமுகமாக – மாவீரர் நாள் ஆரம்பத்தை கௌரவிக்கும் முகமாக – இந்த இதழில் அட்டைப்படம் வரையப்பட்டுள்ளது.

போரிலே வீரச்சாவடைந்த ஒரு மாவீரனது புகழுடலை தமிழ்த் தேசிய தினத்தின் எழுச்சிக் கொடியான புலிக்கொடியினால் போர்த்தி ஒரு போராளி எடுத்துச்செல்வதை தத்துரூவமாக எடுத்துக்காட்டி அழகாக அட்டைப்படம் வரையப்பட்டுள்ளது.

மலரின் அழகுக்கு அழகு செய்வது தேசியத் தலைவரின் சிறப்புச் சிந்தனைகள்.

'இலட்சியம் இருந்தால் நிச்சயம் வெற்றி' என்று ஆரம்பிக்கும் ஆசிரிய தலையங்கம், ''கட்டுண்ட கைகளின் விரல்களிடையே பேனாவைப் பிடிக்கும் சுதந்திரம் உள்ளது. இதனைப் பயன் படுத்துங்கள். கடந்து விட்ட காலத்துக்காக கண்ணீர் சிந்த வேண்டாம். எதிர்காலத்தை நோக்கி முன்னே நகருங்கள்'' என்று தொடர்கிறது.

அடுத்து, தேசியத்தலைவரின் பிறந்ததினம் 26 ஆம் திகதி வருவது குறித்து அனலிடையான் ஒரு கவிதை எழுதி உள்ளார். ''வீரத் தமிழன் எங்கள் தலைவனை வாழ்த்துகின்றோம்'' என்ற தலைப்பில் இக்கவிதை எழுதப்பட்டுள்ளது.



தமிழின்பன் லூக்காஸ் ''சுதந்திர விடியலுக்காக'' என்ற தலைப்பில், ''சிறைகளில் சிந்தித்து, சிந்தித்தே சிதைந்து கிடந்த சிந்தனைகளெல்லாம் சிரித்து மகிழ்ந்திட அந்த ஒரு நிமிடம் போதும்'' என்று சிறப்பு கவிவரி மூலம் தனது உள்ளக்கிடக்கையை வெளிப் படுத்தி இருக்கிறார்.

'மௌன மொழியில் மாவீரர்களுக்கு வீர வணக்கம்' என்ற தலைப்பில் அனலிடையான் எழுதியிருக்கும் சிறப்புக்கட்டுரையில், ''மாவீரர்களே! தமிழீழத்தின் காவலர்களே! உங்களை விசேடமாக நினைவு கூரும் இந் நாளிலே ஒவ்வொரு தமிழனதும் இதயத்தின் ஆழத்தில் வலி, எந்நாளும் உங்கள் நினைவுகள் எங்கள் நினைவில் நிழலாடும். உங்கள் துயில் கலைந்து விடக்கூடாது என்பதற்காகவே உங்கள் உறவுகளாகிய நாங்கள் உங்களது தியாக உணர்வின் சாதனைகளுக்காய் மௌன அஞ்சலி செலுத்துகின்றோம்'' என்று தொடருகிறார்.

கந்தசஷ்டி விரதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகி 18 ஆம் திகதி திருக்கல்யாணத்தோடு நிறைவுபெறுகிறது. இதனை முன்னிட்டு கந்தனின் மகிமையையும் கந்த சஷ்டி விரதத்தின் சிறப்பையும் அறிவானந்தம் ஊடாக உணர்த்துகிறார் இந்து மதகுரு பிரம்மஸ்ரீ சி.ஐ.இரகுபதி சர்மா ஐயா அவர்கள்.

'உண்மைச்சம்பவம்' என்ற பகுதியில் பெரிய நீலாவணை, கல்முனையைப் பிறப்பிடமாக் கொண்ட மகேந்திரன் புவிதரன் என்பவர் தான் வாழ்க்கையில் பட்ட துன்ப துயரங்களை சுயசரிதையாக குறிப்பிடுகிறார்.

'விடுதலை பெற்றுச் சென்றபின்பும் எம்மை மறவாது உதவி புரிய முன்வந்த சிறை உறவுக்கு எமது இதய நன்றிகள்' என்ற பகுதியில் அண்மையில் ஒரு சிறை உறவு எங்கள் எல்லோருக்கும் பண உதவி செய்தார். அந்த உறவுக்கும் எங்களை மறவாத ஏனைய உறவுகளுக்கும் சிறை மலரினூடாக தமிழ் அரசியல் கைதிகள் தமது இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

'நிகழ்ந்தவற்றில் நினைவுக்கு' என்ற பகுதியில் தமிழீழத்தில், ஸ்ரீலங்காவில், சர்வதேசத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

*2000 ஆண்டுகள் பழமைவாய்ந்த சுடுமண் கிணறு வேலணையில் கண்டுபிடிப்பு

* மட்டுச் சிறையில் பத்து விடுதலைப் புலி உறுப்பினர்கள் விடுவிப்பு.

*ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 4 ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு.

*மகசீன் சிறைச்சாலையில் இருந்து பற்குணராசா விடுதலை.

*பதுளை சிறைச்சாலையில் இருந்த புவிதரன் களுத்துறை சிறைச்சாலைக்கு இடமாற்றம்.

*மயில்வாகனம் விஜயரத்தினத்தின் நான்கு வழங்குகளும் தள்ளுபடி.

*ஜெனீவாவில் விடுதலைப்புலிகளின் அரசியல்குழு கூடி மந்திராலோசனை

'நிகழ்தவற்றின் நினைவுக்கு' பகுதியில் மேற்கண்டவை குறிப்பிடத்தக்கவை.

இவற்றைவிட தமிழீழ தேசியத் தலைவர் தொடர்பாக பிரம்மஸ்ரீ சி.ஐ. இரகுபதிசர்மா எழுதியிருக்கும் சிறப்பு ஆக்கம் ஒன்றும் சிறைமலரை மெருகூட்டுகிறது.

இந்த இதழில் சிறைமலர் ஆசிரியர் ரகுவும் ஒரு கவிதை வடித்துளார்.

சிறை மலரின் இறுதியில் வீரவணக்கம் என்றதலைப்பில் உதயன் என்பவரும் கவிதை எழுதியுள்ளார். சிறிய கவிதையானாலும் இது பொருளில் பெரிதுபட்டு நிற்கிறது.

சிறை மலரின் பின் அட்டையில் தமிழீழ வரைபடம் தீட்டப்பட்டு அதற்குள்,

*''ஈழத்தேசம்*
*காத்தவர்களுக்கு*
*ஈகச்சுடர் ஏற்றி*
*இதயக் கண்ணீர் சிந்தி*
*மௌன வணக்கம்*
*செலுத்துகின்றோம்.''*

என்று கவிதை எழுதப்பட்டிருக்கிறது.

இந்த இதழுக்கான படங்களை வரைந்து உதவியவர் ஜெகதீஸ்.

சிறை மலரின் விமர்சனத்தை 'சுடர் ஒளி' வார இதழில் பார்த்து தமது கருத்துகளைத் தெரிவித்த கிளிநொச்சியைச் சேர்ந்த எஸ். என்.குடும்பத்துக்கும் இந்த இதழில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

'உங்கள் பாராட்டுகளும் கருத்துகளும் எமக்குப் புதிய உத்வேகத்தைத் தருகின்றன. தொடர்ந்து விமர்சனத்தைப் படியுங்கள். கருத்துகளைத் தெரிவியுங்கள்' என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

களம் அமைத்துத்தரும் 'சுடர்ஒளி 'வார மலருக்கும் இதழில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைமலர் விமர்சனப்பார்வை
*பிரம்மஸ்ரீ:– சி.ஐ.இரகுபதிசர்மா*
*தமிழ் அரசியல் கைதிகள் பிரிவு*
*களுத்துறைச் சிறைச்சாலை*


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |


## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.05 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங்ஸ்ரீலங்கா |
| 7.30 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை 7.55 அன்பு மடல் | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா 7.55 அன்பு மடல் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஆங்கில காட்டூன் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ஹோலிவூட் மூவி சிறுவர் | அரட்டை அரங்கம் |
| 9.30 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | குட்டி சுட்டி | ஞாயிறு சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சொய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப்பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | களம் | சப்தஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | இசைத் தென்றல் | திரை விமர்சனம் | டாப்10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | இப்படிக்கு நீங்கள் | கோல்டன் மூமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சண்டே சமையல் | மங்கையர் நேரம் | மங்கை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள் (எம்.ரி.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 1.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 2.00 | (காதல் காவியம்) | (அதிரடி) | (நகைச்சுவை) | (கிளசிக்) | (குடும்பம்) | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 2.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்திதிரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 3.00 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 3.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மை டியர் பூதம் | மை டியர் பூதம் | சக்தி திரைப்படம் | விக்கிரமாதித்தன் | சூப்பர் 10 பாடல்கள் |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி–மேன் | கிட்ஸ் சோன் | தமிழ் கார்ட்டூன் | தமிழ் காட்டூன் | விக்கிரமாதித்தன் அன்பு மடல் 4.55 | நினைவுகள் |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் காட்சிகள் | என்றும் கலாட்டா | நகைச்சுவை விருந்து | என்றும் கலாட்டா |
| 5.30 | பாடல்கள் | பாடல்கள் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | நகைச்சுவை விருந்து | என்றும் கலாட்டா |
| 6.00 | களம் | இளைய கானம் | திமி தக்க தா | இளந்தளிர் 5.45 | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கட் | புத்தம் புதிசு | மின்னல் |
| 6.30 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | திமி தக்க தா | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | மியூசிக்கல் | வேலன் |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | மியூசிக்கல் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ருத்ர வீணை | இளைய கானம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிக்காலில் ஏற்படும் நோயும் ஆங்கில, ஆயுர்வேத வைத்தியமும்

கேள்வி:– வயது 35. பெண். எனக்கு குதிப் பகுதியில் தாங்கொண்ணாத வலி ஏற்படுகிறது. காலையில் எழும்பினால் கால் வைத்து நடக்கமுடியாது. நேரம் செல்லச் செல்ல ஓரளவு வலி குறைகின்றது. இது குதிவாதம், ஆங்கில மருத்துவத்தால் குணம் காணமுடியாது என்று ஆயுர்வேத வைத்தியம் செய்ய அறிவுரை கூறுகின்றார்கள். நீங்கள் ஆங்கில வைத்தியரானாலும் பகுத்தறிவாக சரியான ஆலோசனை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் எனது நோய்க்கு ஆலோசனை தர வேண்டுகின்றேன்.


பதில்:– என்மீது தங்களுக்குள்ள நம்பிக்கைக்கு மிக மிக நன்றி. இந்த பூவுலகில் எந்த வைத்திய முறை என்றாலும் எல்லாவற்றினதும் நோக்கமே நோயைக்குணப்படுத்துவது தான். ஆனால் இந்த குணப்படுத்தும் செயலை எந்த வழியில், எந்த முறையில் இந்த வைத்திய முறைகள் நடைமுறைபடுத்துகின்றன என்பதில்தான் வித்தியாசங்களும், வேறுபாடுகளும் உள்ளன. அதனை இங்கு கேள்வி பதில் பகுதியில் விளக்குவதென்றால் நீண்ட பதிலாகிவிடும். விரைவில் இந்த வைத்திய முறைகள் பற்றி விளக்கமாக கட்டுரை ஒன்றை சுடர் ஒளியில் தருகின்றேன்.

உங்கள் நோய்க்கு எந்த சிகிச்சை முறை என்றாலும் ஏதாவது ஒன்றை முழுமையாக செய்யுங்கள். இரண்டு வைத்திய முறைகளை சேர்த்து செய்வது ஒருவேளை குணம் தரலாம். ஆனால் இப்படி சேர்த்து செய்யும் போது ஏற்படும் பக்கவிளைவுகள் சில பாரதூரமானவை.

ஆயுர்வேத மருத்துவத்தில் இம்மாதிரி வாத ரோகங்களுக்கு சாப்பிட சூரண வகைகளும் பாதிக்கப்பட்ட இடங்களில் பூசி ஒத்தடம் கொடுக்க எண்ணெய் வகைகளும் தருவார்கள். செங்கல்லை சூடாக்கி அதன்மேல் ஒரு தடித்த துணியைப்போட்டு தரப்பட்ட எண்ணெய்யை குதிக்காலில் நன்றாக பூசிய பின் சூடாக்கப்பட்ட செங்கல்லின் மேல் குதியை வைத்து ஒத்தடம் போல சூடு காட்டுவது வழக்கமாக பின்பற்றப்படுகிறது. ஆயுர்வேத மருந்துகள் சாப்பிடும் போது – பத்தியம் – உணவில் கடைப்பிடிக்கும் கட்டுப்பாடுகளை கவனமாகப் பின்பற்ற வேண்டும்.

ஆங்கில வைத்திய முறையில் ஆரம்பத்தில் உங்கள் குதிக்கால் 'எக்ஸ்றே' படம் பிடிக்கப்படும். சில வேலைகளில் குதிக்கால் எலும்பு சர்வ தசைகளின் இயக்கத்தால் இழுபட்டு CAL CANEAL SPUR எனப்படும் முள்போன்ற அமைப்பில் நீண்டிருக்கும். இந்த முள்போன்ற அமைப்பில் உராய்வு ஏற்படுவதால் வலி உண்டாகலாம். சாதாரண வலி போக்கும் மாத்திரைகளில் குணம் காணப்படாவிடில் DEPO MEDROL எனப்படும் ஊசி மருந்தை இந்த முள்தோன்றிய இடத்தில் ஏற்றுவதன் மூலம் வலியை குறைத்து நடக்கக்கூடியதாக இருக்கும். குதிக்கால் வலியால் கஷ்டப்படும் அநேகமானோருக்கு குதிக்காலுக்கும் முன் பாதத்தின் எலும்புகளுக்கும் இடையில் தசை நார்கள் வில்லின் நாண்போன்ற அமைப்பில் பாதத்தை வளைத்து வைத்திருக்கும். இந்த வில்போன்ற அமைப்புத்தான் அடி எடுத்து வைத்து நடக்க எமக்கு உதவுகின்றது.

நீண்ட தூரம் நடந்தால், துள்ளிக்குதித்தால், படிகளில் அடிக்கடி ஏறி இறங்கினால் இந்த தசை நார்கள் தாம் பொருத்தியிருக்கும் குதிக்கால் எலும்பில் (CALCANEUM) தாக்கத்தை ஏற்படுத்தி குதிவலியை உருவாக்குகின்றது. இதற்கு வலிநீக்கி மாத்திரைகள் உபயோகிக்கலாம். அப்படியும் குணமில்லை என்றால் DEPO MEDROL ஊசிமருந்துபோடத் தான்வேண்டும்.



கேள்வி:– பெண். வயது 24. கர்ப்பமாக இருக்கின்றேன். கொழும்பில் வசிக்கின்றேன். எனது மருத்துவ நிபுணர் கர்ப்பமாக இருக்கும்போது 2 மாதத்தில் ஒரு SCAN படம் எடுத்தார். இப்பொழுது 5 மாதத்தில் இன்னொரு SCAN செய்யச் சொல்கிறார். இப்படி அடிக்கடி SCAN செய்தால் கருவில் உள்ள குழந்தைக்கு ஏதாவது தீங்கு ஏற்படுமா? கொழும்பில் மட்டும் தான் இப்படி அடிக்கடி SCAN பண்ணச் சொல்கிறார்கள். இலங்கையில் மற்றைய இடங்களில் இப்படி இல்லை என்று எனது உறவினர்கள் கூறுகின்றார்கள். இது ஒரு வியாபார நோக்கில நடைபெறுவதாக எனது உறவினர்கள் சந்தேகிக்கின்றார்கள்?

பதில்:– இன்று ஒரு சில மருத்துவர்கள் மருத்துவத்தைஒரு வியாபார நோக்கில் செய்வதால் நல்ல பல மருத்துவர்களின் சேவைகள் கூட கொச்சைப்படுத்தப்படுகின்றன. சரி உங்கள் விஷயத்துக்குவருவோம். SCAN என்று சொல்லப்படும் பரிசோதனை ULTRA SONIC SCAN என்ற பரிசோதனையின் குறுக்கிய பெயர். இந்த பரிசோதனையின் போது ஒலி அலைகளில் மிகவும் குறுகிய அலை, நீளம் கொண்ட அலை ஆகியவை உபயோகிக்கப்படுகின்றன. கேட்கும் ஒலியைவிட அதி உயர் அதிர்வெண் கொண்ட இந்த ஒலி அலைகளை நம்மால் கேட்கமுடியாது. எனவே ULTRA SOUND என்ற பதத்திற்கு கேளா ஒலி என்றொரு பெயரும் உண்டு. இரவில்பறக்கும் வெளவால், ஒலி அலையை உபயோகித்து – தட்டாமல் முட்டால் எப்படி பறக்கிறது? ஒலி அலைகள் எதிரில் உள்ள பொருட்களில் பட்டு திரும்பி வரும்போது எவ்வளவு தூரத்தில் பொருள் அல்லது தடையிருக்கின்றதுஎன்பதை கணக்கிட்டு வெளவால் தடையை தவிர்த்துபறக்கின்றது. இது போல் இந்த கேளா ஒலி அலைகளை உபயோகத்து வயிற்றினுள் உள்ள உறுப்புகளில் அவை தெறிபட்டு திரும்பும் திறனைக்கொண்டு உறுப்புகளை கணினி மூலம் படமாக்கி கொள்ள முடியும். உடலில் உள்ள உறுப்புகளை எக்ஸ் கதிர் கொண்டு பார்ப்பதிலும் பார்க்க அதாவது எக்ஸ் ரே எடுத்து பார்ப்பதிலும் பார்க்க, விளக்கமான பரிமாணத்தை படம் பிடித்து காட்டவல்லது, இந்த கேளா ஒலி ஸ்கேன். இன்னொரு முக்கியமான விஷயமும் இருகின்றது. எக்ஸ் கதிர்கள்கதிரியக்கம் கொண்டவை. இக்கதிரியக்கம் (RADIATION) ஆபத்தானது. முக்கியமாக கருவிலிருக்கும் குழந்தைக்கு ஆகாதது. ஆனால் ULTRA SCAN இல் உபயோகமாகும் கேளா ஒலி அலைகள் ஆபத்தானவையல்ல. எனவே எத்தனை முறை SCAN எடுத்தாலும் அவை உறுப்புக்களுக்கோ, கருவிலிருக்கும் குழந்தைக்கோ எதுவித பாதிப்பும் தராதவை.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு – 14

இன்று பிரசவவியல் எனப்படும் OBSTETRICS துறையில் SCAN பெரும் பங்கு வகிக்கின்றது. குழந்தை கருவில் உருவாவதிலிருந்து பிறக்கும் வரை அதனுடைய வளர்ச்சி அதனில் ஏற்படும் கோளாறுகள் என்பவற்றை கண்டறிய SCAN துணை போகின்றது. சாதாரணமாக வளர்ந்து வரும் நாடுளில் குறைந்தது இரண்டு SCAN ஆவது கர்ப்ப காலத்தில் எடுக்கப்படுவது வைத்தியருக்கு கர்ப்பிணி பராமரிப்புக்கு பெரும் உதவியாயிருக்கின்றது.

இதனை DATING SCAN, ANOMALY SCAN என்று இருவகையாகப் பிரிப்பார்கள். DATING SCAN – பிரசவத்தை உறுதிப்படுத்தவும், சிசுவளர்ச்சி எத்தனை மாதம் என்பதை அறியவும் உதவும். இது அதிகமாக கருத்தரித்து 4 – 8 வாரங்களில் எடுக்கப்படும். அதன்பின்னர் 20 –24 வாரங்களில் அடுத்த் ANOMALY SCAN எடுக்கப்படும். இந்த SCAN உறுப்புகள் வளர்ச்சி, மற்றும் கோளாறுகளை கண்டறிவதற்காகவும் சிசுப்பரிசோனைக்கும் உதவுகிறது. இந்த இரண்டு SCAN களும் கட்டாயம் எடுக்கப்படவேண்டியவை. இவற்றால்நோயாளிக்கோ, கருவில் உள் சிசுவுக்கோ நிச்சயம் எதுவும் நடக்காது.

சில வைத்தியர்கள் இந்த முக்கியமான SCAN களைத்தவிர மேலும் சில SCAN களை ஒருமாதம், 6 – மாதம், 8 மாதம், பிரசவத்திற்கு முன்னால் என்று எடுப்பது உண்டு. கருத்தரித்த தாயின் உடல் நிலையில் அல்லது சிசுவின் வளர்ச்சியில், ஏதாவது அபாயகரமான மாற்றங்கள் தென்படின் இவ்வாறு பல SCAN களை உங்கள் நன்மைக்காக டாக்டர் செய்வார். எனவே ஒரு சிலரின் தவறான போக்கினால் உங்களுக்கு நன்மை நினைக்கும் டாக்டர்களை சந்தேகிக்காதீர்கள்.

---

# தண்டனை....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

இதுதான் என்னோட பொலிஷி. இந்த காதல், கல்யாணம் இதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. அன்றைக்குக் கூட இதைத்தான் உங்கிட்ட பேச நினைச்சேன். ஆனா, எடுத்தெறிஞ்சி பேசிட்டிங்க. இப்ப என்ன சொல்லுறீங்க... உங்க முடிவு என்ன...?

கனிமொழி சட்டென காரைவிட்டு கீழே இறங்கினாள். "சீ! நீ ஒரு மனுஷனா...? உன்னைப் பற்றிஉயர்வா நினைச்சு ஏமாறப் பார்த்தேன். நல்லவேளை தப்பிச்சேன். பெண்கள்னா உனக்கு அவ்வளவு கேவலமா போயிடுச்சா? இதெல்லாம் வெறும் கொடுக்கல் வாங்கல் வியாபாரம்னு நினைச்சியா? கற்புன்னா எனக்கு என்னன்னு தெரியுமா? காதல்ன்னா என்னன்னு தெரியுமா?.. கொஞ்ச நேர உடம்புச் சூட்டுக்காக நீ பொண்ணுகளை வெறும் போகப் பொருளாக நினைச்சி அவங்களை ஏமாத்தி பாழ்படுத்தினே – கீழ்த்தரமான உன் செயல்களுக்கெல்லாம் ஆண்டவன் நிச்சயமா உனக்கு தண்டனை கொடுத்தே தீருவான்..."

கனிமொழி மழையாக வார்த்தைகளை பொழிந்து விட்டு புயலென அந்த இடத்தைவிட்டு மறைந்தாள். ஜெய்கர் – எதுவும் சொல்லாமல் அந்த இடத்தைவிட்டு காருடன் கடந்து சென்றான்.

மூன்று மாதங்கள் சென்றன. கனிமொழி அன்றைய சம்பவத்துக்குப் பின் ஜெய்கரின் முகத்தைக் கூட பார்க்கவிரும்பவில்லை. ஒரு புழுவை விட கேவலமாக அவனை எடை போட்டதால் அவன் நிழலை மிதிக்கக்கூட அவளுக்கு அருவெறுப்பாக இருந்தது. ஏறக்குறைய ஒரு மாதத்துக்குள் அவள் அந்த இடத்திலிருந்து வேறொரு தூர கிளைக்கு மாற்றம் வாங்கி சென்றுவிட்டாள்.

மேலும் இரண்டு மாதங்கள் சென்றன. அன்றொரு சனிக்கிழமை. ஜெய்கர் வைத்தியசாலையில் இருந்தான். கடந்த சில மாதங்களாக அவன் அடிக்கடி வைத்தியசாலைக்கு போய் வருகிறான். அவன் வைத்தியருக்காக காத்திருந்த போது பின்னால் யாரோ அவன் பெயரைச் சொல்லி அழைப்பதைப் போல இருக்கவே மெதுவாக திருப்பிப் பார்த்தான்.

"அட சங்கரா.... என்ன இந்தப் பக்கம்...?"

"டொக்டர் வேலாயுதத்தைப் பார்க்க வந்தேன். அவர் என்னோட அப்பாவோட கூட்டாளி. அப்பா ஒரு விஷயம் சொல்ல சொன்னார். அதுதான் வந்தேன். ஆமா.. நீ என்ன இந்தப் பக்கம் அதுவும் இந்த டொக்டரை பார்க்க வந்திருக்கே என்ன விஷயம்...?"

ஜெய்கர் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தான்.

"என்ன ஜெய்கர் ஏன் பேசாமல் இருங்கே... ஏதும் பிரச்சினையா? உன்னைப் பார்த்தேரொம்ப நாளாயிடுச்சி. இன்னமும் நீ பழைய மாதிரிதான் இருக்கியா? இல்லை திருந்திட்டியா....?"

ஜெய்கர் நீண்ட பெருமூச்சுடன் அவனைப் பார்த்தான்.

"கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் செஞ்சிக்கிட்டிருக்கேன். தெரிஞ்சே சேத்துல இறங்கிட்டு இப்போ வெளியில வரமுடியாமல் தவிச்சிக்கிட்டிருக்கேன்...."

"என்னப்பா தத்துவமெல்லாம் பேசுறே... வா... அந்த கண்டீனுக்கு போய் பேசுவோம்...."

"இருவரும் அந்த வைத்தியசாலை தேநீர்சாலையை அடைந்தார்கள் –"

"இப்போ சொல்லு என்ன பிரச்சினை...?"

ஜெய்கர் – சற்று நேர மௌனத்திற்குப் பின் பேசத் தொடங்கினான்.

"சங்கர் இவ்வளவு காலமும் என் மனசுக்குள்ள அடக்கி வச்சிருந்ததை உன்கிட்ட இப்போ கொட்டப் போறேன். நான் செஞ்ச பாவத்துக்கு எனக்கு நல்ல தண்டனை கிடைச்டுச்சி. பெண்களை ஏமாற்றி என் தேவைகளுக்காக அவங்களை உபயோகப்படுத்தினேன். தொட்டா சுடும்னு தெரிஞ்சும் நெருப்போட விளையாடினேன். பலபெண்களோட கற்போட விளையாடினேன். அவங்க கண்ணீரோட சாபம் குடுத்தப்போ நான் வாய்விட்டு சிரித்தேன். ஒவ்வொரு முறையும் புதுசு புதுசா பெண்களைத் தேடினேன். காதல் ரசம் சொட்டப்பேசி என் வசமாக்கி கசக்கி வீசினேன்.

என்னோட கைப்பட்ட பல மலர்கள் வாடின. ஆனால், என் தேடல் ஓயவில்லை. இந்த நிலையில்தான் கனிமொழியை சந்திச்சேன். அவளுடைய அழகு என்னை அசத்தியது. கையெடுத்து கும்பிட தோன்றிய அவளின் லட்சுமிகரமான அழகு என்னை படாத பாடுபடுத்தியது.

என் பார்வையால் எத்தனையோ பாவைகளை மயக்கி என் தேவைகளை நிறைவேற்றியிருக்கேன். ஆனால், கனிமொழியிடம் என்னுடைய எந்த வித்தையும் பலனளிக்கவில்லை. அவளின் அந்த பிடிவாதம், ஆண்களை மதிக்காத குணம் என்னைக் கவர்ந்தது. முதல் முறையாக என் மனதில் காதல் உணர்வு தோன்றியது. கனி மொழியை நான் காதலிக்க ஆரம்பித்தேன். அவளைதிருமணம் முடிக்கக்கூட நினைத்தேன். ஆனால், நானொரு கணக்குப் போடவிதி வேறுவிதமாக விளையாட தொடங்கிவிட்டது.

தவறு செய்தவன் தண்டனை அடைவது தானே முறை. குற்றம் செய்த நான் எல்லாவற்றையும் மறைத்துவிட்டு சுற்றம் சூழ இன்னொருத்தியுடன் மணமேடையில் அமர நினைப்பது எந்த விதத்தில் நியாயம்... அதனால்தான் என் தவறுகளை எல்லாம் நினைத்து நினைத்து வருந்தி கண்ணீருடன் காலத்தைக் கழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கடவுள் எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையைக் குடுத்துட்டான்..."

"ஜெய்கர் நீ என்னடா சொல்லுறே...?

"என்னை உண்மையிலேயே நேசிச்ச கனிமொழியின் மனசைநோகடிச்சி என்னை வெறுக்கும்படி செஞ்சிட்டேன். அவ நிச்சயமா நல்ல ஒருத்தனை மணம் செஞ்சி மனநிறைவேட இருப்பா.. எனக்கு உயிர்க் கொல்லி நோயான 'எய்ட்ஸ்' வந்திருக்கிற விஷயம் இப்போதைக்கு எனக்கும் உனக்கும் மட்டும் தான் தெரியும். வீட்டுக்கும் தெரியாது. நான் நிச்சயமாக சாகப்போறேன்னுறது தெரியும். ஆனா, அதுவரைக்கும் இந்த கொடிய நோய் என்னை படாதபாடுபடுத்தப் போகுது. நான் சந்தோஷமா அனுபவிச்ச நாட்களை விட துன்பம் வேதனையோட வாழப் போற நாட்கள்தான் எனக்கு கிடைக்கப் போற கடவுளோட தண்டனை. என்னோட வாழ்க்கை மத்தவங்களுக்கு ஒரு பாடமா இருக்கணும். தெரியாம செய்யிற தவறுகள் மன்னிக்கப்படலாம். ஆனால், தெரிஞ்சே செய்யிற தவறுகளுக்கு மன்னிப்பே கிடையாதுன்னுறதுக்கு என்னுடைய வாழ்க்கை ஒரு நல்ல உதாரணமாயிடுச்சி...."

ஜெய்கர் சொல்லிவிட்டு குலுங்கி குலுங்கி அழ சங்கர் எதுவும் சொல்லமுடியாமல் அதிர்ச்சியுடன் சிலையாக அமர்ந்திருந்தான். சங்கர் சமீபத்தில் மணம் முடித்திருந்தான். ஆனால் ஒரே வீட்டில் பிரிந்து வாழ்கின்றான். தான் ஒருவனை மனதார காதலித்ததாகவும் ஆனால், அவனின் துர்நடத்தையின் காரணமாக பாதியில் கைவிட்டதாகவும் முதலிரவு அறையில் அவள் இதனைக் கூறியபோது அவளின் கற்பின் மேல் சந்தேகப்பட்டு இன்றுவரை ஒரே வீட்டில் பிரிந்தே வாழ்ந்து வாழ்வதாகவும் கூறினான்.

ஆனால், ஜெய்கரின் இப்போதைய நிலை அவனை நிலை தடுமாற வைத்துவிட்டது. அநியாயமாக தன் மனைவியின் மேல் சந்தேகப்பட்டு அவளை துன்புறுத்தியது எவ்வளவு பெரிய தவறு என்பது நன்றாக விளங்கிவிட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக ஜெய்கர் சொன்ன கனிமொழிதான் சங்கரின் மனைவி என்பது அவனை இன்னும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது.

மனம் வருந்தி திருந்திய சங்கர் ஜெய்கருக்கு ஆறுதல் கூறிவிட்டு உடனடியாக தன் மனைவி கனிமொழியை காண்பதற்காக விரைந்தான். வெளியே உயர்ந்து அடர்ந்து வளர்ந்திருந்த அந்த மரத்தில் துணையைக் காணாமல் இவ்வளவு நேரமும் சோககீதம் பாடிக் கொண்டிருந்த குருவி ஒன்று துணையைக் கண்ட சந்தோஷத்தில் சந்தோஷக் கூச்சல் போட்டுக்கொண்டிருந்தது.

*(அனைத்தும் கற்பனை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபாத்தின் மறைவு

பொருளாதாரப் பலம், ஆளணிப்பலம், படைப்பலம் மற்றும் இன்னோரன்ன எந்த வளமாகவோ — பலமாகவோ — இருப்பினும் அவற்றில் பின்தாங்கிக் காணப்படும் பாலஸ்தீனத்தை, ஒரு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்த பல வருடங்கள் போராடி வந்த பெரும் தலைவர் யாஸிர் அரபாத் மறைந்துவிட்டார்.

முஸ்லிம்களின் புனிதமாதமான ரமழானின் 27 ஆவது நாளில் அதிகாலை 3.30 மணிக்கு அரபாத் தன்னுயிரை நீத்தார். இவரின் இழப்பைக் கேட்ட பாலஸ்தீன மக்கள் அதிர்ச்சியிலும், கவலையிலும் ஆழ்ந்து போயினர்.

தனது நாட்டின் சிறந்த ஒரு தலைவரை இழந்துவிட்டோம் என மக்கள் உள்ளிட்ட அல் — பதாஹ் இயக்க அங்கத்தவர்கள் அனைவரும் ஏங்கி, ஒரு நிமிடம் திகைத்துத்தான் போனார்கள்.

மூன்று வாரங்களாக பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸின் புறநகர்ப்பகுதியில் உள்ள இராணுவ மருந்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அரபாத், பாலஸ்தீன விடுதலைக்காகப் போராடியதைப் போல் உயிருக்காகப் போராடித்தான் பார்த்தார். தான்முன்னெடுத்த போராட்டத்தில் வெற்றிகண்டு, தனது மக்களின்



சுதந்திரமான — அமைதியான — சமாதானமான — வாழ்வுக்கு ஒரு விடியலைப் பெற்றுக் கொடுத்து விடுவோம் என்று நம்பினார்.

ஆனால், இறைவன் அதற்கு கால அவகாசம் கொடுக்கவில்லை. போராட்ட வேட்கையை முடிவுக்குக் கொண்டுவர முடியாத ஒரு துர்ப்பாக்கியமான நிலையில் அரபாத்தின் உயிர் பிரிந்துவிட்டது.

## எகிப்தில் பிறந்தார்

24 ஒகஸ்ட் 1924 இல் எகிப்திய தலைநகர் கெய்ரோவில் பிறந்த யாஸிர் அரபாத் தனது 19 ஆவது வயதில் அல் — பதாஹ் என்ற ஓர் இயக்கத்தை பாலஸ்தீன மக்களின் விடுதலைக்குச் குரல் கொடுக்க ஸ்தாபித்தார்; உருவாக்கினார்.

அல் — பதாஹ் இயக்கத்தை ஆரம்பித்ததன் மூலம் அரபாத் பல இன்னல்களையும், கஷ்டங்களையும் அனுபவித்து வந்தார். இஸ்ரேல் அவரை — அவரின் போராட்ட சிந்தனையை — அடியோடு ஒழித்துக்கட்ட பகீரத முயற்சிகளில் ஈடுபட்டது. அத்தனை கஷ்டங்களையும் கடந்து தனது அல் — பதாஹ் இயக்கத்தை ஒருவலுவான இராணுவ முன்னெடுப்புகளை நகர்த்தக்கூடிய வகையில் அரபாத் உருவாக்கினார்.

குறுகிய எட்டு வருடங்களில் அல் — பதாஹ் இயக்கத்தை ஓர் இராணுவ முன்னெடுப்பை திறமையாக நகர்த்தக்கூடிய வகையில் வடிவமைத்தார். தனது மக்களோடு தான் சார்ந்த சமூகத்தின் உரிமைக்காகப் போராடி பாலஸ்தீன மக்கள் ஒவ்வொருவரினதும் மனதில் இடம் பிடித்தார். இதனால், அரபாத்தின் அல் — பதாஹ் இயக்கம் முதன்முறையாக 1956 ஆம் ஆண்டு தனது இராணுவத் தாக்குதலை இஸ்ரேலுக்கெதிராக — இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஆரம்பித்தது.

அன்று முதல் அவர் மரணிக்கும் வரையிலான சுமார் 48 வருடங்கள் இஸ்ரேலின் இன்னல்களுக்கு ஆட்படுத்தப்பட்டு வந்தார். இறுதியாக அரபாத் ரமல்லாஹ்வை விட்டு வெளியே செல்ல முடியாதவாறும் வெளியேறினால் மீண்டும் ரமல்லாஹ் திரும்ப முடியாதவாறும் இஸ்ரேல் அரசால் ஒரு கட்டடத்திற்குள் இரண்டரை வருடம் முடக்கப்பட்டார்.

இவ்வேளையிலேயே அரபாத் நோய்வாய்ப்பட்டார். பின்னர் அவர் பிரான்ஸ் மருத்துமனைக்கு மாற்றப்பட்டு அங்கு மூன்று வாரங்கள் சிகிச்சை பெற்ற பின்னர் உயிர் நீத்தார்.

ரமல்லாஹ்வில் இருந்து கடைசியாக அரபாத் பிரான்ஸ் புறப்பட்டபோது தனது மக்களுக்கு, "மீண்டும் திரும்பிவருவேன்" என்று நம்பிக்கை வார்த்தைகளை வழங்கிச் சென்றார். ஆனால், அவர் உயிருடன் தாயகம் திரும்பவில்லை. வெறும் சடலமாக திரும்பினார்.

இவரின் மரணம் பாலஸ்தீனத்தில் அதிகார வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அடுத்த தலைவராக ஒருவர் வருவார் என்றாலும், இவரின் இடத்தை அவரால் நிரப்பமுடியுமா என்பதுதான் கேள்வி.

ஏனெனில், அரபாத்தால் கட்டிக்காக்கப்பட்ட பாலஸ்தீனத்தை புதிய தலைவர்களும் மிதமாக — நிதானமாக — உலக நாடுகளோடு இசைந்து கட்டிக்காக்க முடியுமா என்பதுதான் பாலஸ்தீன மக்களிடம் எழுந்துள்ள வினா.

உண்மையில் அரபாத்தின் மரணம் பாலஸ்தீன நிலைப்பாட்டில் ஒரு



கேள்விக்குறியை ஏற்படுத்தியிருக்கிறது.

## பாலஸ்தீன விடுதலை அமைப்பு

பதாஹ் இயக்கமும் பாலஸ்தீனத்தில் இயங்கிய ஏனைய ஒரிருகட்சிகளும் இணைந்து பாலஸ்தீனவிடுதலை அமைப்பை உருவாக்கின. அதன் தலைவராக 1969 ஆம் ஆண்டு அரபாத் நியமிக்கப்பட்டார். அன்று முதல் பாலஸ்தீன தலைவராக அவர் மரணிக்கும் வரை இருந்தார்.

இவர் பாலஸ்தீனம் தொடர்பாக 1974 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். சுதந்திரமாக — காத்திரமாக — தான்சார்ந்த சமூகத்தினதும் நாட்டுமக்களினதும் உரிமைக்காக அங்கு தனது கருத்துக்களை முன்வைத்தார்.

இஸ்ரேலுக்கு எதிரான அவரது போராட்டம் உக்கிரமடைந்த காலப்பகுதியில் 1982 ஆம் ஆண்டு லெபனானில் இருந்து அரபாத் இஸ்ரேல் இராணுவத்தால் வெளியேற்றப்பட்டார். பின்பு டுனிஷியா சென்றார்.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற வளைகுடா யுத்தத்தில் வல்லரசு நாடான அமெரிக்காவை எதிர்த்து ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுஸைனுக்கு ஆதரவு தெரிவித்தார். முஸ்லிம் நாடுகளின் தலைவர்கள் அமெரிக்காவின் அடிவருடிகளாக இருந்த போதும்கூட அரபாத் துணிச்சலோடு பாலஸ்தீனப் போராட்டத்தை முன்னெடுத்தவர்.

பாலஸ்தீனத்தின் அமைதிக்காக தனது வாழ்நாளில் பெரும் பகுதியை செலவழித்த அரபாத், 1991 ஆம் ஆண்டே சுஹா என்ற யூதப் பெண்மணியை மணந்தார். இவர் மூலம் அரபாத்துக்கு ஒரு பிள்ளையும் உண்டு. பாலஸ்தீனத்தின் சமாதானத்திற்காகப் போராடிய அரபாத்திற்கு 1994 ஆம் ஆண்டு அமைதிக்கான — சமாதானத்திற்கான — இணைந்தநோபல் பரிசும் கிடைத்திருந்தது.

பாலஸ்தீனத்தை ஒரு வரைபடத்தில் நிர்ணயிக்கப்பட்ட நாடாக — அமைதியான நாடாக — கொண்டுவர வேண்டும் என்ற தனது இலட்சியப்பயணத்தில் — போராட்டப் பயணத்தில் — வெற்றிகண்டே மடியவேண்டும் என்று எண்ணிய அரபாத், அதனை நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலையில் உயிரிழந்தார்.

ஆனாலும் அவரின் போராட்டம் அவர் கொண்டுவந்த பாதையிலே தொடர்ந்துவரும் தலைவர்களாலும் முன்னெடுக்கப்பட்டால் பாலஸ்தீன விடுதலை என்ற அரபாத்தின் கனவு வெகுவிரைவில் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை.

— ஜ. அஸ்கான் —


## விற்பனைக்கு

### பத்தரமுல்ல

பாராளுமன்றத்துக்கு அருகில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட ஆடம்பர சொகுசு வீடு 20.6 பேச்சஸ் 06 படுக்கை அறைகள் இணைந்த குளியலறைகள், கார் தரிப்பிட வசதி, வேலையாட்கள், சாரதிமார் பிரத்தியேக அறை, அலுவலக அறை.

விலை. 26 மில்லியன் ருபா

தொடர்புக்கொள்ளவும்

சன்ஜே 0777 - 430630, 011 - 2635135
ஷான் 0777 - 791805, 011 - 2391840



## பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்ினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லிறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் *(முத்திரை செலவுடன்)* விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

நவம்பர் 21 – 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**

நவம்பர் 06 - 07 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**

நவம்பர் 13 - 18
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399


கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady R
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரிணி அம்ரிதாவின் பரதநாட்டிய அரங்கேற்றம்



செல்வி ஹரிணி அம்ரிதா விஸ்வநாதனின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த வாரம் கொழும்பு பம்பலபபிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த அரங்கேற்ற நிகழ்வுக்கு ஹரிணி அம்ரிதாவின் குருவும், அத்தையுமான திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் குருவான நாட்டிய கலாதிலகம் பத்மஸ்ரீஅடையார் கே.கிருஷ்ணன் கலந்து சிறப்பித்தார்.

திரு.விஸ்வநாதனின் வரவேற்புரையுடன் ஆரம்பித்தது அரங்கேற்ற நிகழ்வு. மங்கள விளக்கேற்றல், தொடர்ந்து பூஜை, குருவணக்கம், சாயிஸ்துதி ஆகியவை இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து அரங்க வந்தனம், அலாரிப்பு, திருப்புகழ் என்பன நடைபெற்றன.

திருப்புகழைத் தொடர்ந்து ஜதீஸ்வரம் சக்கர ஸ்ரீ கிரி என்ற சிவ அஞ்சலி நடனம் இடம்பெற்றது. இந்த நிகழ்வை தொடர்ந்து 'அன்னையை மறவேனடி' என்ற ஹரிணி அம்ரிதாவின் பாட்டியார் திருமதி. விஜயலஷ்சுமியால் உருவாக்கப்பட்ட வர்ணம் நடைபெற்றது. வர்ணத்தை தொடர்ந்து கீர்த்தனம், விஷ்ணு ஸ்லோகமான அரங்கநாதர் துதி இடம் பெற்றன. அடுத்த நிகழ்வாக மீனாட்ஷி கதாம்ருதம் நடனம் நடைபெற்றது.



இந்த நிகழ்வு 1960 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது மீனாட்ஷியாக திருமதி வாசுகி ஜெகதீஸ்வரன் நடித்திருந்தார். இப்பொழுது மீனாட்ஷியாக வாசுகியின் மருமகள் ஹரிணி நடிக்கிறார். இதுவே மீனாட்ஷி கதாம்ருதம் நடன நிகழ்வின் சிறப்பு என்று அறிவிப்பாளர் கமலினி செல்வராஜன் கூறினார்.

அதனைத் தொடர்ந்து, செல்வி ஹரிணி அம்ரிதாவின் நடன அரங்கேற்றத்துக்கென பிரித்தானியாவில் இருந்து வருகை தந்த ஸ்ரீ.யாதவன் யோகானந்தத்தின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பிரதம விருந்தினர் தனது உரையில், செல்வி ஹரிணி அம்ரிதா நடனக்கலையை உலகில் வளர்க்க நடராஜப் பெருமானால் வழங்கப்பட்ட குழந்தை என்றும், தனது மாணவி வாசுகி ஜெகதீஸ்வரனிடம் அம்ரிதா இரண்டரை வயது முதல் நடனம் பயின்றுவருகிறார் என்றும், அம்ரிதா நடனத்தில் மட்டுமல்ல நாடகம், பேச்சு போன்றவற்றிலும் திறமையானவர் என்றும் கூறினார்.

பிரதம விருந்தினரின் உரையை அடுத்து வாத்தியக் கலைஞர்கள் கௌரவிப்பு நடைபெற்றது.

வயலின் – திபாகரன், புல்லாங்குழல் – குமாரலியனகே, தாள தாரங்கம் – ரத்னம் ரட்ணதுரை, கடம் – ஜம்புநாதன், மிருதங்கம்– கார்த்திக். இவர் இந்தியாவில் இருந்து அம்ரிதாவின் அரங்கேற்றத்திற்கு பிரத்தியேகமாக வந்திருந்தார்.

பாடல்களை யாதவன் யோகானந்தம், திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் ஆகியோர் பாடினர். நட்டுவாங்கம் நடன அமைப்பை திருமதி வாசுகி ஜெகதீஸ்வரன் அமைத்திருந்தார்.

அடுத்த நிகழ்வாக தில்லானா, மங்களம் இடம் பெற்றன. ஹரிணி அம்ரிதாவின் சகோதரன் விஜய் அபிநந்தன் நன்றியுரை ஆற்றினார். மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் இனிய மாலைப் பொழுதில் ஓர்நடன அரங்கேற்ற நிகழ்வை பார்த்து மகிழ்ந்த திருப்தி.

சிறிய வயதில் அரங்கேற்றம் கண்ட ஹரிணி அம்ரிதா விஸ்வநாதனுக்கு ஒரு சிறந்த பாராட்டை வழங்கலாம்.

– நிமல்ஷி –



# முருகானந்தனின் இது எங்கள் தேசம் வெளியீட்டு விழா




தமிழ்த் தாய் வாழ்த்தினை செல்வி அகல்யா இசைக்கின்றார். அருகே தலைவர் மற்றும் எழுத்தாளர் ச.முருகானந்தன்

அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில், முன்னாள் தேசியகல்வி நிறுவகப் பணிப்பாளர் சோமசுந்தரம் தலைமையில் ச.முருகானந்தன் எழுதிய 'இது எங்கள் தேசம்' எனும் சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் டொமினிக் ஜீவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். முன்னாள் தொழில் நீதிபதி விமலராஜா, ஐ.ரி. என்.பணிப்பாளர் திருஞானசுந்தரம், அகில இலங்கை இந்துமா மன்றத் தலைவர் கயிலாயபிள்ளை, தமிழ்ச்சங்கத் தலைவர் விஜயரத்தினம், செயலாளர் கந்தசாமி, கொழும்பு இந்துக்கல்லூரி அதிபர் மன்மதராஜன் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

செல்வி அகல்யாவின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் ஆரம்பித்த இந்நிகழ்வில் சிறப்பு அம்சமாக, நாற்பது ஆண்டு காலமாக மல்லிகையை வெளியிட்டு வரும் டொமினிக் ஜீவாவுக்கு, எழுத்தாள தம்பதியினர் முருகானந்தன் – சந்திரகாந்தா ஆகியோர் ஞாபக விருது வழங்கிக் கௌரவித்தனர்.




எழுத்தாளர் டொமினிக் ஜீவாவை அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கைலாசபிள்ளை, விருது வழங்கிக் கௌரவிக்கின்றார்.

இத்தொகுதியின் நயப்புரையை சற்சொரூபவதி நாதனும், மதிப்பீட்டுரையை டாக்டர் ச.முருகானந்தனும் நிகழ்த்தினர்.

நாகயுத்தக் கொடுமைகளின் தரிசனத்தை தனது அனுபவ வாயிலாக ஒளித்.தெறிப்பாக்கி கதைகள் படைத்துள்ள முருகானந்தனின் காலத்தின் பதிவாகவும், சமூகவிழிப்பின் உந்து சக்தியாகவும் இக்கதைத் தொகுதி அமைத்துள்ளதாக இவர்கள் குறிப்பிட்டனர்.



நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்.

சுடர் ஒளியில் வெளியான தலைப்புக் கதையான 'இது எங்கள் தேசம்' சிறையில் வாடும் இளைஞரை உருக்கமாகச் சித்திரித்த 'ஒரு பிடிசோறு' 'இந்த மண்' போன்ற சில கதைகள் உயர்வாசிப்பு அனுபவங்களைத் தருவதுடன் சிறந்த சிறுகதைகளாக மிளிர்ந்து நிற்பதாகவும் குறிப்பிடப்பட்டது.

நூலின் முதற் பிரதியை பிரபல தொழிலதிபர் வாகீசன் பெற்று எழுத்தாளரை ஊக்குவித்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவைச் சிறப்புற ஒழுங்கு செய்த கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை உறுப்பினர்களுக்கும், தொடர்பு சாதனங்களுக்கும், விழாவில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும் டாக்டர் ச.முருகானந்தன் தம்பதியினர் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்ததுடன் விழா இனிது நிறைவேறியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறார் கைவண்ணம்


அ.மோகன் ராஜ், தரம் – 8 c, மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்.


பு.தாரணி, தரம் – 9, ய/அ.ச.சி.ம.வித்தியாலயம். அனலைதீவு.


பி.மொழிச்செல்வம்


ம.சுகந்தினி, 158.ஜெயந்திநகர், கிளிநொச்சி.



யா/மருதங்கேணி இ.த.வித்தியாலயம்.

## படம் சொல்லும் பழமொழி – 12

01



02



03



04



அன்பான தம்பி, தங்கைகளே! மேலே உள்ள படங்கள் ஏதோ ஒரு பழமொழியை நினைவூட்டுகின்றன. அவை என்ன பழமொழிகள் என்பதை கண்டுபிடித்து விடையை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடையை நவம்பர் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதும் 5 பேரின் பெயர் விவரம் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரமாகும். படம் சொல்லும் பழமொழி 09க்கான சரியான விடைகள் வருமாறு.

1. சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது 2. பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது
3. ஆழமறியாமல் காலை விடாதே 4. குரங்கின் கை பூ மாலை போல

சரியான விடையை அனுப்பியவர்களது பெயர் விபரம் வருமாறு:
1.த.தமிழினி, மிட்லண்ட் மாவத்தை, கல்கிசை 2.நியோமிடா, சாம்பல் தீவு, திருகோணமலை. 3. ஸ்ரீதேவி, நோர்வூட். 4. நவநீதன், மட்டக்களப்பு. 5.யோகேஸ்வரன், யாழ்ப்பாணம்.

அனுப்பவேண்டிய முகவரி: *'படங்கள் சொல்லும் பழமொழி',*
*சுடர் ஒளி வாரமலர், 85, ஜயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14*

## யார் அழகானவர்?

ஓரிடத்தில் எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி வந்தன.

ஆனாலும் அவைகளுக்குள் அழகு குறித்து அடிக்கடி விவாதங்கள் எழும். ஒவ்வொன்றும் தன் பெருமையைப் பறைசாற்றும் விதத்தில் பேசும். முயல் மட்டும் மௌனமாக இருக்கும்.

''நம் நால்வரில் நான் தான் மிக அழகு! மனிதர்கள் கூட எங்கள் இனத்திலிருந்துதான் தோன்றியதாகச் சொல்வார்கள்!'' குதித்து குதித்து நடனமாடியபடி சொல்லியது குரங்கு.

''நாங்கள் மனிதர்களின் வீட்டுக்குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந்து வாழ்கிறோம்! எங்களிடம் அழகும், அறிவும் இருக்கிறது. எனவே, நான்தான் அழகு தேவதை!'' என்றது எலி.

''மனிதர்கள் திட்டும் போது குரங்கு முகம், எலி முகம் என்று கூட உங்களைப் பற்றிக் கூறுவார்கள்! நான் சிறிய உருவமாக இருந்தாலும் கிளியின் நிறத்தில் அதைப்போன்றே அழகாக இருக்கிறேன்!'' பெருமிதம் பொங்கக் கூறியது வெட்டுக்கிளி.

''நான் இந்த அழகுப் போட்டிக்கே வரவில்லை!'' முயல் சொல்ல, மூன்றும் சேர்ந்து சிரித்தன. முயல் மெதுவாக அவ்விடத்தை விட்டு அகன்றது.

''என்ன இருந்தாலும் வெள்ளை வெளேரென்று முயல் ஓடி வரும் அழகே தனிதான்!'' குரங்கு சொல்லியது.

''ஆமாம்... ஆமாம்...!'' ஒப்புக் கொண்டது வெட்டுக்கிளி.

''நிறமும், அழகும் மட்டும் இருந்தால் போதுமா? அறிவு, புத்திசாலித்தனம் எல்லாம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அழகியாக ஏற்றுக் கொள்ள முடியும்'' என்றது எலி.

''எனக்கொரு யோசனை தோன்றுகிறது! நமக்குள்ளே ஓர் அழகிப் போட்டி நடத்தினால் என்ன?'' கேட்டது வெட்டுக்கிளி.

''போட்டி நடத்தலாம். ஆனால் நடுவர் யார்?'' சந்தேகம் எழுப்பியது எலி.

''நடுவராக நானிருக்கிறேன்!'' திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. அனைத்தும் மேலே பார்க்க, மரத்தின் மீது ஒரு காகம் இருந்தது.

''நீங்கள் எப்படி?'' ஆச்சரியப்பட்டது குரங்கு.

''நீங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். முயலையும் அழைத்துக்கொண்டு நாளை என் இருப்பிடம் தேடி வாருங்கள். ஆனால், நான் தேர்ந்தெடுப்போரை அழகு ராணியாக அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளவேண்டும்!'' என்று காகம் தன் முகவரி கூறியது.

''அப்படியே செய்கிறோம்..'' அனைத்தும் சேர்ந்து குரல் கொடுத்தன.

மறுநாள் அனைத்தும் அழகுராணிக் கனவில் மிதந்து காகத்தைத் தேடி போய்க் கொண்டு இருந்தன.

அப்பொழுது குருவி ஒன்று வலியால் துடித்துக் கொண்டிருந்தது. அதன் கால்களில் காயம் தெரிந்தது.

''எனக்கு யாராவது ஒருவர் உதவி செய்யுங்களேன். ஒரு சிறுவன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப்படுத்தி விட்டான்!'' குருவி பலவீனம் காரணமாக உதவி கேட்டது.

''நாங்கள் அழகிப் போட்டிக்குப் போய் கொண்டு இருக்கிறோம். அபசகுனமாக பேசாதே!'' கடுமையாகக் கூறியது குரங்கு.

குருவியைப் பார்த்த எலியும், வெட்டுக்கிளியும் முகம் திருப்பிச் சென்று விட்டன. முயல்; குருவி அருகே தயங்கி நின்றது. பின்னர் அவசர அவசரமாக மருந்து தேடிக் காலில் வைத்துவிட்டு அழகிப்போட்டிக்குச் சென்றது. அழகிப் போட்டி தொடங்கியது. குறித்த நேரத்திற்கு முயல் மட்டும் செல்லவில்லை. மீதி மூன்றும் மனசுக்குள் மகிழத் தொடங்கின.

''அழகுக்கும் அறிவுக்கும் மதிப்பெண் போட்டு விட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப்பெண்கள் கொடுப்பேன்! இதற்குத்தான் அதிக மதிப்பெண்கள் ஒதுக்கி இருக்கிறேன்!'' காகம் கூறியதும்; குருவிக்கு உதவாத மூன்றும்



ஒன்றையொன்று பார்த்துக்கொண்டன.

அப்பொழுது அரக்கப் பரக்க முயல் ஓடி வந்தது.

''முயல்தான் அழகு ராணி! இதை அழகு ராணியாகத் தேர்வு செய்வதற்காக நான் பெருமைப் படுகிறேன்! குருவி என் நண்பன்தான்! ஒரு ஆபத்திலிருந்து முயல் காப்பற்றியதாக சற்று முன்பு தான் குருவி கூறியது. அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றது பற்றியும் சொல்லி வருத்தப்பட்டது! உதவும் நல்ல மனசு உள்ளவர்கள்தான் உண்மையில் அழகானவர்கள்!'' காகம் கூறியதும், எலி, வெட்டுக்கிளி, குரங்கு ஆகிய மூன்றும் வெட்கத்தால் தலையைக் குனிந்து கொண்டன.

## தெரிந்து கொள்ள...


* மனிதர்களைத் தவிர வேறு எந்த உயிரினத்திற்கும் வராத நோய் தொழுநோய்.
* உலகிலேயே கடலுக்கு அடியில் நீளமான சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ள நாடு ஜப்பான்.
* அணு ஆயுதங்களால் கூட அழிக்க முடியாத உயிரினம் கரப்பான் பூச்சி.
* தினமும் ஆற்றில் நீந்தி பாடசாலைக்குச் சென்றவர் லால் பகதூர் சாஸ்திரி.
* தினமும் 30 கி.மீ நடந்து பாடசாலை சென்றவர் ஆபிரகாம் லிங்கன்.

*கலா, அலுத்மாவத்தை, கொழும்பு – 15*

அருகில் உள்ள படத்தில் பூனைகள் அதிகமாக உள்ளன போல் தெரிகிறதா? அவற்றைவிட இதற்குள் 10 காய்கறிகள் உள்ளன? எங்கே கண்டுபிடியுங்கள் பார்ப்போம்.

கண்டுபிடிக்க முடியாதவர்கள் விடைகளைப் பாருங்கள்.

அன்னாசி, தேங்காய், தேசிக்காய், பூசணி, வாழைப்பழம், பப்பாசி, கறிமிளகாய், கரட், வெள்ளைப்பூடு.



## பொது அறிவு

1) கோப்பியை அதிகமாக உற்பத்தி செய்யம் நாடு – பிரேசில்
2) மாம்பழத்தின் தாயகம் – இந்தியா
3) உலகின் மிகப் பழமையான மரம் – பேரீச்சை
4) தக்காளியை முதலில் பயிர் செய்த நாடு – அயர்லாந்து
5) உலகிலேயே அப்பிள் அதிகமாக விளையும் நாடு – ரஷ்யா.

## தேசிய விளையாட்டு

* இந்தியா – ஹொக்கி, கபடி
* அமெரிக்கா – பேஸ்போல்
* கனடா – ஹொக்கி
* ஸ்பெயின் – ஜல்லிக்கட்டு
* ஜப்பான் – கராத்தே
* ஸ்கொட்லாந்து – கால்பந்து
* அவுஸ்திரேலியா – கிரிக்கெட்
* பாகிஸ்தான் – ஹொக்கி
* இலங்கை – எல்லே
* துருக்கி – மல்யுத்தம்.

*றஸீன் றஸ்பீன்,*
*றஹ்மத் புரம்.*

## வேண்டியவை

* மதிக்க வேண்டியது
  முதுமையானோர், மார்க்கம், சட்டம்.
* நேசிக்க வேண்டியது
  நேர்மை, தூய்மை, உழைப்பு.
* போற்ற வேண்டியது
  அறிவு, அழகு, அன்பு.
* பேணி வளர்க்க வேண்டியது
  திருப்தி, தைரியம், மகிழ்ச்சி.
* தவிர்க்க வேண்டியது
  புகைத்தல், மது அருந்துதல், சூதாட்டம்.
* அடக்க வேண்டியது
  நா, வேதனை, கோபம்.
* ஆதரிக்க வேண்டியது
  வாக்குறுதி, நட்பு, பண்பு.
* விரும்பவேண்டியது
  கருணை, நற்குணம், மனஅமைதி.
* வெறுக்க வேண்டியது
  பெருமை, அநீதி, வாக்குமீறல்.
* எதிர்கொள்ள வேண்டியது
  கவலை, மரணம், பயணம்.

*ந.கஜநிதி,*
*மு/மல்லாவி மத்திய கல்லூரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பப்பை புற்றுநோய்

ENDOMETRIAL CANCER என்பது பெண்களின் கர்ப்பப்பையைப் பாதிக்கும் புற்றுநோய் ஆகும். 50 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இதனால் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். இந்த ஆபத்தைச் சமாளிக்க பெரும்பாலும் கர்ப்பப்பை அகற்றப்படும் அல்லது கதிரியக்க சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியுமா என்று கண்டுபிடிக்க பரிசோதனைகள் நடத்தப்படும். அதுவும் நோய் ஆரம்ப கட்ட நிலையில் இருந்தால்தான் இதைப் பற்றி யோசிப்பார்கள். இல்லையென்றால் கர்ப்பப்பையை அகற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்நிலையில் சமீபத்தில் நடந்த ஒரு ஆய்வில் உயரம், எடை மற்றும் உடற்பயிற்சி ஆகியவை கர்ப்பப்பைப் புற்றுநோயை நிர்ணயிப்பதில் முக்கியமான காரணிகளாக இருப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர். இதில் உயரத்தை எம்மால் ஒன்றும் செய்துவிட முடியாது. அது ஆண்டவனின் கொடை. ஆனால், உடல் எடை மற்றும் உடற்பயிற்சி ஆகிய விடயங்களை எம்மால் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். ஒழுங்கான உடற்பயிற்சி செய்யும் பெண்களுக்கு கர்ப்பப்பைச் சவ்வு புற்றுநோய் எட்டிப் பார்க்காது. மாறாக போதிய உடல் இயக்கமின்றி, இருந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்தால் ஆபத்து அதிகம் என்பதை உணர வேண்டும். ஒழுங்கான உடற்பயிற்சி மூலம் உடல் எடை மற்றும் உடல் இயக்கம் ஆகியவை மேம்படுத்தப்படும். உடல் எடை குறைவதால் இதய நோய்கள் மற்றும் நீரிழிவு நோய் போன்ற ஆபத்தான நோய்களையும் சமாளிக்கலாம் என்பதை நினைவில் கொள்வது சிறந்தது.

# சமையல் குறிப்பு

### *சோயா பீன்ஸ் சான்விட்ஜ்*

***தேவையான பொருட்கள்***

| | |
|---|---|
| பாண் | —5,6 துண்டுகள் |
| அரை கப் சோயாபீன்ஸ் | |
| அரை கப் தக்காளி சோஸ் | |
| ஒரு கரண்டி சோளன் மா | |
| வெண்ணெய் | — 1/2 கரண்டி |
| வெங்காயம் | —1 |
| இஞ்சி | — 1/2 கரண்டி |
| சீஸ் | — ஒரு கட்டி |
| உப்பு | — தேவையான அளவு |
| மிளகுப்பொடி | — தேவையான அளவு. |

***செய்முறை***

சோயாபீன்ஸைக் கழுவி இரவே நீரில் ஊறப் போடவும். வெண்ணெயைச் சூடாக்கி வெங்காயம் மற்றும் இஞ்சியைப் போட்டு பொன்னிறமாக வதக்கவும். வேக வைத்த சோயா பீன்ஸை கலக்கவும். பின்பு தக்காளி சோஸை ஊற்றி நன்றாகக் கிளறவும். பின்பு இந்தக் கலவை சுண்டியதும் அடுப்பிலிருந்து இறக்கி வைக்கவும். பாணின் ஓரங்களை வெட்டி எடுத்து அதன்மேல் சிறிது வெண்ணெய் தடவி ஒரு கரண்டி சோயாபீன்ஸ் கலவையை வைக்கவும். அதன் மேல் துருவிய சீஸ் தூவி 2 நிமிடம் அவனில் வைத்து சீஸ் உருகியதும் சுடச்சுட எடுத்துப் பரிமாறவும்.

### *சிவப்பு நிறக் காய்கறிகள் புற்றுநோயைத் தடுக்கும்.*

அசைவ உணவுகள் சாப்பிடுவதால் ஏற்படும் உடல் உபாதைகளைத் தடுக்க தற்போது நிறையப் பேர் சைவ உணவுக்கு மாறிவருகிறார்கள்.

சைவ உணவான காய்கறிகளைச் சாப்பிட்டுவதால், உடல் எளிதில் ஜீரண சக்தியைப் பெறுகிறது. மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கப்படுகிறது.

மேலும், காய்கறி உணவுகள் மருத்துவத் தன்மையை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது. சில காய்கறிகளில் உள்ள சிவப்பு நிறம் நல்ல ஞாபக சக்தியை அளிப்பதுடன், இதயநோய், புற்றுநோய் வராமலும் காக்கிறது என்று மருத்துவ ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

தக்காளியில் லைகோபெனே என்ற சிவப்பு நிறம் அதிக அளவில் உள்ளது. எனவே, தொடர்ந்து தக்காளி சாப்பிட்டு வருபவர்களுக்கு புற்றுநோய் ஏற்படும் என்ற பயமே வேண்டாம் என்கிறது அந்த மருத்துவக் கண்டுபிடிப்பு.

வெள்ளை நிறத்தில் உள்ள காய்கறிகளைச் சாப்பிட்டு வருபவர்களையும் அவ்வளவு எளிதில் புற்றுநோய் தாக்கிவிடாது என்றும் அந்த ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

# குறைவான தூக்கத்தை ஏற்படுத்தும் மாலைநேரப்பயிற்சி

நாம் செய்யும் உடற்பயிற்சி எமக்கு நல்ல சுறுசுறுப்பை ஏற்படுத்தித் தருவதோடு மட்டுமல்லாமல், ஆரோக்கியமான உடலைப் பேணவும் உதவுகிறது. முறையான உடற்பயிற்சியில் ஈடுபட்டு வருவோரை எளிதில் எந்த நோயும் தாக்காது என்று கூறப்படுகிறது.

காலை, மாலை என இரண்டு நேரம் செய்யப்படும் பயிற்சிகளினால் வெவ்வேறு பலன்கள் ஏற்படுகின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அதாவது, காலையில் செய்யப்படும் உடற்பயிற்சி உடல் நலத்தை நன்கு பாதுகாக்கிறது எனவும், மாலை நேரத்தில் கடைப்பிடிக்கப் படும் உடற்பயிற்சியினால் தூக்கக் குறைவு ஏற்படுகிறது எனவும் கண்டுபிடிப்பில் தெரிய வந்துள்ளது.

# இளம்பெண்களுக்கு எது உண்மையான அழகு?



'இளம்பெண்களுக்கு எது உண்மையான அழகு?' இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது அத்தனை சுலபமல்ல. காரணம் அழகு என்றாலே பெண்கள் தங்களின் புற அழகை பெரும்பாலும் எண்ணிக்கொள்கிறார்கள்.

இன்னும் சிலர் புற அழகு எப்படி இருந்தாலென்ன மனம் அழகாக இருந்தால் போதும் என்று சொல்வதும் உண்டு. ஆனால், இன்றைய காலத்துக்கு இந்த இரண்டு விளக்கங்களுமே ஒத்து வராது.

ஆம்! துணிச்சல் மிக்க பெண்கள் தான் இன்று உலகின் அழகான பெண்கள். துணிச்சல் தான் ஒரு பெண்ணை இந்த உலகின் முன் தனித்தன்மையோடு காட்டுகிறது. எப்போதுமே ஏதாவது ஒன்றை நினைத்து மனம் பயந்துகொண்டே இருந்தால் முகம் தெளிவாக இருக்குமா? பயந்த மனதால் எதையும் தைரியமாகப் பேச முடியாது. நான்கு பேர் மத்தியில் நடந்து செல்லக்கூடத் தயக்கமாக இருக்கும். எதையோ சொல்ல வந்து, எதையோ உளறிக்கொட்டி வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளும் பெண்கள் இன்னமும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அதனால் தான் மகாகவி பாரதி, பெண்களை வர்ணிக்கும்போது நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை என்று துணிச்சலை முன்னிறுத்திப் பாடிவைத்தார்.

எதையும் தீர ஆராய்ந்து முடிவெடுக்கும் திறன், தீமையைக் கண்டு விலகி இருக்கும் மனம், தவறு என்று தெரிந்தால் அதைத் தயங்காமல் ஏற்றுக்கொள்ளும் பக்குவம், எப்படிப்பட்ட நெருக்கடிகளையும் புன்னகையோடு சமாளிக்கும் தீரம் இவை அனைத்தின் கலவையாகக் காட்சி தருகிறாள் ஒரு தைரியசாலிப் பெண்.

இந்தத் துணிச்சலைப் பெற விரும்பும் ஒவ்வொரு பெண்ணும் முதலில் மூடத்தனத்திலிருந்து விடுபட வேண்டும். இதை ஒவ்வொரு பெண்ணும் புரிந்து கொண்டாலும் கூட இந்த சமூகத்துக்குப் பயந்து தொடர்ந்து அந்தப் பழமைவாதத்திலேயே ஊறிப் போகும் நிலையும் காணப்படுகிறது. இந்த நிலை முதலில் மாற வேண்டும். பெண்ணுக்கு முதல் தன்மீது, தன் திறமைகள் மீது முழு நம்பிக்கை வர வேண்டும். தன்னம்பிக்கை இல்லாத பெண்கள் தான் பயந்துபோய் மற்றவரைச் சார்ந்து வாழ விரும்புவார்கள். அதற்காகக் குடும்பம் என்ற பந்தத்தை மீறி—கணவன் குழந்தைகளை எல்லாம் உதறித்தள்ளிவிட்டு வாழ வேண்டும் என்று யாரும் அர்த்தப்படுத்திக்கொள்ளக் கூடாது.

குடும்ப அமைப்பில் முழு நம்பிக்கை கொண்டு அதே அளவு நம்பிக்கையை தன் மீது வைத்திருக்கும் பெண்கள் தான் இந்த சமூகத்தின் குல விளக்குகள்.




## இவ்வார பொன்மொழி

*போதும் என்ற மன நிறைவுக்கு நிகரான செல்வம் எதுவும் இல்லை. பொறுமைக்குச் சமமான பண்பும் எதுவும் இல்லை.*

# பெண்ணின் அழகை குறைப்பவை எவை?

இயற்கை பெண்களுக்கு வழங்கிய ஒரு வரப்பிரசாதம் தான் அழகு. இது இறைவன் கொடுத்த வரம். அழகு என்பது தெய்வத் தன்மை வாய்ந்தது. மங்களகரமானது. அழகாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படாதவள் பெண்ணாகவே இருக்க மாட்டாள்.

ஒவ்வொரு பெண்ணும் தான் அழகியா அல்லது அழகற்றவளா என்று பார்ப்பதில்லை. எப்படியாவது தன்னை அலங்காரப்படுத்திக்கொண்டாவது அழகாக வாழ வேண்டும் என்று தான் விரும்புகிறாள். எல்லா வகையான உணவிலும் ஏதோ ஒரு சுவை கலந்திருப்பதைப் போன்று எல்லோரும் ஏதோ ஒரு வகையில் அழகாகவே இருக்கிறார்கள். அழகு என்பது பொதுச் சொத்து. அதில் சிலர் மிகுந்த வனப்புடையவர்களாக விளங்குவார்கள். பலர் குறைந்த வனப்புடையவர்களாக விளங்குவார்கள். அவ்வளவு தான்.

ஒரு பெண் அழகாக இல்லாமல் இருப்பதற்கும் அல்லது அழகு குறைந்து போவதற்கும் பல்வேறு காரணங்கள் உள்ளன.

அதிகப்படியான வேலைப்பளு, திட்டமிடப்படாத உணவு முறை, கட்டுப்பாடற்ற செயல்கள், சோம்பல், பகல் தூக்கம், பிரசவம், குழந்தைகளால் ஏற்படக்கூடிய கவலைகள், எதிர்கால அச்சம், நோய்கள், தான் அழகாக இல்லையே என்ற கவலை...

இப்படிப் பல்வேறு காரணங்கள் ஒரு பெண்ணின் அழகைக் குறைக்கப் போதுமானவை என்று சுருக்கமாகச் சொல்லிவிடலாம்.

அதுபோல் நோய் நொடி இல்லாமல் ஆரோக்கியமாகத் திகழும் உடம்பே சிறந்த அழகுடையது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

எனவே, முதலில் மேற்கூறப்பட்ட எந்த ஒரு விடயத்துக்கும் நாம் அடிமைப்படாது ஒழுங்கான உணவுப் பழக்கத்தையும் கடைப்பிடித்து வாழ்ந்தோமானால் எம்மை விட அழகானவர் வேறு யார்தான் இருக்க முடியும்?

# ஒல்லியாக இருப்பதும் அழகு தான் ஆனால்...?

ஒல்லியாக இருப்பதும் அழகு தான். ஆனால், அதற்கும் ஓர் அளவு உண்டு அல்லவா? ஒடிந்து விழுகிற மாதிரியான ஒல்லியான உடம்பை யாருமே விரும்ப மாட்டார்கள். அதனால் உடலைக் கொஞ்சம் அதிகமாக்க ஆசைப்படுபவர்களுக்கு இதோ அருமையான சில ஆலோசனைகள்.

தினசரி நீங்கள் சாப்பிடும் உணவில் கலோரியின் அளவை அதிகரியுங்கள். உதாரணத்துக்கு 500 கலோரிகள் தினம் அதிகம் சேர்த்துக்கொள்ளுங்கள்.

உணவுக்குப்பிறகான இடைவேளைகளில் நொறுக்குத் தீனிகளைச் சாப்பிடுங்கள். ஒரே வாரத்தில் மாற்றத்தை உணர்வீர்கள்.

கொழுப்பு நீக்கப்படாத பால், எண்ணெய் போன்றவற்றை அதிகம் சமையலில் பயன்படுத்துங்கள்.

சாப்பிடுவதற்கு முன்பாகத் தண்ணீர் குடிப்பதைத் தவிருங்கள். அது உங்களை முழு வயிற்றுக்கும் சாப்பிடாமல் செய்துவிடும். வயிறு நிரம்பிய உணர்வையும் ஏற்படுத்திவிடும்.

கலோரி குறைவான உணவுகளை உண்பதைக் குறைத்துக்கொள்ளுங்கள். எந்தெந்த உணவில் என்ன கலோரிகள் உள்ளன எனத் தெரிந்து வைத்துக்கொண்டு அதிக கலோரி உள்ளவற்றைச் சாப்பிடுங்கள்.

சாப்பிடும்போது குளிர்பானங்கள் குடிப்பது, அடிக்கடி தேநீர் குடிப்பது போன்றவற்றைத் தவிருங்கள்.

நொறுக்குத் தீனிகளைச் சாப்பிட்டால் இரண்டு மணி நேரம் கழித்துச் சாப்பிடுங்கள். அப்போது தான் பசி எடுக்கும். படுக்கச் செல்வதற்கு முன்பாக அவற்றைச் சாப்பிடுவது கட்டாயம் எடையைக் கூட்டும்.

நீங்கள் குறைவாகவே சாப்பிட்டுப் பழகியவரா? அப்படியானால் சாப்பிடும் இடைவெளிகளை அதாவது மூன்று முறைகள் என்று இருப்பதை ஆறு முறைகள் என்று பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். ஒரே நேரத்தில் முழுச்சாப்பாடு சாப்பிடுவதற்குப் பதிலாக, அடிக்கடி குறைவாகச் சாப்பிடலாம்.

உடற்பயிற்சி செய்தால் உள்ள எடையும் போய்விடுமே என்று நினைத்துக்கொண்டு அதைத் தவிர்க்காதீர்கள். குண்டானவர்களுக்குத்தான் உடற்பயிற்சி என்றில்லை. ஒல்லியானவர்களும் செய்யலாம். அது அவர்களது உடல் சரியான வடிவத்தில் இருக்க உதவும். ஆனால் அளவுக்கதிகமாக, உடல் களைப்படைகிற வரை உடற்பயிற்சி செய்ய வேண்டாம்.

இரவு படுக்கச் செல்வதற்கு முன்பாக வெதுவெதுப்பான பாலில் சிறிது தேன் கலந்து குடிக்கலாம்.

காலையிலும், மாலையிலும் ஐந்தைந்து பாதாம் பருப்பு, முந்திரிப்பருப்பு, பேரீச்சம் பழம் போன்றவற்றைச் சாப்பிடுவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.



பத்து மணி நேரம் தூங்குங்கள். பகலில் நேரம் கிடைக்கிற போது தூங்குவதும் சிறந்தது.

என்ன சகோதரிகளே, இத்தனை நாளும் நீங்கள் தேடிய கேள்விக்குப் பதில் கிடைத்து விட்டதா? முயற்சி செய்யுங்கள். பலன் கிடைக்காமலா போகும்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கண்ணோட்டம்



இரா. புத்திரசிகாமணி

# அமைச்சுப் பதவியுடன் அடிப்பட்டுப் போனதா கொத்மலை எதிரலை?

ஐயோ பாவம்; இந்த அப்பாவிகளான தோட்டத் தொழிலாளர்கள். இந்த மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகள் தோட்டத் தொழிலாளர்களை எப்படி எல்லாம் காட்டிக் கொடுக்க முடியுமோ, சுரண்டி ஒட்டாண்டிகளாக்க முடியுமோ அவ்வளவையும் செய்து அவர்களை கொத்தடிமைகளாக்கி வைத்துள்ளனர். வெத்துவேட்டுகளான இந்த தொழிற்சங்க அரசியல் வாதிகளின் வேஷம் படிப்படியாக வெளுக்க ஆரம்பித்துவிட்டது. முகமூடிகள் கிழிபடும் நேரம் வந்துவிட்டது.

தினக்கூலிக்கு திண்டாடிக்கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களை எப்படி எல்லாம் ஆட்டிப்படைக்கின்றனர்? இவர்களிடம் தன்மானம், மனிதத்தன்மை, மனச்சாட்சி என்பன சிறிது கூட இல்லையா?

குளுருட்டப்பட்ட காரில் வந்து விஸ்கி அடிக்கின்றார்கள் தலைவர்கள். ஆனால், ஏமாந்த சோனகிரிகளான தோட்டத் தொழிலாளர்கள் மல்லிகைப்பூ சந்தியில் கொட்டும் பனியில், வாட்டும் குளிரில் சத்தியாக்கிரகம் செய்கின்றனர். ஆனால், மேடையில் சவடாலாக அமர்ந்திருந்த தலைவர்கள் ஒருவர்மாறி ஒருவராக எங்கே செல்கின்றனர். சில மணி நேரங்களின் பின் வந்து அமர்கின்றனர். என்ன ஒற்றுமை பாருங்கள். இந்த தலைவர்கள் செல்லும் போதெல்லாம் சத்தியாக்கிரகத்தை முன்னின்று நடத்துவதாகக் கூறிக் கொண்டு அங்கும் இங்கும் நிற்கும் நாரிமணிகளும் திடீர் திடீர் என காணாமல் போய்விடுவார்கள். இது எல்லாம் மல்லிகைப்பூ சந்தி சிரித்த கதை.

இப்போதும் என்ன செய்தார்கள்? மேல் கொத்மலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் முழு மலையகமுமே அழிந்து விடும் கடைசிவரை அதனை செயற்படுத்த விடமாட்டோம் என்று தலவாக்கலையில் தோட்டத்தொழிலாளர்களையும், சமூக அமைப்புக்களையும் திரட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். மேல் கொத்மலைத் திட்டத்தை எங்களுடைய பிணத்தின் மீதேறித்தான் செய்ய முடியும் என்று வாய் கிழியக்கத்தினார்கள்.

ஏதோ நாட்டின் மீது அக்கறை கொண்டவர்கள் போல் நாடகமாடினார்கள்.

கண்டி மல்வத்தை பீடாதிபதியையும் தள்ளாத வயதில் இழுத்துவந்து தேசப்பற்று இயக்கம் போல் வேஷம் போட்டனர்.

அந்த பெரியார் செய்த புண்ணியம் இந்த வேடதாரிகளின் வேஷம் கலைவதையும், பதவிக்காக பல்டி அடிப்பதையும் பார்க்கும் முன், இந்த துரோகக் கும்பலின் முகத்தில் விழிக்கக் கூடாது என்று அவர் முந்திக் கொண்டு மேல் உலகம் போய்ச் சேர்ந்து விட்டார்.

தோட்டத்தொழிலாளர்களை ஒரு மாஉருண்டைபோல் பாவித்து அவர்களை வேண்டிய, வேண்டிய பக்கம் எல்லாம் திருப்பிவிடும் இந்தத் தலைவர்கள் கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் அவர்களுடைய கழுத்தில் பெரிய சுருக்குக்கயிற்றை மாட்டி வைத்து விட்டனர். ஏழைத் தொழிலாளர்களின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

எப்படித்தான் இந்த தலைவர்களுக்கு அவ்வளவு துணிச்சல் வருகின்றதோ தெரியவில்லை. வெட்கம், மானம், ரோசம் இவற்றை எல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டனர்.

கூட்டு ஒப்பந்தம் என்று தொண்டுமாட்டிய சூடு ஆறுவதற்குமுன் இப்பொழுது மற்றும் ஒரு துரோகத்தை செய்துவிட்டனர்.

எந்த மேல் கொத்மலைத் திட்டத்தைக் காட்டிக்காட்டி ஏமாற்றிவத்தனரோ அந்த கொத்மலைத்திட்டத்தையே அடகுவைத்து விட்டனர்.

*மலையகத்தின் எழில் கெட்டுவிடும்.

*இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு விடும்.

*தொழிலாளர்களின் வீடுகளும், வீட்டுத் தோட்டங்களும் நீரில் மூழ்கிவிடும்.

* நீர்வீழ்ச்சிகள் இல்லாமல் போய்விடும்.

*மண்சரிவுகள் ஏற்படும்.

*கட்டுமானப் பணிகளுக்காக சிங்களவர்கள் திட்டமிட்டு குடியேற்றப்படுவார்கள்.

*நுவரெலியா மாவட்டத்தின் தமிழர் பெரும்பான்மை குறைக்கப்படும்.

*அடிக்கடி இன மோதல்கள் ஏற்படும்.

இந்த பேராபத்திலிருந்து எமது மலையகத்தைப் பாதுகாப்பதற்காகவே மேல் கொத்மலைத் திட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்துகின்றோம் என்றனர்.

என்ன கொடுமை? எச்சில் எலும்புத் துண்டுபோல் ஒரு அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்தவுடன் ஒரு நீர்வீழ்ச்சியை மறைத்து மேல்கொத்மலைத் திட்டத்தை செய்யலாம் என்று தலையாட்டிவிட்டனர்.

'சபாநாயகரை தூக்கி எறியவும் வரவு – செலவுத்திட்டத்தை ஆதரிக்கவும் கைதூக்குகின்றோம். இன்னும் ஒரு எலும்புத்துண்டை தூக்கிப்போடுங்கள்' என்று காவடி எடுக்கின்றனர்.

அதுவும் கிடைத்துவிட்டால் ஒரு நீர் வீழ்ச்சி என்ன, நுவரெலியா மாவட்டத்தில் காணப்படும் எல்லா வீழ்ச்சிகளையும் மறித்து அணைகட்டுக்கள். முழு மலையகமே நீரில் மூழ்கினாலும் பாதகம் இல்லை. அமைச்சர் பதவிக்காக நாம் எல்லா ஆதரவையும் தருவோம் என்று காலடியில் மண்டியிட்டு விடுவார்கள்.

ஐயா! உங்களுக்கு அமைச்சர் பதவிகள் கிடைத்துவிட்டால் மண்சரிவுகள் ஏற்படாதா? இயற்கை அழகுகெடாதா? சூழல் மாசடையாதா? திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெறாதா? மலையகத் தமிழர்களின் தனித்துவம் அழிக்கப்படாதா?

உங்களுக்கு மனச்சாட்சியே இல்லையா? காட்டிக்கொடுக்கும் குணம் உங்கள் உடன் பிறப்பா? உங்களுடைய லட்சியமும், நோக்கமும் அமைச்சு அதிகாரங்கள் மட்டும் தானா? ஏன் இப்படி போலிவேடம் போடுகின்றீர்கள்.

தொழிலாளர்களை அடகு வைத்து உங்களுடைய வயிற்றை நிறைத்துக் கொள்வது சரியா? இது பச்சைத்துரோகம் ஆகாதா?

நீங்கள்தான் தொழிலாளர்களுக்காக உழைப்பவர்களா? அவர்களை முன்வைத்து போராட்டம் நடத்தி உங்களுடைய சொகுசு வாழ்க்கையை அமைத்துக்கொண்டீர்கள். இது நியாயமா?

இதுதான் உங்களுடைய மக்கள் சேவை. தொழிலாளர்தொண்டு. தொழிற்சங்க இலட்சியம். தொழிலாளர்களைப் பணயம்வைத்து உங்கள் குடும்பங்களைப் பாதுகாக்கின்றீர்கள். ஏழை அழுத கண்ணீர் கூரியவாளை விடக்கொடியது. தொழிலாளர்களின் சாபம் உங்களை சும்மா விடாது. உங்களை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது. கடைசி நேரத்திலாவது ஏதாவது நன்மை செய்யப்பாருங்கள்.

(சராகோகுலன்)



## டேஸ்ட்கடை தணிகாசலம்

# எச்சில் துண்டு எலும்புக்காக வக்காலத்து வாங்கலாமா?

''என்னதான் இருந்தாலும் இந்த மனிதனின் புத்தி இப்படிப் போகக்கூடாது. தன்காலில் சுயமாக நிற்கும் தைரியம் இல்லை. சொறிநாயின் காதில் ஒட்டிக் கொண்ட உண்ணி மாதிரி எச்சில் துண்டு எலும்புக்காக வக்காலத்து வாங்குகிறார். எண்ணி ஒரு எட்டுநூறு பேரு கூட சங்கத்தில இல்ல. பெரும் போட் பலகையை மாட்டிக்கொண்டு ஒட்டு மெத்தையில தண்ணி அடிச்சிக்கிட்டு காலம் இடத்துராங்க. இவுங்க எல்லாம் வெட்கம் கெட்டத்தனமா அறிக்கை வேற உடுராங்க தூத்தெரிக்க'' என்று கூறிக் கொண்டு காறித்துப்பினார் கந்தசாமித் தலைவர்.

அவ்வழியே வந்த தணிகாசலம் அண்ணன் ''என்ன தலைவரே காலையிலேயே ரொம்பச் சூடாக இருக்கீங்க போல'' என்றார்.

''யாரு தணி அண்ணனா? வணக்கம் அண்ணே! இந்த அநியாய கொடுமையைப் பாருங்க'' என்று கையில் இருந்த பேப்பரை நீட்டினார் கந்தசாமித் தலைவர்.

''அப்படி என்னங்க தலைவரே போட்டு இருக்கு?'' என்று பேப்பரை வாங்கிப் புரட்டினார் தணி அண்ணன்.

அந்த நேரத்தில திலகாவும் இன்னும் ஒரு பேப்பருடன் அங்கு வந்து சேர்ந்துவிட்டாள்.

''அப்படி ஒன்றும் விசேஷம் இல்லீங்க அண்ணே! ஆனால், புரட்சித் தலைவர்கள், போராட்டக்காரர்கள் என்று சிவப்புச்சட்டையை மாட்டிக்கொண்டு அட்டனில் வீரம் பேசிக் கொண்டு திரிந்த மனிதன் ஒப்பாரி வைத்துள்ளார். அதைத்தான் அப்படியே போட்டு இருக்காங்க'' என்று பொரிந்து தள்ளினாள் திலகா.

''ஓகோ அதை சொல்லுரீங்களா, நானும் காலையிலேயே வாசித்துவிட்டேன். அதைப் பற்றிக் கதைக்கத் தான் வந்தேன். நல்ல வேளை நீங்களும் அதைப்பார்த்து விட்டீர்கள். எனது வேலை சற்றுக்குறைந்து விட்டது'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணே! இந்த ஆளுக்கு எவ்வளவு சம்பளம் கேட்டு இருக்காங்க? எப்படிப் பேசி இருக்காங்க? என்ன தொகை கிடைக்கும்? அது போதுமானதா? என்பது கூடத்தெரியாது''

''அண்ணே இந்த ஆளு கடைசியா ஒப்பம் போட்ட பேச்சு மேசைக்குக் கூட போகல'' என்றாள் திலாகா.

''எந்த முகத்தோடு அம்மா இந்த ஆளு போவாரு. உருப்படியான அங்கத்தினர்கள் இல்ல. அங்கேயும், இங்கேயும் ஐந்தும் பத்துமா ஆள் வைத்துக்கொண்டு பெயர்ப்பலகைகளை மட்டும் மாட்டி வைத்துக்கொண்டிருக்கும் 15 குட்டிச்சங்கங்களை ஒட்டுமொத்தமா கூட்டுக்கமிட்டி என்று தம்பட்டம் அடிக்கிறாங்க. இந்த வெட்கக்கேட்டை வெளியே சொன்னாலே மானம் போய்விடும்'' என்றார் கந்தசாமித்தலைவர்.

''இது உண்மைதான். இவுங்களின்ட ஒரு சங்கமாவது தனித்து செயற்பட முடியுமா? சும்மா சொறிநாயின் காதில் ஒட்டிக் கொண்டிருக்கும் உண்ணிகள் போல் தொழி



லாளர்களின் இரத்தத்தை உறிஞ்சி உயிர் வாழ்கின்றார்கள்'' என்று சாடினாள் திலகா.

''நீங்க ஆத்திரப்படுவதும் நியாயம்தான். இந்த சிவப்புச் சட்டைக்காரருக்கு கடைசி வரை எதுவுமே தெரியாது. இவரு விலாங்கு மாதிரி நடிச்சிக்கிட்டு இருந்தார். பட்ஜெட் மூலம் சம்பளம் கிடைக்கும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், இவருடைய கூட்[illegible] ஒப்பந்தம் பண்ணிப்புட்டாங்க. கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று தூக்கத்தில் இருந்து எழுந்து எதை எதையோ உளறுகின்றார்'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணே! உங்களுக்கு விஷயம் தெரியல. பெரியவுங்க அடிச்ச பல கோடியில பிச்சைபோல சில எலும்புத்துண்டுகளை வீசி இருப்பாங்க. பசியில குந்திக்கிட்டு இருந்தமனிசன் அதைக் கவ்விக்கொண்டு தன் பங்குக்கு அறிக்கை விட்டுப்புட்டார்'' எனப் போட்டு உடைந்தாள் திலகா.

''இன்னும் ஒரு சங்கதியைப் பார்த்தீங்களா? இவுங்க மூனு பேருமட்டும்தான் தோட்டத் தொழிலாளர்களின் ஏகத்தலைவர்கள் போலவும், மற்றவர்கள் ஏதும் முடியாவர்கள் போலவும் இல்ல மீசையைய முறுக்குகின்றார்'' என்றார் கந்தசாமித் தலைவர்.

''தலைவரே! அதில ஒருதிருத்தம். அந்த ஆளுக்குத்தான் மீசையும் இல்லை, ரோசமும் இல்லை. அப்புறம் எப்படி ஆம்பிளை மாதிரி மீசையை முறுக்குவார்?'' என்றார் தணி அண்ணன்.

எல்லோரும் கொள்ளென சிரித்துவிட்டனர்.

''இது சிரிக்கிற விசயம் இல்ல. எச்சிலைக் காறி அவர்கள் முகத்தில துப்பவேண்டிய நேரம் வந்தாச்சி. இவுங்க கடைசிவரை என்ன சொன்னாங்க? பேச்சுவார்த்தை முறிஞ்சி போச்சு, எதிர்பார்த்தது கிடைக்கவில்லை, பட்ஜெட் மூலம் மத்தவுங்களுக்கு அரசாங்கம் எவ்வளவு சம்பளம் கொடுக்கப் போறாங்க என்று பார்த்து அதன் பின்னர் தான் மீண்டும் பேசுவோம், ஒப்பந்தம் செய்வோம் என்றார்கள். கடைசியில இப்படிக்காலை வாரி விட்டுப்புட்டாங்க'' என ஆதங்கப்பட்டாள் திலகா.

''திலகா! இந்த மும்மூர்த்திகளின் அவசரத்திலும் காரணம் இல்லாமல் இல்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க வேணும் என்று அமைச்சர்களும் கூறிவிட்டார்கள். தோட்டத் தொழிற்சாலைகளை தீவைத்துக் கொளுத்திய ஜே.வி.பியினரும் கூட சம்பள உயர்வு கொடுத்தே ஆகவேண்டும் என்கின்றனர். இப்படியான நிலையில் வாழ்க்கைச் செலவுப்புள்ளி ஒன்றுக்கு நாலு சதம் என்ற அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வு வழங்க வேண்டும் என அரசாங்கமும் அறிவிக்கும் திட்டம் ஒன்றும் இருந்ததாம். அப்படின்னா சம்பள நிர்ணயசபை மூலம் சம்பள உயர்வு வழங்கப்பட இருந்ததாம்'' என்றார தணி அண்ணன்.

''நீங்க சொல்றதைப் பார்த்தால் இப்படி ஒரு நன்மை கிடைத்துவிட்டால் இந்த ஒப்பந்தக்காரரும், மூர்த்திகளும் மூக்குடைபட்டுப் போவார்கள் என்ற பயத்தால் தோட்டத் துரைமாரின் மடியைப் பிடித்து இவர்களின் பொக்கட்டை நிறைத்துக்கொண்டு, தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலத்துக்கு சாவுமணி அடித்துவிட்டார்கள் என்று சொல்லுங்கள். அதுதான் உண்மை; இல்லியா?'' என்றாள் திலகா.

சரியாச் சொன்னீங்க. இவ்வளவையும் செய்துவிட்டு இப்ப எச்சில் எலும்புத் துண்டுக்காக சிவப்புச்சட்டைக்காரர் இப்படி தன்மானம் இழந்து வக்காலத்து வாங்குவது தான் வயிற்றெரிச்சலாக இருக்கு. இப்படியான சந்தர்ப்பவாதிகளுக்கு தொழிலாளர்கள்தான் பாடம் படிப்பிக்கவேண்டும். '' என்று கூறி தணி அண்ணன் விடைபெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசியம் படைத்தவர் ஷரபோவாதான்!

# புகழ்கிறார் செரீனா வில்லியம்ஸ்

கவர்ச்சியில் அவ்வளவாக பெயர் எடுக்காவிட்டாலும் எப்படி கவர்ச்சி காட்ட வேண்டும் எனத் தெரிந்தவர்தான் அமெரிக்க டெனிஸ் மங்கை செரீனா வில்லியம்ஸ்.

உடலை ஒட்டியவாறு இறுக்கமாக மேல் சட்டை, காலணி போன்றவற்றை அணிந்து டெனிஸ் உலகை கலக்கி வருபவர்தான் கறுப்புத்தங்கம் செரீனா வில்லியம்ஸ்.

ஆனால், டெனிஸ் உலகில் கவர்ச்சியான வீராங்கனை என்று யாரை அவர் கூறுகிறார் தெரியுமா? ரஷ்ய இளம் மங்கை மரியா ஷரபோவாவைத்தான்.

இக்கருத்தை புன்னகையுடன் கூறி, பலரது நெஞ்சங்களையும் கவர்ந்துள்ளார் செரீனா.



கவர்ச்சி மங்கை, கவர்ச்சிக் கன்னி, கவர்ச்சி அரசி என பலவாறு கூறப்பட்டு வரும் ஷரவோவா, கடந்த ஜூலையில் டெனிஸ் உலகின் முக்கிய பட்டமான 'விம்பிள்டனை' வென்றார். இதையடுத்து, அவர் மேலும் புகழ் பெறத் தொடங்கினார்.

இந்நிலையில் தற்போது நடைபெற்று வரும் உலகடெனிஸ் சங்கப்போட்டியை முன்னிட்டு, போட்டி அமைப்பாளர்கள் லாஸ் ஏஞ்சல்ஸில் 17 வயதாகும் ஷரபோவாவின் படத்தை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். அப்படத்தை ரசித்த செரீனா – "அச்சிடப்பட்டுள்ள ஷரபோவாவின் அழகிய கால்களை நேசிக்கிறேன். உண்மையிலேயே அவரது கால்கள் மிகவும் வசியம் கொண்டவை. வியாபார நோக்கில் இந்தப் படத்தை அமைப்பாளர்கள் அச்சிடவில்லை என்றாலும் இது மிகவும் வசீகரமான படம். இது மாதிரியான படங்களை ஒருவேளை நான் வெறுத்தாலும், கவர்ச்சி தான் வருமானம் ஈட்டித்தருகிறது'' எனக் கூறினார் செரீனா.

போட்டி அமைப்பாளர் ஜான் அரிக்ஸ் இது குறித்து கூறுகையில்:–

"படத்தில் யாரை அச்சிடலாம் என்பதற்கு 8 பேர் போட்டியிட்டனர். அதில் ஷரபோவாவே முதலிடம் பிடித்தார்'' என்றார்.

சமீபத்தில் நடந்து முடிந்த அமெரிக்கப் பகிரங்க டெனிஸில் உடலை இறுக்கியவாறான ஆடையை அணிந்து செரீனா விளையாடினார். இதன் மூலம் பலரது கவனத்தையும் அவர் ஈர்த்தார். தவிர, தோலால் வடிவமைக்கப்பட்ட ஆடையையும் அணிந்து விளையாடி புகழ் பெற்றார். இதற்கிடையே அடுத்த ஆண்டு அணிவதற்குரிய ஆடைகளையும் அவர் இப்போதே தயார் செய்து வருகிறாராம். ஆயினும் தன்னைவிட வசியம் படைத்தவர் ஷரபோவாதான் என அடக்கமாக கூறுகிறார் செரீனா.



ஷரபோவா

ரீனா.


## வீட்டு யுத்தம் தீர்ந்தது!

வளரும் சிறுபிள்ளைகளின் பசியைத் தூண்டும் சுவைமிக்க விட்டமின் பானம்

**Hungry Plus**

வளரும் பருவத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு உணவு ஊட்டப்போனால் வீடே யுத்த களமாகும். அதட்டியும் மிரட்டியும் அடித்தும் அவர்களுக்கு உணவு ஊட்டுவதற்குள் தாய்மாருக்கு உயிரே போய்விடும்...ஆனால், இப்போது இப் பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரம் கிடைத்துள்ளது. அதுதான், ஹங்ரி பிளஸ் விட்டமின் பானம்!

சிறுவர்களின் பசியுணர்வை இயற்கையாகத் தூண்டும் லைசின் மற்றும் விட்டமின்கள் அடங்கிய சுவைமிக்க ஹங்ரி பிளஸ் பானம், பிள்ளைகளின் நலமான வாழ்வுக்கும் உற்ற துணையாகும்.




**ஹங்ரி பிளஸ்**
பசியைத் தூண்டும்...

இப்போது, முன்னணி மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் வாங்கலாம்.

Marketed by: ARKEM PHARMACEUTICALS Tel: 011- 2470290



குறைவான விலை! நிறைவான சாரங்கள்!!

ALCO ACCURATE 007 BRAND

ALCO JAGUAR 009 BRAND

இப்போது இலங்கையில்

OCEANICK IMPEX

Tel: 2327168, 2336720 2384131



## உங்களின் இக்காலத் தெரிவுக்கேற்ப மீண்டும் புதுப்பொலிவுடன் வன்னியில்...

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.



# குமரகுரு

KUMARAKURU TEXTILE & FANCY HOUSE
Yarl Road, Kilinochchi.
Tel: 021 228 5971

புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ் சாலை, கிளிநொச்சி








யாழ் பயணத்தின் போது
ரோல்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 0112372952/3 Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை


noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 நவ. 14 ஆம் திகதி வெளியிடப்பட்டது.